வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 ஆவணி திங்கள் 27-ம் நாள் (11—9—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.அவ். 19 | இதழ் 15

இலங்கையின்

# மேற்குக் கரையோரப் பகுதிகளுக்கு பிரதேச சுயாட்சி கோர ஆலோசனை

## சிங்கள வாலிபர் தூது கோஷ்டி

## தமிழரசுத் தலைவர்களைச் சந்தித்தது

### மொழி, மத சிறுபான்மையினரின் உரிமைகள் உதாசீனம் பற்றிக் கவலை

### இவற்றைப் பாதுகாக்க சமஷ்டியே வழி என்பதை உணர்ந்தனராம்

(சுதந்திரன் நிருபர்)

நீர்கொழும்பு—ஜாஎல பிரதேசத்தைச் சேர்ந்த 12 வாலிபர்களைக் கொண்ட ஒரு விசேஷ தூதுக் கோஷ்டியினர் கடந்த வாரம் தமிழரசுக் கட்சித் தலைவர்களைக் கொழும்பில் சந்தித்து இலங்கையின் மேல்பாகக் கரையோரப் பிரதேசத்துக்கும் சமஷ்டி ஆட்சி கோரும் ஒரு இயக்கத்தைத் தாங்கள் ஆரம்பிக்கப் போவதாகத் தெரிவித்தனர்.

மொழியாலோ, மதத்தாலோ சிறுபான்மையினராக உள்ள சமூகத்தினரின் நல்லுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஒரே வழி சமஷ்டி ஆட்சிமுறைதான் என்பதைத் தாங்கள் இப்போதுதான் உணருவதாகவும், அத்தகைய இயக்கத்துக்குத் தமிழரசுக்கட்சி தார்மீக ஆதரவு அளிக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரினார்.

நீர்கொழும்பு — ஜாஎல பிரதேசத்திலிருந்து வந்த இந்தத் தூது கோஷ்டியினர் முதலில் தமிழரசுத் தந்தை திரு எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தையும் பின்னர் பொதுக் காரியதரிசி டாக்டர் ஈ. எம். வி. நாகநாதனையும் சந்தித்தனர்.

அவர்கள் அத்தனை பேரும் சிங்கள வாலிபர்கள்; ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சார்ந்தவர்கள். அவர்களில் பலர் நீர்கொழும்பு—ஜாஎல பிரதேசத்து ஐக்கிய தேசியக் கட்சியின் வாலிப இயக்க உறுப்பினர் என்றும் தெரிவித்தனர்.

**காலம் வந்தது! கண்கள் திறந்தன!!**

அரசாங்கம் மத சுதந்திரத்தில் தலையிட்டுப் பாடசாலைகளைக் கைப்பற்றச் செய்திருக்கும் முடிவினைத் தாங்கள் எதிர்ப்பதாகவும், மொழிச் சிறுபான்மையினரைப் போலவே, மதச் சிறுபான்மையினரும் இலங்கையின் ஒற்றையாட்சி அரசமைப்புத்திட்ட முறையினால் பாதிக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது என்றும் இப்போதுதான் தங்களால் உண்மை நிலையை உணர முடிகிறது எனவும் கண்கள் திறக்கப்பட்டிருக்

(6-ம் பக்கம் பார்க்க)






கும்பகோணம் ஹோமியோபதி இன்ஸ்டிரியூட்டின் அதிபரும், பிரபல ஹோமியோபதி வைத்தியமுறைப் போதகருமான டாக்டர் வி. ஆர். மூர்த்தி தமது துணைவியாருடன் கடந்த வாரம் இலங்கை வந்தபோது முதலியார், டாக்டர் என். எம். அபுல் ஹமீம் விமான நிலையத்தில் வைத்து மலர்மாலை சூட்டி அவரை வரவேற்றார்.

(கீழே) டாக்டர் வி. ஆர். மூர்த்தி கொழும்பு விவேகானந்த சபையில் இலங்கை ஹோமியோபதி சங்கத்தாரால் அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினார். இக் கூட்டத்துக்கு கொழும்பு மத்திய தொகுதி பாராளுமன்ற அங்கத்தவரும் ஹோமியோபதி ஆராய்ச்சிக்குழுவின் முன்னாள் தலைவருமான சேர் ராஸிக் பரீத் தலைமை தாங்கினார்

—படம்: ராஜப்பன்.

# தமிழ் மொழிச் சட்ட நடைமுறை விதிகள்

## தாமதமின்றி ஆக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை

(சுதந்திரன் நிருபர்)

நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட வேண்டிய நடைமுறை விதிகளை (Regulations under the Reasonable use of Tamil Language Bill) உடனடியாக ஆக்கிப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்று தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை மிக விரைவில் வற்புறுத்த விருக்கிறது.

1961 ஜனவரி 1ந் தேதியோடு சிங்களம் மட்டும் சட்டம் முற்று முழுதாக அமுலுக்கு வருகிறது. அப்போது சிம்மாசனப் பிரசங்கத்தில் வாக்குறுதியளித்துள்ளபடி தமிழ் மொழிச் சட்டமும் அமுலுக்கு வர வேண்டுமானால் சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் நடைமுறை விதிகள் உடனடியாகத் தயாரிக்கப்பட வேண்டும்.

இவ்விதிகளைத் தயாரிக்குமாறு தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும் என்று தமிழ் அரசாங்க உயர் உத்தியோகத்தர்கள் பலர் தமிழரசுக் கட்

(9-ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் வரவேற்பு

இம் மாதம் 10-ம் தேதி சனிக்கிழமை திருகோணமலை மக்கள் சுயேச்சைப் பிரதிநிதிகளுட்பட தமிழ் பேசும் பாராளுமன்றப் பிரதிநிதிகளை வருக்கும் மாபெரும் வரவேற்பொன்று அளிக்கத் தீர்மானித்திருக்கிறார்கள். வரவேற்பு விழாவிற்குரிய ஏற்பாடுகளெல்லாம் பிரமாண்டமான அளவில் நடைபெறுகின்றன.

அன்று பிற்பகல் நகர வீதிகளுக்கூடாக பிரதிநிதிகள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்கள். பெரிய மைதானத்தில் மாலை நடைபெறும் கூட்டத்தில் நகரசபைத் தலைவர் திரு நேமிநாதன் வரவேற்புச் சபைத் தலைவராகத் திருமலை மக்கள் சார்பில் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுவார்.

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து




● மூலம்

● வாதம்

● படை (ECZEMA)

● மாத விடாய்



நோய்களை

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானுகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன்: 2885)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நகரவாசி தன் ஆயுளில் சுவாசிக்கும் தூசியின் எடை, 45 இருத்தல்!

## மனிதனுக்கு அழகுதரும் எடுப்பான நாசி சீதோஷ்ணத்தைச் செப்பனிடும் அற்புத மானி

### மூக்கின் முக்கியத்துவம் பற்றிய விளக்கம்

உலகத்திலேயே எந்த இரண்டு மனிதருக்காவது அளவிலும் உருவத்திலும் ஒரே மாதிரியான மூக்கு இருக்கிறதா? இல்லவே இல்லை. ஆண்டவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரத்தியேகமான, இணையில்லா மூக்கைக் கொடுத்திருக்கிறார். மிருகங்களுக்கெல்லாம் முகத்துடன் முகமாய் மறைந்து போய், மூக்கு சப்பையாக இருக்கிறது. இரண்டு துவாரங்கள் தென்படும். அவ்வளவு தான். மனிதன் ஒருவனுக்குத் தான் எடுப்பான மூக்கு உண்டு. அவனுக்கு அழகு தரும் உறுப்பும் இதுவே. மற்றவர்கள் கவனத்தை எளிதில் கவர்ச்சிப்பதும் இதுவே. ரோமர்களின் எடுப்பான மூக்கு உலகப்பிரசித்தி பெற்றது. கிலியோபாட்ராவின் அழகெல்லாம் அவள் மூக்கிலே அடங்கியிருந்தது என்று சரித்திரக்காரர்கள் வர்ணித்திருக்கிறார்கள்.

#### ஓர் ஆராய்ச்சி

ஒருவன் நம்மை அவமானப்படுத்திவிட்டால், "அவன் என்மூக்கை உடைத்துவிட்டான்" என்று சொல்லுகிறோம். கோபத்தால் ஒருவரை ஒருவர் பார்த்து, "ஜாக்கிரதை, மூக்கைச் சப்பையாக்கிவிடுவேன்" என்று சொல்லுகிறவர்களும் உண்டு.

இவ்வளவு பிரசித்தி பெற்ற மூக்கைப் பற்றி ஓர் ஆராய்ச்சியே நடத்தி விடலாம் என்று நினைக்கிறேன். மூக்கின் முன்பாகம் தசையாலானதே. அப்படியில்லாமல், எலும்பாலானதாக இருக்குமானால், நாம் ஆடுகிற ஆட்டத்திற்கும், சாட்டத்திற்கும் வெகு சீக்கிரமே மூளி மூக்குடன் காட்சியளிக்க முடியும்!

#### அழகு படுத்துவது அவலட்சணமாக்குவது

மனிதனை அழகுப் படுத்துவதும் மூக்கு; அவனை அவலட்சணமாக்குவதும் அதுதான். எல்லாக் குழந்தைகளும் பிறந்தவுடன் வெகு அழகாக இருக்கின்றனவா? இதன் காரணம் தெரியுமா? பிறந்த குழந்தைகளுக்கு மூக்கு எடுப்பாக இருப்பதில்லை. வளரவளரத்தானே, மூக்கு வெளியே தள்ளி, குழந்தையின் நிரந்தரச் சொருபத்தை வெளிப்படுத்திவிடுகிறது!

#### மூக்கு சாதிக்கும் அற்புதம்

மூக்கு சாதிக்கும் செயல்கள் மிகவும் முக்கியமானவை. நாம் உட்கொள்ளும் காற்று சில சமயங்களில் வெகு குளிர்ச்சியாக, அல்லது உஷ்ணமாக இருக்கும். ஆனால் நமது புப்புசங்கள் சரியாய் வேலை செய்ய ஒரே சீரான உஷ்ணமுள்ள காற்றுத்தான் தேவை. எவ்வித உஷ்ண நிலையில் காற்று உள்ளே நுழைந்தாலும், அதைத் தகுந்த அளவு உஷ்ணமுள்ளதாக மாற்றி, உள் அனுப்புவதைத்தன் கடமையாக ஏற்றுக் கொண்டிருக்கிறது நமது மூக்கு.

#### சுவாசத்தின் பாதை

மூக்கின் துவாரங்கள் கீழ் நோக்கி இருக்கின்றன. எனவே காற்று கீழிருந்து மேல்நோக்கிச் சென்று, பின் வளைந்து, புப்புசத்தை அடைகிறது. எனவே திறந்த கதவின் வழியாக ஒரு பூனை விட்டிற்குள் செல்வது போலக் காற்று புப்புசங்களுக்குள் செல்வதில்லை. மூக்கின் உட்பாகத்திலுள்ள பொந்துகள் வழியாயும், சந்துகள் வழியாயும், சதைச் சவ்வுப் பர்வதங்களுக்கு மேலாகவும், பள்ளத்தாக்குகளின் ஊடேயும் செல்லவேண்டியிருக்கிறது. இவைகளில் இருக்கும் இரத்தக் குழாய்கள் அனலை வெளியிடுவதால், காற்று உஷ்ணமடைய ஏதுவாகிறது. அவசியம் நேரிடும் போது, முப்பது டிகிரி செண்டிகிரேட் வரை உஷ்ண நிலை அதிகப்படுத்தப்படுகிறது. மேலும் ஆகாசங்கேயுள்ள சேகரிகளால் வெளித்தள்ளப்படும் திரவம் ஆவியாவதால், உட்செல்லும் காற்று ஈரமடைகிறது. இதுமிகவும் தேவை. ஈரமற்ற காற்றையே உட்கொண்டு வருவோமென்றால், புப்புசங்கள் காய்ந்து, வறண்டு, சருகு போல் ஆகிவிடும்!

#### அழுதால் மூக்கில் ஜலம் ஏன்?

கண்ணில் உற்பத்தியாகும் நீர் குழாயின் வழியாக மூக்கின் உட்பாகத்திற்கு வந்து சேருவதால், அதுவும் ஆவியாகி, உட்செல்லும் காற்றின் ஈரத்தை அதிகப்படுத்துகிறது. அதிகமாய் அழுதால் மூக்கில் ஜலம் வடிதல் இக்காரணத்தால் தான். "வடித்த கண்ணீரும், சிந்தின மூக்குமாய்"—என்று நாவல் ஆசிரியர்கள் விவரிப்பது மிகவும் உண்மையே.

#### வாயிற்காப்போர்

நாம் சுவாசிக்கும் காற்றில் விஷக் கிருமிகள், தூசிகள் முதலியவை இருந்தால் உடலுக்கு மிகக் கெடுதல் உண்டாகும். மூக்கின் முன் பாகத்திலுள்ள மயிர்கள் தூசி துரும்புகளைத் தடுத்து நிறுத்திவிடுகின்றன. நாம் தூங்கும்போது, சிறு பூச்சிகள் மூக்குள்ளே நுழைந்து விட்டால், என்ன செய்வது என்று திகைக்கிறீர்களா? பயம் வேண்டாம். வாயிற் காப்போராகப் பணி செய்யும் இந்த உரோமங்கள் அவற்றை உள்ளே விட மறுத்துவிடுகின்றன. இதனால் உண்டாகும் கலாட்டாவால் தூங்குகிறவர் எழுந்து விடுகிறார்!

கண்ணுக்குத் தெரியாத கிருமிகள் உரோமங்களைத் தாண்டி, ஜாலியாக உள்ளே போய், சளிச் சவ்வின் மேல் பரப்பிலுள்ள ஈரத்தில் ஒட்டிக் கொள்கின்றன. பிறகு அங்குக் காணப்படும் கிருமி நாசினியால் கொல்லப்படுகின்றன!

#### உட்கொள்ளும் தூசியின் அளவு

நாம் நாள் முழுவதும் தூசியைச் சுவாசித்துக்கொண்டேதான் இருக்கிறோம். கரைக்கு அப்பால், சமுத்திரத்தில் சுமார் 600 மைலுக்குப் போனால் தான், தூசியற்ற காற்று கிடைக்கும், மலை உச்சியில் கூட தூசி இருக்கத் தான் செய்கிறதாம். பட்டணவாசி தன் ஆயுள் காலத்தில் சுமார் 45 பவுண்டு நிறையுள்ள தூசியை உட்கிரகிக்கிறான் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அப்படியானால் சிமெண்டுத் தொழிற்சாலை, மாவு அரைக்கும் மில், மரம் அறுக்கும் பட்டறை இவைகளில் வேலை செய்பவர்களுக்கு என்னவாகும் என்று கேட்கிறீர்களா? அங்குள்ள ஒருவர் தன் ஆயுள் காலத்தில் உட்கொள்வது சுமார் 100 பவுண்டு தூசி எனக் கணக்கிட்டிருக்கிறார்கள்.

#### உடல் நல விரோதி

சிலிக்கா கலந்த பாறைகளில் வேலை செய்கிறவர்களுக்கு இத் தூசியால் புப்புச நோய்கள் அதிகமாக உண்டாகின்றன. ஆனால் சலவைக் கற்களின் மத்தியில் வேலை செய்கிறவர்களுக்கு இப்படிப்பட்ட வியாதிகள் அதிகம் ஏற்படுவதில்லை. காரணம்? சலவைக் கற்களில் கால்சியம் இருக்கிறது. இது உடலுக்கு அதிகமான கெடுதி உண்டாக்குவதில்லை. ஆனால் எவ்வகைத் தூசியும் உடல் நல விரோதி தான் என்பதை மறக்கக் கூடாது.

சளிச் சவ்வின் மேற்பரப்பில் கண்ணுக்குத் தெரியாத மிகச் சிறிய உரோமம் போன்ற உறுப்புக்கள் இருக்கின்றன. இவற்றிற்குச் சிலியா என்று பெயர். எப்பொழுதும் ஒரே திசையிலே—உள்ளிருந்து வெளியே—அசைந்துகொண்டே இருப்பவை காற்று அடிக்கும் போது, நெற்பயிர்கள் எல்லாம் ஒரே திசையில் அசைந்தாடுவது போல், இவை தான், தப்பி உள்ளே சென்ற தூசிகளைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுபவை.

#### சிலியாக்கள் செய்யும் வேலை

நிலக்கரிச் சுரங்கத்திலிருந்து வீடு திரும்பும் தொழிலாளி, தன் உடலை, குறிப்பாகத் தன் மூக்கை நன்றாகச் சுத்தம் செய்து விட்டு, இனி கொஞ்சமும் கரித்தூள் தன் மூக்கில் இருக்காது என்று

(15-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் கற்ற ருஷியர் இலக்கண மரபுப்படி தமிழ் பேசுகிறார்கள்

## தென்னாட்டவர் தூய தமிழ் கற்க அங்கு போகலாம் எனத் தோன்றுகிறது.

## கோவில்கள் அழிக்கப்படவில்லை: கண்காட்சி சாலைகளாக ஆக்கப்பட்டுள்ளன

### சோவியத் சென்று திரும்பிய பேராசிரியர் சிதம்பரநாதர் கருத்து.

பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் சமீபத்தில் சோவியத் நாட்டுக்குச் சென்று திரும்பினார். அவருக்கு சென்னையில் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டபோது பலரும் அவரைப் பாராட்டிப் பேசினார்கள். அந்த சந்தர்ப்பத்தில் பேராசிரியர் ஆற்றிய சொற்பொழிவு இது.

மாஸ்கோவிற்குப் புறப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் எனக்குத் திடீர் என்று கிடைத்தது. அதனால் தான் நண்பர்களிடம் எல்லாம்—நான் சொல்லிக்கொண்டு போகவில்லை. நான் மாஸ்கோ சென்றேன்! வென்றேன் என்று என்னைப் பாராட்டிப் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியல்ல, சென்றேன்; சொன்னேன்; திரும்பினேன். அவ்வளவு தான். இப்போது நான் எதைச் சொல்வதென்று தெரியாமல் தயங்குகிறேன்.

#### கண்கொள்ளாக் காட்சி

போகும்போது ருஷ்ய விமானத்தில் சென்றேன், அது இமயமலைக்கு மேல் 50,000 அடி உயரத்தில் பறந்து சென்றது. விமானத்திலிருந்து பனிமலை யுச்சியைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது.

டில்லியிலிருந்து மாஸ்கோ போய்ச் சேர ஒன்பது மணி நேரமாகிறது. திரும்பும் போது வந்த இந்திய விமானம் இமயத்தைச் சுற்றிக் கொண்டு வருவதால் 11½ மணி நேரம் பிடிக்கிறது.

#### பெண்களின் பெரும் பணி

ருஷ்யாவில் கல்லூரி மாணவ மாணவிகள் ஓய்வு நேரத்தில் உழைத்து ஊதியம் பெறுகிறார்கள். பெரும்பாலான வேலைகளில் பெண்களே ஈடுபட்டிருக்கிறார்கள். பஸ், லாறி, டிரக் ஓட்டுபவர்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள். ஓட்டல்களில் பணியாளர்களாகவும் வங்கிகளில் கணக்கர் வேலையிலிருந்து மிக உயர்ந்த ஏஜண்டு வேலைவரை பெண்களே பெருவாரியாக இருக்கிறார்கள். அங்குப் பெண்கள் தொகை அதிகம். ருஷ்யர்கள் எந்த வேலையையும் மிக விரைவாக முடிக்கிறார்கள். மிக எளிய வேலைக்காரரும் மிகப் பெரிய அதிகாரியுடன் சரளமாகத் தொடர்பு கொண்டு வேலைகளை விரைந்து முடிக்கிறார்கள். செஞ்சதுக்கம், செங்கொடி ஆகியவையுள்ள இடத்திலே சிகப்பு நாடா முறை கிடையாது.

#### கோவில்களில் கண்காட்சி

ருஷ்யர்கள் அழிக்கின்ற மனப்பான்மையுடையவர்கள் என்று கருதப்படுவது தவறு. அவர்கள் பழைய கோவில்களை யழிக்கவில்லை. அவற்றில் நூற்றுக்குத் தொண்ணூறு கோவில்களை கண்காட்சிசாலைகளாக மாற்றியிருக்கிறார்கள். மதங்களையும் அவர்கள் இன்னும் விட்டுவைத்து இருக்கிறார்கள். மறைந்துபோன தலைவர்கள், அறிஞர்கள் அரசர்களுடைய பொருள்களை இன்னும் போற்றிப்பாதுகாத்து வருகிறார்கள்.

நம் நாட்டில் மாதம் முப்பது ரூபாய் வாங்கக்கூடிய தொழிலாளி செய்யும் வேலைக்கு அங்கு 140 ரூபாய்

(7-ம் பக்கம் பார்க்க)


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, தேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

## ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏ. இரா. நாதன், நாவலப்பிட்டி

கே: 'ள' என்று தமிழ் அரிச்சுவடியில் வரும் வடிவத்தின் பெயர் என்ன?

ப: ெ—ஒற்றைக்கொம்பு, ே—இரட்டைக்கொம்பு, ை—சங்கிலிக் கொம்பு என்று சொல்லலாம்.

ஃ

வ. சண்முகலிங்கம், வதிரி

கே: இலங்கையிலுள்ள ஆங்கிலப் பேச்சாளர்களில் சிறந்தவர் யார்?

ப: சந்தேகம் இல்லாமல் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தான். தமிழன் பெருமைப் படலாம். ஆனால் கொள்கை இல்லாத பேச்சு கூர்மை இல்லாத வாள் வீச்சு என்று ஆகிவிட்டதே!

ஃ

எஸ். செல்வராஜா, வசாவிளான்

கே: அண்ணாதுரைக்கு அறிஞர் என்றும், கருணாநிதிக்குக் கலைஞர் என்றும் பட்டம் சூட்டியவர்கள் யார்?

ப: தனி மனிதர் யாரும் இல்லை. பொதுமக்கள்தான் இந்தப் பட்டத்தை அன்போடு வழங்கி, வழக்கத்திலும் கொண்டு வந்துவிட்டார்கள். இதைப் பார்த்த பலர் தங்களுக்கு யாரையாவது கொண்டு பட்டஞ்சூட்டுவித்தார்கள். ஆனால் அந்தப் பட்டங்கள் நிலைக்கவில்லை, காற்றோடு பறந்து விட்டன.

ஃ

பி. என். கிருஷ்ணன், கல்முனை

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். கனவில் கூட அவள் வந்துவிடுகிறாள், என்ன செய்யட்டும்! இதில் தவறு ஒன்றும் இல்லையா?

ப: கலியாணம் செய்து கொள்ளும்வரை அவளை ஒன்றும் செய்ய முடியாது. காதலிப்பவர் கனவில் வருவது ஒன்றும் தவறில்லை. பழந்தமிழ் இலக்கியமான முத்தொள்ளாயிரத்தில் எத்தனையோ பாட்டுகள் இருக்கின்றன. பாண்டியனையும், சோழனையும், சேரனையும் பெண்கள் காதலிக்கின்றார்கள். அந்த அரசர்கள் கூடக் கனவில் தோன்றித்தான் அந்தப் பெண்களுக்கு இன்பம் கொடுத்திருக்கிறார்கள். இப்போதைய சினிமாவில் கூட "ட்ரீம் சீக்குவன்ஸ்" அதாவது கனவுக் காட்சியென்று ஒன்று அமைக்கப்படுகிறதே, நீர் பார்த்ததில்லையா?

ஃ

ந. சித்தன், தெரணியகலை,

கே: தவறு செய்த ஒருவரைத் தாங்கள் மன்னிப்பீர்களா?

ப: நிச்சயமாக மன்னிப்பேன். இரண்டாவது முறை தவறு செய்தாலும் மன்னிப்பேன். மூன்றாவது முறை அதே தவறைச் செய்தால் மன்னிக்கமாட்டேன். தவறு செய்வது மனித குணம். மன்னிப்பது தேவ குணம்.

ஃ

எம். தங்கராசா, மண்டூர்

கே: உங்களுக்கு சூனியத்தில் நம்பிக்கை உண்டா?

ப: உண்டு. சூனியம் என்றால் ஒன்றுமில்லாதது, வெறுமையானது என்று பொருள். ஒன்றுமில்லாததில் நம்பிக்கை வைப்பதால் ஒன்றும் கெடுதல் இல்லை. சூனியம் என்றால் ஏதோ பேய் பிசாசோடு சேர்ந்த மந்திர சக்தியென்று நினைக்கிறீர்களோ, அதுதான் தவறு.

ஃ

துரையான், கல்முனை

கே: தமிழரசுக் கட்சியின் பலத்துக்கு ஒரு உதாரணம் கூற முடியுமா?

ப: உங்கள் பகுதித் தேர்தலை எடுத்துக்கொண்டாலே கட்சியின் பலம் தெரியுமே. தபால் மந்திரியாக இருந்தவரை உப தபாலதிகாரியாக இருந்தவர் அல்லவா உருட்டிவிட்டிருக்கிறார்!




ச. எம். அப்துல்லா, மூதூர்-3

கே: குயுக்தியாரே, நீர் அடுத்து வரும் தேர்தலில் குதிக்கப் போவதாக அறிகிறேன். உண்மையா?

ப: தேர்தலில் குதித்தவர்கள் படும்பாட்டைப்பார்த்த பின் நானும் தேர்தலில் குதிக்க எனக்கு என்ன சித்த சுவாதீனம் கெட்டுவிட்டதா?

ஃ

எஸ். செல்வநாதன், ஏறுவூர்

கே: சில பத்திரிகைகள் விளம்பரம் செய்யும் போது 3 லட்சத்து 50 ஆயிரம் பேர் படிக்கும் பத்திரிகை என்று விளம்பரம் செய்கிறார்களே, சுதந்திரன் அப்படி விளம்பரம் செய்வதில்லையா?

ப: இத்தனை ஆயிரம் பத்திரிகை விற்பனையாகிறது என்று சொல்வது வேறு; இத்தனை ஆயிரம் பேர் படிக்கும் பத்திரிகை என்று தம்பட்டமடிப்பது வேறு. எத்தனை பேர் படிக்கிறார்கள் என்பதைவிட எத்தனை பத்திரிகை விற்பனையாகிறது என்பதுதான் முக்கியம். சுதந்திரன் அப்படிப் பெருமையடிப்பதானால் 'இலங்கைவாழ் 25 இலட்சம் தமிழ் பேசும் மக்கள் படிக்கும் பத்திரிகை' என்று சுலபமாகச் சொல்லிவிடலாம்.

ஃ

கே: நீங்கள் யாரைக் கண்டு இரக்கப்படுவீர்கள்?

ப: கண்ணிருந்தும் பார்க்கத் தெரியாதவனை, காதிருந்தும் கேட்கத் தெரியாதவனை, கையிருந்தும் பிழைக்கத் தெரியாதவனை, தலையிருந்தும் சிந்திக்கத் தெரியாதவனை.

கே: வறுமையின் வித்து எது?

ப: வறுமையின் வித்துப் பணம் இல்லாமை என்று பலர் நினைக்கிறார்கள். வறுமையின் வித்து அறிவு இல்லாமைதான். அறிவோடு கூடிய சாமர்த்தியம் இருந்தால் வறுமை என்ன செய்ய முடியும்?

> திருவாளர் குயுக்தியார்
> மே/பா சுதந்திரன்,
> த. பெ. இல. 1183,
> கொழும்பு-12.

நளினன், மத்துகாமம்

கே: திருமணம் செய்து கொள்ளாமல் வாழ்ந்தால் என்ன?

ப: வாழலாம். ஆனால் உங்கள் வாழ்வு உங்களோடு முடிந்துவிடும். கலியாணம் செய்து கொண்டால் உங்களுக்குப் பிறகும் வாழும் உலகத்தில் உங்கள் இரத்தம் வாழும்.

ஃ

க. கந்தையா, தெஹிவளை

கே: இலங்கை அரசாங்கத்தின் கலாச்சார அமைச்சு குழந்தைகளுக்குச் சூட்டுவதற்குச் சில அதிர்ஷ்டப் பெயர்களைத் தெரிந்து கொடுக்கப் போகிறதாமே?

ப: கடந்த பொதுத் தேர்தலில் தோல்வி கண்ட சில துர்அதிர்ஷ்டப் பேர்வழிகள் கூடத் தம் பெயர்களை மாற்றி கலாச்சார அமைச்சின் அதிர்ஷ்டப் பெயர்களைத் தமக்குச் சூட்டிக் கொள்ளலாம்.

ஃ

[illegible]

கே: இலங்கையிலுள்ள சிறந்த தமிழ்ப் பேச்சாளர் யார்?

ப: பலர் இருக்கிறார்கள். அ. அமிர்தலிங்கம், வ. பொன்னம்பலம், புதுமை லோலன், கே. துரைரத்தினம் மசூர் மௌலானா, பீர் முகம்மது இப்படிப் பலர் இருக்கிறார்கள். ஆனால் செ. இராசதுரைக்குத்தான் பெருங் கூட்டங் கூடுகிறது.

ஃ

எம். மீராசா, மூதூர்

கே: சம அந்தஸ்து இந்நாட்டுக்கு உகந்ததல்லவென்று பேசிய எங்கள் இரண்டாவது பிரதிநிதி ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத், மீண்டும் அதே வாயால் தமிழுக்குரிய சம அந்தஸ்துக்கு வாதாடுவேன் என்று கூறியிருக்கிறாரே, இதன் இரகசியம் என்ன?

ப: இரகசியம் இரண்டு இருக்கிறது: ஒன்று, சம அந்தஸ்து இந்த நாட்டுக்கு உகந்ததல்ல என்ற அபிப்பிராயத்தை ஜனாப் மஜீத் வெளியிட்டதும், கல்முனைப் பிரதிநிதி ஜனாப் அஹமத் அவருக்கு ஒரு நல்ல மறுத்தான் அடி கொடுத்தார்! இந்த அபிப்பிராயத்தை நீர் தேர்தலுக்கு முன்பு சொல்லியிருந்தால் பாராளுமன்றப் படிக்கட்டைக் கூட எட்டிப் பார்த்திருக்க முடியாது' என்று அஹமத் கூறினார். இது மூதூர் இரண்டாவது எம். பி. யைக் கதிகலக்கி விட்டது. இரண்டாவது இரகசியம், "முறை தவறி அநாவசியமாக உளறுகிறீர்" என்று பிரதமர் திருமதி சிறிமாவோவிடமிருந்து அவருக்குக் கிடைத்த எச்சரிக்கையாகும்.

ஃ

எஸ் எம். அப்துல்லா, மூதூர்

கே: இலங்கையில் சமஷ்டி எவ்வாறு நடைபெறும் என்பது திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கே தெரியாது என்று கூறுகிறாரே மூதூர் இரண்டாவது எம். பி. மஜீத்!

ப: பாவம் தம்பி மஜீத் ஒரு பூஜ்யப் பட்டதாரி! பூஜ்யில் அவர் கண்ட கல்வியின் ஆழம் அவ்வளவுதான்!

ஃ

இ. விக்கினேஸ்வரன், உரும்பிராய்

கே: திரு. எம். திருச்செல்வம் க்யூ. ஸி. தமிழரசுக் கொள்கையை ஆதரிப்பவரா?

ப: முழுக்க முழுக்க. இன்று தமிழரசுக் கட்சியின் மூளை என்ற ஸ்தானத்தில் இருக்கும் மூவருள் இவரும் ஒருவராவார்.

ஃ

த. குமாரசாமி, தாவடி

கே: தங்களுக்கு அரசியல்வாதிகள் யாராவது அனுதாபமுண்டா?

## தேவை

பழம் பெரும் எழுத்தாளர்கள் மட்டுமல்ல, இளம் எழுத்தாளர்களும், ஆரம்ப எழுத்தாளர்களுங்கூடச் சுதந்திரனில் எழுதலாம்.

வழமைப்பிரகாரம் இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கும், புதுப் புது எழுத்தாளர்களைத் தோற்றுவிப்பதற்கும் சுதந்திரன் விழைகிறது.

எழுதும் பழக்கத்தை எவரும் கைவிட வேண்டியதில்லை. சுதந்திரனுக்குத் தாராளமாக எழுதி அனுப்பலாம். தரமான படைப்புக்களும், சிறு சிறு திருத்தங்களோடு உபயோகப் படுத்தக் கூடியவையும் சுதந்திரனில் பிரசுரிக்கப்படும்.

பிரசுரிக்கப்படாத விஷயங்கள் திருப்பி அனுப்பப்படமாட்டா. இதைக் கவனிக்க வேண்டும். எழுதி அனுப்புகிற விஷயங்களுக்கு பிரதி வைத்துக் கொண்டால் சுதந்திரனுக்கு அனுப்புவதைத் திருப்பிப் பெற வேண்டிய அவசியம் ஏற்படாது அல்லவா?

இப்போது சுதந்திரனுக்குப் பின் வருவன எழுதி அனுப்பலாம்:—

1. சிறு கதைகள்.
2. நெடுங்கதைகள்.
3. நாடகங்கள்.
4. நகைச்சுவைக் கட்டுரைகள்.
5. இலக்கியக் கட்டுரைகள்.
6. விஞ்ஞானக் கட்டுரைகள்.
7. மருத்துவக் கட்டுரைகள்.
8. தொழில் கட்டுரைகள்.
9. பொருளாதாரக் கட்டுரைகள்.
10. கவிதைகள்.

ப: உண்டு. டட்லி மீது! பற்றைக்குள் இருக்கும் இரண்டு குருவிகளை விடக் கையில் இருக்கும் ஒரு குருவி அதிக பெறுமதியானது என்ற ஆங்கிலப் பழமொழியின் அர்த்தம் கூடத் தெரியாமல் பாராளுமன்றத்தைக் கலைத்த மேதாவி அல்லவா அவர்?

ஃ

எஸ். எம். மீராமுகைதீன், ஏறுவூர்

கே: குயுக்தியாரே, நீர் எப்போதாவது கண் கலங்கியதுண்டா?

ப: நானுகச் சிந்திக்கத் தெரிந்த பின் இன்றுவரை ஐந்து தடவைகள் தான் கண்கலங்கியிருக்கிறேன். 1. தாயார் பிரிந்த போது, 2. தந்தையார் பிரிந்த போது, 3. காந்தியார் பிரிந்தபோது, 4. கல்கியார் பிரிந்தபோது, 5. வன்னியசிங்கம் பிரிந்த போது.

## இயற்கை அவள்!

—பாண்டியூர் கணபதிப்பிள்ளை—

மாலையிளம் பரிதியொளி செம்பொன் போர்த்த
மந்தாரக் கூடங்கள் மலையூர்ந்தாலே
சோலையிசை மென்தென்றல் துவளப் பூக்கள்
சொரிந்தெங்கும் விண்தாரா வண்ணந் தீட்ட
பாவையெனு மியற்கையவள் பக்கம் வந்து
பட்டாடை மிதந்தோடப் பொற்கை சேர்ந்து
நிலவிரிப் பாயையிலே நெஞ்சைத் தொட்டு
'நில்லாதே வா'வென்றாள் நடந்தேன் பின்னே.

தூயதமிழ்ப் பாட்டிசைத்தாள், தொடர்ந்தேன் பின்னால்
துள்ளுநடைச் சிற்றாறு தோன்றக் கண்டேன்.
மாயமிது என்றிட்டாள். வானவில் காட்டி,
வண்ணமீது மயங்காதே வாழ்வு கோணும்.
ஆயகலை பாரென்றாள் அங்கோர் சிற்பம்
ஆடிற்று. யாரென்றேன் மயிலாம் என்றாள்,
மேயவரும் மான்கூட்டம் விண்ணில் தோன்றி,
மேவிற்று. மணமாதின்சாயல் பேசும்.

தென்குநிரை பந்தலிடச் செந்நெல் போர்த்த
சிற்றருவி யூர்ந்திட்டாள் சிவக்க மேனி
அங்கமெல்லாம் பொங்கிற்று இன்ப ஊற்று
அமுதமெனப் பருகிடேன் அவள்என் கையை
செங்கயலக் கரங்கோத்துச் சிந்தையள்ளும்
சிரிப்பொன்று பூத்திட்டாள் சிலையாய் நின்றேன்
பொங்குமிள நங்கையெனும் மருத மங்கை
பொறுக்காது அவளகோணிச் சென்னிசாய்த்தாள்

குழலோசை யூட்டுகிறான் கண்ண னென்றாள்
குயிற்சோடி பாடிற்றுக் கொத்தி ஊடே
மழலையிது பாரென்றாள் வாவியோரம்
வாய்திறந்து பேசிற்றுத் தவளைக் கூட்டம்
தழலென்றாள் தொட்டிட்டேன் தவிப்பேயில்லை
தாமரையாள் முத்திட்டாள் செவ்வாய் கொண்டு
விளையாத பேரின்பம் விளைந்தாங்கே யென்
விழிதன்னைத் திறந்திட்டேன் 'விரைந்தாள் மாது'

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

**வருடச் சந்தா ரூபா 10-00**

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஒற்றுமை இல்லையேல்

## எந்தக் காரியமும் உருப்படாது

## தமிழ் பேசும் மக்களுக்கு தமிழ் மொழி உரிமை வழங்கப்பட வேண்டும்

### பட்டிருப்பு பிரதிநிதி இராசமாணிக்கம் பாராளுமன்றத்தில் பேச்சு

பட்டிருப்புப் பிரதிநிதி திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தமிழரசுக் கட்சியின் மொழியுரிமை சம்பந்தமான திருத்தப் பிரேரணையைப் பாராளுமன்றத்தில் பிரேரித்துப் பேசுகையில், சமூக ஒற்றுமை இல்லையேல் எந்தக் காரியமும் நாட்டில் உருப்படாது என்றும், தமிழ் பேசும் மக்களுக்கு மொழியுரிமை உட்பட அவர்களின் சகல உரிமைகளையும் வழங்குவதன் மூலமே சமூக ஒற்றுமையை ஏற்படுத்தலாம் என்றும் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்.



திரு. எஸ். எம். இராசமாணிக்கம்

திரு. இராசமாணிக்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

எமது மொழிக்குச் சம அந்தஸ்து வேண்டுமென வாதாடிய காரணத்தினால் எம்மையும் எமது கட்சியையும் வகுப்புவாதிகள் எனக் கூறினார்கள்.

நல்லெண்ணச் சமிக்ஞை

கௌரவ உப சபாநாயகரவர்களே, எமது உரிமைகளைக் கோரிய பொழுது எமக்கு "துரோகிகள்" என்ற பட்டத்தை அளித்தார்கள். ஆனால், தமிழ் பேசும் மக்களின் சார்பில் போராடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி "இந் நாட்டில் தமிழ் பேசும் மக்களை யாவத்தோடும் உரிமையோடும் வாழ விடுங்கள்" என்று கேட்டது. இவ்விடா முயற்சியினாலும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவினாலும் சென்ற தேர்தலின் பின் ஓரளவு பெரும்பான்மைச் சமுகத்தினரிடையே மனமாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண்பது சந்தோஷத்துக்குரியதாக இருக்கிறது. சிங்கள மக்கள் துவேஷ மனப்பான்மையைக் குறைந்து ஓரளவு உண்மையைக் காண்பது போல் தோன்றுகிறது. இதன் பிரதிபலிப்பு சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலில் ஓரளவு காணப்படுகிறது. சிம்மாசனப் பிரசங்கம் தமிழிலும் வாசிக்கப்பட்டது. நல்லெண்ணத்தை—அவர்களது நல்லெண்ணத்தைக் காட்டும் ஒரு செயலாக அமைந்து இருக்கிறதே தவிர, எமது கட்சி பெற்ற ஒரு மாபெரும் வெற்றி என்று நாம் கருதவில்லை.

சிங்கள மக்களுக்குச் சிங்களம் எவ்வாறு இருக்கிறதோ அதே போல தமிழ் மக்களுக்கும் தமிழ் இருக்க வேண்டும் என்பது தான் நாங்கள் கேட்கும் கோரிக்கை. இந்தக் கோரிக்கையில் நாங்கள் கேட்பது எண்ணிக்கையில் சமத்துவம் அல்ல; அந்தஸ்தில் சமத்துவம்.

It is not quantitive parity that we want but qualitative parity.

**சுவிட்சர்லாந்தும் இலங்கையும்**

ஒரு சிறிய நாடாகிய சுவிட்சர்லாந்தை எடுத்துப் பாருங்கள். அங்கு 60 லட்சம் மக்கள் குடியிருக்கிறார்கள். அத்தேசம் 16 ஆயிரம் சதுரமைல் உடையதாக இருக்கிறது. அதே நேரத்தில் இலங்கையை எடுத்துப் பாருங்கள். இங்கு 90 லட்சம் மக்கள் குடியிருக்கிறார்கள். 25 ஆயிரம் சதுரமைல் பரப்புடைய பிரதேசம் இருக்கிறது. சுவிட்சர்லாந்து இலங்கையைப் பார்க்கிலும் எவ்வளவு சிறிய நாடு என்பதைக் கவனித்துப் பாருங்கள். இச் சிறிய நாடாகிய சுவிட்சர்லாந்தில் சமஷ்டி அரசியல் மிகவும் அமைதியாக நடந்து வருவதாக இருப்பது மாத்திரமல்ல, அந்த நான்கு சாதியினர்—நான்கு பாஷைகளைப் பேசும் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். சம அந்தஸ்தோடும் சமத்துவத்தோடும் அவர்கள் அந்நாட்டில் வாழ வழி இருக்கையில் நாம்—சுவிட்சர்லாந்தைப் பார்க்கிலும் பெரியதாகிய இலங்கை நாட்டில் ஏன் அப்படி சுயாட்சியோடும், சுதந்திரத்தோடும், சமாதானத்தோடும் வாழ முடியாது என்பதைக் கேட்க வேண்டியதாக இருக்கிறது. அங்கே வாழும் நாலு சாதியினரில் ஜெர்மன் சாதியினர் 72 வீதமும், பிரெஞ்சு சாதியினர் 20 வீதமும், இத்தாலிய சாதியினர் 7 வீதமும், ரோமான்ஷ் சாதியினர் ஒரு வீதமும் தங்கள் தங்கள் பாஷைகளைப் பேசி அங்கே வாழ்கிறார்கள்.

ஜெர்மன் பாஷை, பிரெஞ்சுப் பாஷை, இத்தாலிப் பாஷை ஆகிய இம் மூன்று பாஷைகளுக்கும் பூரண அந்தஸ்து அங்குண்டு. இதனால் நான்கு பாஷைகள் அரசியல் பாஷைகளாக அங்கு விளங்குகின்றன. இக்காரணத்தினால், அறுபது இலட்சம் மக்கள் வாழும் நாட்டில், ஏழு வீதத்தினரான இத்தாலியர் மொழியுரிமையோடும் அரசியல் உரிமையோடும் வாழ முடியுமானால், இலங்கையில் ஏறக்குறைய முப்பது வீதத்தினரான தமிழ் பேசும் மக்கள் ஏன் சம உரிமையோடு வாழ முடியாது என்று நான் கேட்க விரும்புகின்றேன்.

**இந்தியும் ஆங்கிலமும்**

இந்திய நாட்டை எடுத்துப் பாருங்கள். ஹிந்தி அரசகரும மொழியாக அங்கு பிரகடனஞ் செய்யப்பட்டிருந்தாலும் பதினைந்து பிரதேச மொழிகள் அங்கு ஆட்சி மொழிகளாக இருந்து வருகின்றன. இப் பதினைந்து பிரதேச மொழிகளும் அங்கு சம அந்தஸ்தோடு நிர்வாக உபயோகங்களில் புழங்கி வருகின்றன. ஹிந்தி ஆட்சி மொழியாகப் பிரகடனஞ் செய்யப்பட்டிருந்தாலும் இந்திய அரசாங்கம் ஹிந்தி ஆட்சி மொழியாக இருப்பதை எல்லையற்ற ஒரு காலத்துக்கு நீடித்து, ஆங்கிலமே அதுவரை இருந்துவர வேண்டுமெனப் பிரகடனஞ் செய்திருக்கின்றது. இந்தியாவின் இப்பதினைந்து மொழிகளும் சம அந்தஸ்தோடு இருக்க முடியாதிருக்கவாம். பதினைந்து மொழிகளுக்குச் சம அந்தஸ்துக் கொடுக்க முடியாத ஒரு நிலைமை இருக்கலாம். ஆனால், இரண்டு மொழிகளை மாத்திரம் பேசக் கூடிய இலங்கையில் இவ்விரு மொழிகளும் சம அந்தஸ்தோடு ஏன் இருக்க முடியாது என்ற கேள்வியை நான் கேட்க விரும்புகின்றேன்.

**சம அந்தஸ்தில்தான் சுபீட்சம்**

ஆகையால், எமது கட்சி கோரி நிற்பது, இந்நாட்டில் தமிழ் மொழியும் சிங்கள மொழியும் சம அந்தஸ்தோடு இருக்க வேண்டும்; சிங்கள மொழிக்கு இந்நாட்டிலே என்ன அந்தஸ்திருக்கின்றதோ, சிங்கள மொழிக்குச் சிங்கள மக்கள் என்ன அந்தஸ்தை விரும்புகின்றார்களோ அதே போன்று, தமிழ் மொழிக்கும் தமிழ் மக்கள் விரும்பும் அந்தஸ்தை அளிப்பதுதான் அரசாங்கத்தின் கடமை என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். ஆனபடியால், இலங்கை முழுவதிலும் தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம உரிமை கொடுப்பதே இந்நாட்டின் சுபீட்சத்துக்கும், இந்நாட்டின் எதிர்காலத்தில் ஒரு நல்ல நிலையை அடைவதற்கும் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்கும் அடிப்படையாக இருக்க முடியும்.

**பிரிவினை எதனால்?**

நான் முன்பு குறிப்பிட்டதுபோல, இந்நாட்டில் "சிங்களம் மாத்திரம் மசோதா" என்று பிரகடனம் செய்யப்பட்டதோ அன்றே, இந்நாடு இரண்டாகப் பிளவுபட்டது. மொழி அடிப்படையில் வசிக்கும் மக்கள் இரண்டு பிரிவினராகப் பிரிந்தார்கள். சமஷ்டி அரசியல் இந் நாட்டைப் பிளவுபடுத்த முடியாது. ஆனால், சிங்களம் மாத்திரம் மசோதா என்று வரையிருக்கின்றதோ அன்றுவரைக்கும் இந்நாடு இரண்டு கூறுகளாகவே இருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமுமில்லை. ஆகையால், இந்நாட்டின் ஒற்றுமைக்கும், சமாதானத்துக்கும் சுபீட்சத்துக்கும் தமிழ் மொழி சம அந்தஸ்தைப் பெற வேண்டும்.

**இறுதி இலட்சியமல்ல; இடைக்கால ஒப்பந்தமே!**

இதனால் தான் சென்ற காலத்திலே எமது கோரிக்கை சம அந்தஸ்தைத் தமிழ் மொழி பெற வேண்டுமென்றிருந்தாலும், இந்த அரசாங்கத்தோடு ஒரு ஒற்றுமை காண்பதற்கு அல்லது ஓர் இடைக்கால ஒப்பந்தம் செய்வதற்கு, எங்களுடைய கோரிக்கைகளை ஓர் இடைக்கால சமாதானக் கோரிக்கையாக விடுத்தோம்.

அதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழை ஆட்சி மொழியாகப் பிரகடனஞ் செய்யுமாறு நாங்கள் கேட்டுக்கொண்டோம். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் அதைக் கூட மறுத்ததின் காரணமாக இன்று ஒரு புதுத் தேர்தலைக் கண்டு மீண்டும் நாங்கள் இந்தப் பாராளுமன்றத்தில் கூடியிருக்கின்றோம். நாங்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழுக்கு அரசியல் அந்தஸ்து வேண்டுமென்று கேட்கும் பொழுது அது எங்களுடைய இறுதிக் கோரிக்கையாக இருக்க வேண்டுமென நாங்கள் கூறவில்லை. ஓர் இடைக்கால ஒப்பந்தமாகவே இருக்க வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்.

**சம அந்தஸ்து**

ஆகவே, நாங்கள் கோருவது எமது மொழி இந்நாட்டில் சம அந்தஸ்தோடிருக்க வேண்டும். அரசாங்க தஸ்தாவேஜுகள் முழுமையும் சிங்கள மொழியிற் போலவே

(12-ம் பக்கம் பார்க்க)

"உன் அழகின் போதையிலே ராதே ராதே
என் உள்ளம் வெறி கொள்ளுதடி ராதே ராதே"

என்று சொல்லும்படி நீங்கள் கவர்ச்சியாயிருக்க இதோ !!
எஸ்லெட் சுப்பர்லோன் ஜோர்ஜெட் !!!

எஸ்லெட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்
கசங்காதது, சுருங்காதது கண் கவர்
மங்காத பல நிறங்களிலும், கருத்தைக்
கவரும் நவீன டிசைன்களிலும்
எங்கும் கிடைக்கும்.



குறைந்த விலை, சிறந்த தரம் என்பனவே
எஸ்லெட் சுப்பர்லோன் ஜோர்ஜெட்டை
ஏனைய ஜோர்ஜெட்டுகளுக்கெல்லாம்
முன் வரிசையில் நிற்க வைக்கின்றன.

இன்று மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைநேரம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்

ஏக விநியோகஸ்தர்கள்:—

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி, கொழும்பு. மொத்த வியாபாரப் பகுதி. 50, கெய்சர் வீதி.

—Mvads 513/60—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறித்து தனிநபர்

## சுதந்திரத்தைப் பாதுகாப்பது வெறும் பகற் கனவே

### ஜனநாயகம் வாழவேண்டுமானால் அபிப்பிராய சுதந்திரம் நசுக்கப்படலாகாது

### பாராளுமன்றத்தில் தமிழரசுத் தந்தை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றதையிட்டு நான் ஆரம்பத்திலேயே என் பாராட்டுதலைத் தெரிவிக்க விரும்புகிறேன். தீய எதிர்ப் பிரசாரங்களுக் கூடாக இவர்கள் போட்டியிட்டு, ஜனநாயக தேர்தல் ஒன்றின் மூலம் முதலிடம் பெற்றிருக்கிறது சுதந்திரக் கட்சி.

சிம்மாசனப்பிரசங்கத்தை தமிழிலும் நிகழ்த்தியது இவர்களின் மிகவும் சிந்தனை நிறைந்த செயல். நான் மாத்திரமல்ல, எனது கட்சியும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் இதுபற்றி மகிழ்ச்சியடைகிறோம். தமிழ் பேசும் மக்களுக்கும் சிங்கள மக்களுக்குமிடையே சுமுக உறவுகளை ஏற்படுத்துவதில் இந்த அரசாங்கம் முனைந்து நிற்கும் என்பதற்கு இது முன்னோடியாய் அமைந்திருக்கிறது என்றே நான் கருதுகிறேன்.

#### அவர்கள் நடத்தை

கடந்த ஜூலை 20ந் தேதி தேர்தலில், பல்வேறு கட்சிகளும் எவ்வாறு நடந்து கொண்டன என்பதை இச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடுவது எனது கடமை. ஐக்கிய தேசியக் கட்சி தமிழரைத் தாழ்த்தும் கேவலமான இயக்கமொன்றை நடாத்தியது. இக்கட்சியின் ஆதரவாளர்களும் பத்திரிகைகளும் இவர்களுக்குப் பக்கப்பாட்டுப் பாடின. பொய்களைக் கூறவும் உண்மைகளைத் திரிக்கவும் இவர்கள் தயங்கவில்லை. ஆனால் இந்த மட்டமான வழியை சுதந்திரக் கட்சி பின்பற்றவில்லை என்பது பாராட்டுதலுக்குரிய செயல். ஆகவே ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களுக்கெதிராகச் செய்த கருத்தற்ற பிரசாரத்தில் ஈடுபடாது, மக்கள் தேர்தலில் தீர்ப்பளித்தார்கள் என்பது எமக்குப் பெரிதும் ஆறுதலூட்டுகிறது.

#### போராட்டம் முடிந்ததா?

ஆனால் இத்துடன் எமது கட்சியினதும் தமிழ் பேசும் மக்களினதும் அபிலாஷைகள் அனைத்தும் நிறைவேறிவிட்டன என்று யாரும் நினைத்துவிடக்கூடாது. இனிமேல் எமக்குப் போராடுவதற்கெதுவும் இல்லை என்று கருதுவதும் பெருந் தவறு. நல்ல சகுனத்துடன் ஆரம்பித்திருக்கிறோம்; நீண்ட பாதையில் பயணம் செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்; பல இலட்சியங்களுக்காக உழைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் இதை மாத்திரம்தான் நாங்கள் இதுபற்றிக் கூற முடியும்! எங்கள் கட்சி அங்கத்தவர் முன்னறிவித்தல் செய்திருக்கும் பிரேரணைகளில், எமது பிரதான இலட்சியங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இவற்றில் முக்கியமானது சமஷ்டிக் கொள்கையைப் பற்றியது.

#### சமஷ்டி என்றால்......?

சமஷ்டி என்பது ஏதோ எமது கட்சியால் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதுமையல்ல. இனம், மதம், ஆசாரம் ஆகியவற்றால் வேறுபட்டு நிற்கும் மக்களிடையே, ஒரு நாடு என்ற ஒருமைப்பாட்டை வளர்க்கும் சாதனமே சமஷ்டி. நான் குறிப்பிட்ட வேற்றுமைகளால் தோன்றக்கூடிய பிரச்னைகளைத் தீர்ப்பதில் சமஷ்டிக் கொள்கை ஏனைய நாடுகளில் நல்ல வெற்றிகளை அளித்திருக்கிறது.

எத்தனையோ நாடுகளில் இயங்கி வரும் பிரபல்யமான அரசமைப்பு முறையே சமஷ்டி. சமஷ்டி ஆட்சி பெரிய நாடுகளில்தான் இயங்க முடியும் என்பது தவறு. யூகோஸ்லேவியா, சுவிட்சர்லாந்து போன்ற சிறிய நாடுகளிலும், ஐக்கிய அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா போன்ற பெரிய நாடுகளிலும் இவ்வாட்சி முறை திறம்பட இயங்கி வருகிறது.

#### நாகர்கள்

சென்ற மாதந்தான் திரு நேரு நாகர்களுக்கு இந்திய சமஷ்டிக்குட்பட்ட தனி இராச்சியம் வழங்க இணங்குவதாக அறிவித்தார் என்பது இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிடக்கூடியது. ஏனெனில் நாகர்கள் நாகரிகத்தில் பின் தங்கிய பூர்வீக மக்கள்! அவர்கள் வசிக்கும் பிரதேசத்தின் பரப்பு 6000* சதுர மைல்! அவர்களின் எண்ணிக்கை 4 லட்சம் மாத்திரந்தான்!

இணைப்பாட்சியை எதிர்த்துப் பேசுபவர்கள் எமக்கு நேரடியாக பதில் கூறுகிறார்கள் இல்லை. அதற்குப் பதிலாக அவர்கள் சுற்றி வளைத்துப் பிதற்றித் தங்களின் அறிவீனத்தையும் நேர்மைக்குறைவையும் தாங்களாகவே காண்பித்துக்கொள்கிறார்கள்! இணைப்பாட்சி என்றால் பிரிவினை என்பது இவர்களின் பிரசாரத்தில் ஒன்று. அறிவுள்ள எந்த ஒருவரும் இத்தகைய நேர்மையற்ற கூற்றைக் கூறமாட்டான். சமஷ்டி என்பது பிளவோ பிரிவினையோ அல்ல. பிரிவினைக்குப் பதிலாக, சமஷ்டி என்றால் ஒற்றுமை என்றே பொருள்படும். ஒரு நாட்டினுள் பல்வேறு அபிலாஷைகளையுடைய மக்கள் ஒரே நாட்டில் ஒரே மத்திய ஆட்சியில் இணைந்து ஒன்றுபடும் சூத்திரமே இணைப்பாட்சி. இணைப்பாட்சி இயங்கி வரும் அமெரிக்காவையோ, சுவிட்சர்லாந்தையோ, இந்தியாவையோ பிரிந்து பிளவுபட்டிருக்கின்றன என்று எவராவது கூற முடியுமா? அறிவாற்றலும் அரசியல் அனுபவமும் உடைய தலைவர்கள் சிலர் சமஷ்டிக் கட்சி நாட்டைத் துண்டுபோட முயலுகிறது என்று கூறுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. இந்தப் பைத்தியம் எதுவும் எங்கள் கட்சியைப் பிடித்துவிடவில்லை. மொழிப் பிரச்னை பாரதூரமான ஒன்றாகிவிட்டது. நாட்டில் மீண்டும் அமைதி ஏற்படும் பொருட்டு அரசியல் திட்டத்தை மாற்றி அமையுங்கள் என்றே நாம் கோருகிறோம்.

#### பூச்சாண்டி!

வேறு ஒரு மோசடியான காரணமும் கூறுகிறார்கள். தமிழரசு ஒன்று ஏற்பட்டால் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்குள் பெருவாரியாகத் தமிழர் வந்து குடியேறுவார்களாம்! நிலைமையை முற்றிலும் தப்பாகத் திரித்துக் கூறும் கூற்று இது. இணைப்பாட்சியில் குடியேற்ற வெளியேற்ற விவகாரங்களின் அதிகாரம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பிலுள்ள ஒன்று. எனவே


திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்

இணைப்பாட்சியில் ஏற்படும் தமிழரசு தான் நினைத்தபடி வெளியாரைக் குடியேற அனுமதிக்க முடியாது. கள்ளக் குடியேற்றம் நடப்பதையும் அனுமதிக்க முடியாது.

அடுத்த எமது முக்கிய பிரச்னைகள் குடியுரிமை, வாக்குரிமை, மொழியுரிமை ஆகியனவாகும். இவைபற்றி எமது கட்சி திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பித்திருக்கிறது. அவற்றைப் பிரேரித்த எமது கட்சி அங்கத்தவர்கள் அவைபற்றிப் பேசுவார்கள். ஆகவே நான் அவைபற்றி சபையின்நேரத்தை அபகரிக்கப்போவதில்லை ஆனால் சிம்மாசனப் பிரசங்கத்திலுள்ள இரண்டு விஷயங்களில் நாங்கள் மாறுபட்ட கொள்கையுடையவர்கள்.

#### பாடசாலைகள்

அரசாங்கம் பத்திரிகைகளை எடுப்பதையும் பாடசாலைகளை எடுப்பதையும் பற்றி நான் சில வார்த்தைகள் கூற வேண்டும். இவ்விஷயங்கள்பற்றி காலித் தொகுதிப் பிரதிநிதி (திரு தகநாயகா) சிந்தனையைத் தொடும் அழகான பிரசங்கம் ஒன்றை நேற்று நிகழ்த்தியிருந்தார். இவ்விரு விஷயங்களிலும் நேற்று அவர் கூறிய ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஆமோதிக்கிறேன். அவர் கூறியதோடு இன்னுமொரு விஷயத்தைச் சேர்த்துக்கொள்ள வேண்டும். கல்வி மந்திரியாக இவர் இருந்தபொழுது பாடசாலைகள் விஷயமாக ஒரு தனிப்பட்ட சம்பாஷணையின் போது சொன்னார்:-

"மொழிப் பிரச்னையில் கைவைத்தோம்; நாட்டை இரண்டாக்கினோம். பாடசாலைகளில் கை வைக்கிறோம்; மீண்டும் நாட்டை இரண்டாக்கப்போகிறோம்!"

இவரின் இந்தக் கூற்றை நான் முற்றிலும் ஆதரிக்கிறேன். பாடசாலைகளில் கை வைப்பதின்மூலம் நாட்டை நிச்சயமாக இரண்டாக்கத் தான்போகிறீர்கள்!

#### காத்திரமான பணி

கடந்த காலத்தில் கல்வித் துறையில் மிகப் பெரும் தொண்டாற்றிய சில ஸ்தாபனங்கள் இருப்பது உண்மைதான். ஒரு நூற்றாண்டு காலமாக இவை ஆற்றிய தொண்டின் காரணமாக பாடசாலைகளையும் ஏனைய கல்வி ஸ்தாபனங்கள் பலவற்றையும் கட்டி எழுப்பியிருக்கிறார்கள் இது காரணமாக, ஏனையோரிலும் பார்க்க இந்த ஸ்தாபனங்களுக்கிருக்கும் வசதிகள் வல்லமைகள் சிறிது கூடக் குறையவாயிருக்கலாம். ஆனால் ஒன்றை மட்டும் நாம் மறந்துவிடக்கூடாது. மற்றவர்கள் கல்வித்துறை பற்றிக் கவனிக்காமலோ அந்தத் திசையில் பணியாற்றச் சித்தமில்லாமலோ இருக்க அத்தக்காலத்தில் இந்த ஸ்தாபனங்கள் லட்சக்கணக்கான பணத்தை கல்வித்துறையில் வாரியிறைத்திருக்கின்றன; காத்திரமான பணிபுரிந்திருக்கின்றன. எனவே இந் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு இவ்வித பணி புரிந்தவர்களுக்கு அரசாங்கம் நன்றி கூறக் கடன்பட்டிருக்கிறது. இதை நாம் மறந்துவிடுவதற்கில்லை.

#### பதேச்சாதிகாரமும் ஜனநாயகமும்

ஏனையவர்களிலும் பார்க்க இந்த ஸ்தாபனங்களுக்கிருக்கும் அனுகூல நிலையை மாற்றி வைக்க வேண்டுமானால் புரட்சிகரமான வழியில் ஒரேநாளில் இதைச் சாதித்துவிட முயலக்கூடாது. அனைவருக்கும் ஒரேயளவு அனுகூல நிலையை ஏற்படுத்துவதால் படிப்படியாகக் காலப்போக்கில் இதைச் சாதிக்க முயலவேண்டும். இந்த வழியைத்தான் ஜனநாயகம் அனுமதிக்கிறது. வெட்டொன்று துண்டு இரண்டென்ற புரட்சிகரப் போக்கு யதேச்சாதிகாரமானது. இந்த அரசாங்கம் யதேச்சாதிகாரத்தை ஒழிக்குமென்றும் வாக்காளர்க

(12ம் பக்கம் பார்க்க)

*இலங்கை அடக்கு... [illegible] மாகாணங்களின் பரப்பு [illegible] சதுர மைல். இலங்கை[illegible] பேசும் மக்களின் எண்ணிக்கை 25 லட்சம்.

## எஸ். ஜே. வி. யின் திருத்தப் பிரேரணை

சிம்மாசனப் பிரசங்கத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி நான்கு திருத்தப் பிரேரணைகளைச் சமர்ப்பித்தது. முதலாவது திருத்தப் பிரேரணையை தமிழரசுத் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் தாமே பிரேரித்து இப்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் சொற்பொழிவைப் பாராளுமன்றத்தில் நிகழ்த்தினார். திரு. செல்வநாயகம் பிரேரித்த முதல் பிரேரணையின் தமிழாக்கம் இது:

"அரசாங்கம் அரசியல் திட்டத்தைத் திருத்தி இலங்கையைக் குடியரசாக்க நோக்கங் கொண்டிருப்பதைத் தெரிவித்தபோது, ஒற்றையாட்சி முறை ஒரே இன ஒரே மொழி பேசும் மக்கள் சமுதாயத்தில் மாத்திரமே நீதியுடன் இயங்க முடியுமென்பதை அரசாங்கம் கவனிக்கத் தவறி விட்டது. இரண்டு மொழி பேசும் மக்கள் பூர்வீக காலமாகவாழும் இலங்கையில், இந்த ஒற்றையாட்சி, நீதிமுறைக்கு மாறாகத் திணிக்கப்பட்டது. இதனால் 25 லட்சம் தமிழ் பேசும் மக்கள் 65 லட்சம் சிங்களப் பெரும்பான்மையின் தயவில் அடிப்படை ஜனநாயக உரிமைகளை இழந்து வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. எனவே சிங்களப் பெரும்பான்மையினரின் அரசியல், கலாச்சார பொருளாதார அபிலாசைகளிலிருந்து த. பே. மக்களின் அபிலாஷைகள் மாறுபடும் கட்டங்களில் த. பே. மக்களின் நலவுரிமைகளோ தவிர்க்க முடியாதவாறு நசிந்து போகின்றன."

"இந் நிலை தொடர்ந்து [illegible] பேசும் இனம் [illegible] [illegible] வகையால் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கே இது நிங்கு விளைவிப்பதாயிருக்கிறது. பலவின பன்மொழிக் கூட்டத்தினர் வாழும் நாடுகளாகிய கனடா, இந்தியா, சோவியத் யூனியன், சுவிற்சர்லாந்து, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகளில் மொழி, இனவாரிப் பிரச்னைகளுக்கு இணைப்பாட்சி தக்க பதிலளித்திருக்கிறது பல்வேறு மக்களின் உரிமைகளை நிலைநாட்டும் அதே நேரத்தில் அந்நாடுகளின் ஒற்றுமையையும் வளர்த்திருக்கிறது. ஐக்கிய இலங்கைக்குட்பட்ட மொழிவாரித் தமிழரசு ஏற்படுத்துமாறாக பிரமிக்கத் தக்க பெரும்பான்மையுடன் தமிழ் பேசும் மக்கள் தேர்தலில் தீர்ப்பளித்திருப்பதினால் அரசியற் திட்டத்தை சமஷ்டியாக மாற்றும் நோக்கம் எதையும் மகாதேசாதிபதி யவர்களின் பிரசங்கத்தில் காணக்கூடியதாக இல்லை நூற்றாண்டுக் காலமாக இரு இனங்களுக்குமிடையே இருந்து வந்த தொடர்புகளை மேலும் வலியுறுத்த இருக்கும் ஒரே மார்க்கம் சமஷ்டி இணைப்பில் தமிழரசு ஏற்படுத்துவதேயாகும். இந் நாட்டில் வாழும் மக்களிடையே தேசிய ஒற்றுமையையும், சாந்தியையும் சுபிட்சத்தையும் ஏற்படுத்தக்கூடிய ஒரே வழி இணைப்பாட்சியேயாகும்.

எனவே இலங்கையைக் குடியரசாக்கும் பொருட்டு, அரசியல் திட்டத்தை திருத்தும் போது, இலங்கையில் இணைப்பாட்சி ஏற்படும் வகையில் திருத்தம் எதுவும் செய்யும் கருத்தைத் தெரிவிக்காதது பற்றி வருத்தப்படுகிறோம்"

ஆரோக்கியாமிர்தலேஹம்

நோஞ்சம்ரோத கவசம்

[illegible]

ரூ 5.50 ரூ 3.00 ரூ 1.00

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET, COLOMBO

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பின் வகைகள்

(3)

### விரியன்

இதன் பெயர் காரண இடுகுறிப்பெயராக அமைந்திருப்பதைக் காணலாம். இவற்றின் ஆறு வகைகளுண்டு. (i) பெருவிரியன், (ii) இரத்த விரியன், (iii) செவ்விரியன், (iv) திராவிரியன், (v) புள்ளி விரியன், (vi) புல்விரியன். இவற்றின் தாய்ப்பாம்பு சூல் கொண்டு பருவகாலத்தில் முதுகால் வெடித்துத் தான் இறந்து விடுகின்றது. அதற்குள்ளிருந்து குட்டிகள் ஆறும், இப்பெயர்களுடையனவாய், பிறந்த உடனேயே சீவிக்கும் சக்தியுடையனவாய் இருக்கின்றன. இவற்றுள் இரத்த விரியன் கூடிய விஷமுடையதாயிருக்கும். இதனால் தாக்கப்பட்டவர்களின் கடிவாயிலிருந்து இரத்தம் ஒடிக்கொண்டேயிருக்கும். வாயால் இரத்தம் வரும், மலம், சலம், வேர்வை மூக்குச் சளி முதலிய எல்லாக் கழிவுப் பொருட்களும் இரத்தமாக வரும். இதைக் கண்டு நோயாளி பயப்படவேண்டியதில்லை, விஷம் கலந்த இரத்தத்தை இரத்தாசயம் ஏற்காது விடவே அவை கழிவுப் பொருள்களாய் வெளியே போகவேண்டியவை யாகின்றன. ஆகையால் இரத்தப் போக்கைத் தடைப்படுத்தல் கூடாது. உடலுக்குள் கட்டிப் புண்ணுகவும் கூடும்; நெஞ்சில் இரத்தம் உறைந்து எவியுண்டாகி, வலி ஏற்படவும் கூடும் இதனுல் தாக்கப்பட்டவர்கள் விரைவில் வைத்தியரிடம் செல்லுதல் வேண்டும்.

### விரியனில் நான் கண்ட ஆராய்ச்சி

பல நாட்களாக அடுக்கியிருந்த பழங்கிடுகை எடுத்

விஷ வைத்தியர்
க. சிற்றம்பலம்

துத் துப்பரவித்த போது, ஒரு சிற பாம்பு வயிறு பெரிதாகவும் மடங்கிய, தயங்கிய நிலையில் மெல்ல மெல்ல நகரத் தொடங்கியது. இதை உற்று நோக்கிக் கொண்டிருந்த நான் வேலை செய்து கொண்டு இருந்தவர்களில் ஒருவனைக் கூப்பிட்டுக் காட்ட, அவன் கிழுவந்தடியால் மெதுவாகத் தள்ளவே பாம்பு முதுகுப் புறத்தால் வெடித்ததும், சிறு குட்டிகள் ஆறு அதனுள்ளிருந்து வெளிவந்தன. அவை மெல்ல, மெல்ல நகரத் தொடங்கின. ஆனல் குட்டிகள் ஆறும் ஒரே தன்மையானதாகக் காணப்படவில்லை. சிறிதும் பெரிதுமாகக் காணப்பட்டன. இந்நிகழ்ச்சியைக் கண்ட என்னுள்ளம் இறைவனது படைப்புத்தன்மையையும் "கல்லினுள் தேரைக்கும் கருப்பையுயிர்க்கும்" அவன் அருள் பாலிக்கும் தன்மையையும் உணரத் தொடங்கியது. விரியன் என்ற பெயரைச் சித்தர்கள் காரண இடுகுறிப் பெயராகவே விட்டார்கள் என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

### வழலைப்பாம்பு

இதிற் பல இனங்களுண்டு. இதனாலே தாக்கப்பட்டவர்கள் மயக்கமுடையவர்களாகவும், நெஞ்சில் கபம் கொண்டவர்களாகவும், கண் சிவந்து கருவிழி இறங்கிய நிலையானதாகவும், தண்ணீர்த் தாகத்தால் தவிப்பவர்களாகவும், வேர்வை அதிகமாயுடையவர்களாகவும் காணவரும். இவற்றைக் கருவழலை செவ்வழலை எனப் பிரிக்கலாம். இவை வாழைத் தோட்டங்கள், புற்றரைகள் முதலிய இடங்களில் வசிக்கும். மக்களைத் தாக்கும்போது ஒளித்திருந்தே தாக்கும். இவை படம் எடுக்கா.

### புடையன்

இவற்றிலும் பல இனங்கள் பல தன்மைகளுள்ளனவாக உண்டு. இவற்றின் முதுகில் முத்திரை போன்ற புள்ளிகள் உண்டு. உருவத்திலும் பல வித்தியாசங்களுண்டு. வசிக்கும் இடத்துக்கேற்ப நிறம் வித்தியாசமானது. இது கொடிய விஷமுடையது. இது தாக்கினுல் கண் பார்வை குன்றி விடும், காது கேட்காது, தாக்கப்பட்ட இடத்தில் நோவு அதிகமாக இருக்கும். இவை கள் பெருமரங்கள், பாழான வீடு, பாழான கோவில், புல் செடிகள் முதலியவைகளிலும் வசிக்கும். இவை இரவிற் கிடக்கும் போது எருமைச் சாணி, காய்ந்த தென்னம் கோழை போன்ற உருவமாகத் தலையை மேலே வைத்துக் கொண்டு அசையாது படுத்திருக்கும். பாம்புண்ணும் எண்ணெய் இவை கிடக்கும் இடத்தில் வராது. தவளை எலி முதலியன கிட்டச் சென்றதும் எட்டிப் பிடித்துக் கொள்ளும். மக்களும் அதற்குக் கிட்டச் சென்றால் எட்டித்தாக்கும். கடிவாயிலிருந்து இரத்தம் ஓடக் கூடியதாகவே தாக்கும். அவற்றின் உருவத்துக்கு ஏற்புமாதிரியே காயம் ஏற்படும். கண்ணாடிப் புடையன் எற்றைப் புடையன்களிலும் உருவத்திலும் விஷத்திலும் வித்தியாசமான தன்மையானது. பளபளப்பானதாக இருக்கும். புடையன் பாம்பு உருவத்தில் பெரியதாகவும் உண்டு.

### கொம்பேறி மூக்கன்

இது சாரைப் பாம்பு போன்ற உருவமுடையது. மக்களைத் தாக்கிய உடனே அருகிலுள்ள மரத்தில் ஏறி விடும். மரத்தில் ஏறியவுடன் தாக்கப்பட்டவன் உடனே மயங்கிவிடுவான். மயங்கியவனை மஞ்சட் சீலையால் மூடிவிட்டு, வைக்கோலால் பாடைசெய்து மேளம் அடித்து, அழுது, பாடை கட்டி, பாடையிற் பாவையை வைத்து இரு நாயாருக்கிடையில் வைத்துத் தண்ணீர் தெளித்து பாவையைக் கொளுத்தியவுடன், அப்புகை கண்ட அரவம், தான் கடித்தவன் இறந்து விட்டான் என்ற எண்ணத்துடன் நிலம் நோக்கி இறங்கும். அப்பொழுது மயங்கிக் கிடந்தவன் நித்திரை விட்டு எழுந்தவன் போல எழுந்திருப்பான் இது எனது அநுபவ முறையினுலும் கண்ட உண்மையாகும். இது பாட்டிகதை யென எண்ணுதல் கூடாது. பெயருக்குப் பொருத்தமாகவே அதன் செயல் இருப்பதை நாம் காணலாம்

### சாரைப்பாம்பு

இது எங்கும் அதிகமாக வசிக்கும். இது மனிதரைத்

(13-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'காக்காய்பிடிப்பது' என்றால் என்ன?

## கால் கை பிடிப்பதன் சிதைவு தான்!

## வள்ளியும், குசேலரும் கண்வளர முறையே முருகனும் கண்ணனும் கால் வருடினார்கள்

## தென்றல் கால் வருடியது பற்றிச் சம்பந்தர் தேவாரம் பாடினார்

11ல் நாட்களுக்கு முன் நாடக மேடையில் பாடி வந்த பாட்டு ஒன்று எங்கும் அடிபட்டுக்கொண்டிருந்தது.

கட்டிலுண்டு மெத்தையுண்டு
—தங்கமே தங்கம்
கால் பிடிக்கத் தாதியுண்டு
—தங்கமே தங்கம்!

என்பது அந்தப் பாட்டு.

ஒருவன் பெண்ணிலிடம் தன் வள வாழ்வைக் கூறுகிறான். "நீ என்னை மணம் செய்து கொண்டு விட்டால் என் மாளிகையில் சுகமாக வாழலாம். இன்ப வாழ்வுக்குரிய வசதிகளை உடையவன் நான். இனிய விருந்தை உண்டு கவலையின்றி உறங்கலாம்" என்று சொல்கிறான். வாழ்க்கையில் தலைமையான காரியங்கள் இரண்டு; உண்பதும் உறங்குவதும். அந்த இரண்டும் சரியானபடி அமைந்தால் இன்பம், இன்பம் இல்லாவிட்டால் துன்பந்தான்.

உறக்க இன்பம் கிடைக்கும் என்பதைச் சொல்கிறான். உறங்குவதற்கு வேண்டிய வசதிகள் இருக்கின்றனவாம். கட்டில் இருக்கிறது; மெத்தை இருக்கிறது; படுத்துக்கொண்டால் கால் பிடிக்கத் தாதிமார் இருக்கிறார்கள்.

கால் பிடித்தால் தூக்கம் வரும். அது ஓர் இரகசியம். கட்டிலும் மெத்தையும், உண்டாக்காத தூக்கம் கால் வருடுதலால் வந்துவிடும். அதற்கென்று தாதியரும் ஏவலாளர்களும் செல்வர்களின் வீட்டில் இருப்பார்கள்.

●

அன்புடைய காதலர்கள் கால் வருடும் பணியை ஏவலர்களுக்கு அளிக்க மாட்டார்கள். தம் கணவன்மாருடைய அடியை வருடி இளைப்பாற்றித் தூங்கச் செய்வது அன்புடைய மனைவியர் அறிந்த கலை. இலட்சிய மனைவியாக வாழ்ந்த திருவள்ளுவர் மனைவியாகிய வாசுகியார் இந்தக் கலையில் தேர்ந்தவர். தாமே அடிசில் அட்டு வள்ளுவருக்குப் பரிமாறும் அன்புடையவர், வள்ளுவருடைய உணவுக்கு இனிமையும் உறக்கத்துக்கு அமைதியும் தரும் பெருமாட்டியார் அவர். தம் கணவர் துயிலப் புகுந்தால் அவருடைய அடியை வருடுவார். அதனால் இன்றுயில் நாயனாரைக் கவ்விக் கொள்ளும். அவர் தூங்கிய பின் துயில்வார் வாசுகியார். ஆனால், அவர் விழித்தெழுவதற்கு முன் எழுந்து விடுவாராம். வாசுகியாருடைய பிரிவினால் வள்ளுவர் உறக்கத்தை இழந்தார். அடிவருடித் தூங்கும் பழக்கமுடையவரல்லவா?

"அடிசிற் கினியாளே, அன்புடையாளே
படிசொல் தவிராத பாவாய்—அடிவருடிப்
பின் தூங்கி முன்னெழூஉம்
பேதையே, போதியோ!
என் தூங்கும் என்கண் இரா"

கால் பிடிக்கும் தாதியாக அன்புடை மனைவியே பணி செய்யும் இன்ப வாழ்வு வள்ளுவருக்கு வாய்த்தது.

●

அன்பு மிகுதியினால் காதலனும் காதலிக்குப் பணிவிடை செய்வதுண்டு. உலகில் வாழ்ந்த மக்களைப் பற்றிச் சொன்னால் ஒருகால் உண்மையாகாமற் போகலாம். அருணகிரிநாதர் முருகனுடைய காதலைப்பாடுகிறார். அவன் வள்ளி நாயகியினிடம் வைத்த காதலால் அவளுக்குப் பலபடியாகப் பணிவிடை செய்து மகிழ்வதைப் பல இடங்களில் பாடியிருக்கிறார். கற்பனையேயானாலும் அப்படிப் பாடுவதில் இன்பம் காணுவது பக்தர்களுக்கு இயல்பு.

வள்ளி நாயகியைத் தூங்க வைக்கிறான் முருகன். அடி வருடினால் தூக்கம் வந்து விடுமல்லவா? அவன் வள்ளியின் பாதங்களை வருடுகிறானாம்.

"பாகு கனிமொழி மாது
குறமகள்
பாதம் வருடிய மணவாளா!"

என்று திருப்புகழில் பாடுகிறார்.

●

ஆணவன் மனைவியிடம் மாத்திரமா அன்பு இருக்கிறது? தந்தைக்கும்

**கி. வா. ஜகந்நாதன்**

மகனுக்கும் இடையே அன்பு உண்டு; தாய்க்கும் குழந்தைக்கும் இடையே அன்பு உண்டு; நண்பர்களிடையே அன்பு உண்டு. அவற்றில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை. அன்பினால் கால் வருடும் பணியை யாரும் மேற்கொள்ளலாம்.

இந்த உண்மையைக் கண்ணன் புலப்படுத்துகிறான். அவனைத் தேடிக் கொண்டு அவனுடைய இளம் பருவ நண்பரான குசேலர் வருகிறார். அவன் வாழும் துவாரகையை நோக்கிப் பல காவதம் கடந்து வருகிறார். மெலிந்த உடலும் தவத்தால் சுருங்கிய உணவும் படைத்த அவர் எப்படியோ கண்ணனை அடைந்து விடுகிறார். கண்ணன் அவரைக் கண்டவுடன் ஆராத காதல் மீதூற ஓடிச் சென்று தழுவிக் கொள்கிறான். வேண்டிய உபசாரங்களைச் செய்கிறான். அறுசுவை உண்டி அளிக்கிறான். உண்ட பிறகு இளைப்பாறச் செய்கிறான். கட்டிலைப் போட்டு மெத்தையை விரித்துப் படுத்துக்கொள்ளச் செய்கிறான். "பாவம்! எவ்வளவு தூரம் நடந்து வந்திருக்கிறாய்! சுகமாகத் தூங்கு" என்று சொல்லிக் கால்களை வருடுகிறான். "இந்த மலரடி இரண்டும் வழி நடந்து இளைப்புற்றனவே?" என்று சொல்லிக் கால்களை வருடுகிறான். அப்படி வருடும்போது அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி உண்டாயிற்றாம். தன் நண்பனுக்குத் தன் செல்வத்தால் உபசாரம் செய்வதை விடத் தன் கையால் செய்யும் உபசாரம் அவனுக்கு உயர்வாக இருந்தது. அடியை வருடித் தூங்கப்பண்ணுகிறான்.

வழிநடந் திளைத்த வேரும்
மலர் அடி இரண்டு மென்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல
வருடினன் கமலக் கண்ணன்.

என்பது குசேலோபாக்கியானம்.

அடி வருடித் துயிலப் பண்ணும் கலையில் முருகனும் கண்ணனும் சிறந்தவர்கள் போலும்!

● ... உலகத்தைப் ... பார்த்தோம். மக்களின் வாழ்வை இயற்கையும் நடத்திக் காட்டுவதாகக் கவிபுனைதல் கவிஞர் இயல்பு. மக்கள் வாழ்க்கையைக் கண்டு தம் உணர்ச்சியைக் காட்டுவதாகவும், மக்களைப் போலவே செயல் புரிவதாகவும் சொல்வது கற்பனையின் வகைகள். இந்தத் திறம் எல்லா மொழிகளிலும் உண்டு.

திருநெறித் தமிழ் பாடிய நால்வர்களில் ஒருவரான சம்பந்தர் இயற்கை எழிலைப் பாடுவதில் வல்லவர். முத்தமிழ் விரகர் என்னும் சிறப்புக்குரியவர். இயற்கைக் காட்சிகளைக் கற்பனையும் தன்மை நவிற்சியும் அமையப் பாடுபவர் அவர்.

அடிவருடித் துயில்கொள்ளும் அன்பு வாழ்வை அவர் இயற்கையிலே காணுகிறார். மருத நில வளத்தைப் பாடும் போது அப்படி ஒரு காட்சியை அமைக்கிறார்.

மருதத் தெய்வத்தின் தனியரசாட்சியாக விளங்குவது சோழ நாடு. அங்கே திருவையாறு சிறந்த தலம்; இயற்கை எழில் குலுங்கும் ஊர். திரிபுரத்தை எரித்த வில்லாளன், கயிலாய மலையான் அங்கே கோயில் கொண்டிருக்கிறான்.

நீர்வளமும் நிலவளமும் நிறைந்த ஊர் அல்லவா? நெல்லும் கரும்பும் நிமிர்ந்து வளர்கின்றன. கரும்புத் தோட்டத்துக்கு நம்மை அழைத்துச் செல்கிறார் சம்பந்தப் பெருமான். எங்கே பார்த்தாலும் கரும்புகள் தளதள வென்று வளர்ந்திருக்கின்றன. ஒரு கவலையும் இன்றி வளரும் செல்லப் பிள்ளைகள் போல அவை நிற்கின்றன.

"கவலையில்லாமல் இவை கண் வளர்கின்றனதைப் பாருங்கள்" என்கிறார் சம்பந்தர். கண் என்பது கணுவுக்குப் பெயர். கரும்பு வளரக் கணுவும் வளரும். கணுவின் வளர்ச்சியே கரும்பின் வளர்ச்சி என்று கூடச் சொல்லலாம். கணு முற்றினால் கரும்பு முற்றும். கரும்பு கண் வளர்கிறது; கணு வளர்ந்ததானால் வளர்ச்சி பெறுகிறது. அதோடு கவலையில்லாமல் சுகமாகத் தூங்குகிறது. கண் வளர்தல் என்பது தூங்குவதற்கும் பெயர்.

எங்கேயோ சிறு குன்றும் அதில் சோலையும் உள்ளன. அங்கே குயில்கள் இருந்து கூவுகின்றன. குழந்தையைத் தூங்கப் பண்ண வேண்டுமானால் தாலாட்டுப்பாட வேண்டும் அல்லவா? இங்கே கரும்பு கண் வளர்வதற்காகக் குன்றிலுள்ள குயில்கள் கூவுகின்றன. பாட்டு மாத்திரம் போதாது. காலை வருடினால் உடனே தூக்கம் வரும். இந்தச் செல்வக் குழந்தையை அடி வருட யார் இருக்கிறார்? மிக மிக மென்மையான கரமுடையவர்களாக இருந்தால் சுகமாக இருக்கும். இங்கே அப்படி ஒருவர் வருகிறார். அமுதக் குழந்தையின் காலை வருடுபவர் அழுக்குக் கையோடு இருக்கலாமா? அவர் கை மணக்கிறது. மலர்களிலுள்ள மணம் அந்தக் கையில் மணக்கிறது. அவர் அடிவருடுகிறார்.

இவ்வளவு சிறப்புடையவர் யார்? நல்ல தென் திசையிலிருக்கும் மலர்களில் பாய்ந்து அங்குள்ள மணத்தை வாரிக்கொண்டு வந்த தென்றலார் அடிவருடுகிறார். தென்றலுக்கு மென்மை இல்லையென்று யார் சொல்வார்கள்? அதற்கு மந்த மாருதம் என்ற பெயர் இருப்பது தெரியாதா? தென்றல் வீசினால் தூக்கம் வரக் கேட்கவேண்டுமா?

வானமே விதானமாக வயலே மெத்தையாகக் குயில்கள் பாடப்பாடத் தென்றலார் அடிவருடச் செழுங் கரும்பாகிய செல்லக் குழந்தை தூங்குகிறது. புர மூன்றையும் எரித்த சிவ...

(15-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் கற்ற ருஷியர்....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கும் (800 ரூபிள்) சம்பளம் கிடைக்கிறது. பெரும்பாலும் மிக உயர்ந்த சம்பளம் 1000, 1500 ரூபிள் தான். ஆனால், விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோருக்கு மட்டும் 3000, 4000 ரூபிள்கள் சம்பளம் கொடுக்கிறார்கள்.

### ஜெர்மனியில் தாயுமானவர்

மாநாட்டிற்கு வந்திருந்த ஒரு ஜெர்மானிய அறிஞர் தமிழில் மிகவும் சரளமாகப் பேசி என்னைத் திகைக்க வைத்தார். அவர் தாயுமானவர் பாடல்களில் 400 பாடல்களை ஜெர்மனியில் மொழிபெயர்த்துள்ளாராம். அவர் பெயர் ஆர்னோ லெக்மான் (Arnolegman).

ருஷ்ய மாணவி ஒருத்தி ஸ்ருஜினியா என்ற பெயருடையவள் என்னுடன் தூய தமிழில் பேசினாள். வந்திங்க போனீங்க என்று பேசாமல் அங்குள்ள தமிழ் படித்தவர்கள் வந்தீர்கள், போனீர்கள் என்ற இலக்கண மரபுப்படி தமிழ் பேசுகிறார்கள். நல்ல தமிழ் பேச நாம் அங்கே போய்க் கற்றுக்கொள்ள வேண்டும் போலிருக்கிறது.

### தமிழில் பெயர்

தமிழ் நாட்டில் உள்ள நம்மில் பலபேர் நல்ல தமிழில் பெயர் வைத்துக்கொள்ளத் தயங்குகிறோம். ஆனால் தமிழ் கற்ற ருஷ்யர் ருடியன் (Rudeon) என்பவர் தமிழில் மிருந்த பற்றுக்கொண்டு தம் பெயரைத் தமிழ்ப் பெயராக வைத்துக்கொண்டிருக்கிறார். Rudeon என்பது சிவப்பான என்ற பொருள் படும். அதற்காக அவர் தம் பெயரைச் செம்பியன் என்று மாற்றி வைத்திருக்கிறார்.

ருஷ்யர்களின் இசை நடனம் பார்க்கத் தக்கது. ஒற்றைப் பெருவிரலில் நின்று கொண்டு உடலை வளைத்துச் சுழற்றி ஆடும் பெண்களின் காட்சி அழகுக் காட்சி. அவர்கள் அருமையாக மெய்ப்பாடுகளை வெளியிடுகிறார்கள்.

### உடனுக்குடன் மொழி பெயர்ப்பு

மாநாட்டில், ஒரு மொழியில் பேசுவதை உடனுக்குடனே, வேறு நான்கு மொழிகளில் மொழி பெயர்த்துக் கொடுக்கிறார்கள். இது விஞ்ஞானத்தினால் ஏற்பட்ட பெரிய வசதி. மாநாட்டிற்கு வந்திருந்தவர்கள் தமிழைப் பற்றி அறிந்து கொள்ள ஆவலுடையவர்களாக இருந்தார்கள். தமிழ் நூல்கள் வரலாற்று முடிவுகள் பற்றிப் பல கேள்விகள் கேட்டார்கள். உலகின் பல வேறு பகுதிகளிலும் தமிழைப்பற்றி அறிய வேண்டுமென்ற ஆவலும், ஆர்வமும் வளர்ந்து வருகிறது என்பதை அறிந்த... இந்த மாநாடு... பயனாயிருந்தது.

—'தென்றல்'

★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்
கருத்தைக் கவரும் வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்
முன்னணி வகிக்கிறது
லதா
கேம்பிரிக்
சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை பிளவுஸ் முதலியவைகளுக்குச் சிறந்தது.
இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
குண்டன் மால்ஸ்,
26, கெய்சர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 செப்டம்பர் மாதம் 11-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


## இந்தியாவுக்கே இழுக்கு!

இலங்கையைப்போலவே இந்தியாவும் சுதந்திரம் பெற்ற நாடு. இலங்கையை விட விஸ்தீரணத்தால் பரந்த நாடு; வளமும், வனப்பும், ஜனத்தொகையும் மிகுந்த நாடு இந்தியா.

இந்தியா சுதந்திரமடைந்த பின் இரண்டு ஐந்தாண்டுப் பொருளாதார அபிவிருத்தி நிர்மாணத் திட்டங்களை இந்திய அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டு வந்து நாட்டின் செழிப்பையும் செல்வக்கொழிப்பையும் அதிகரித்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதையே திரும்பத் திரும்பச் சொல்லித் தென் இந்திய காங்கிரஸ்வாதிகளும் பெருமைப்பட்டுக்கொள்ளுகிறார்கள்.

அப்படியிருந்தும் தென் இந்தியாவைப் பொறுத்த வரையில் வறுமைப் பேயின் கோரதாண்டவம் இன்னும் குறையவில்லையென்றே தோன்றுகிறது.

தென் இந்திய மக்கள்—பெரும்பாலும் தமிழ் மக்கள்—தங்கள் உயிரைக்கூடத் திரணமாக மதித்துக் கள்ளத் தோணிகளில் ஏறிக் காற்றிலும் கடலிலும் அலைந்து, இலங்கை நோக்கி வருவதேன்?

வட இந்தியர்கள் வயிற்றுப் பிழைப்புக்காக இப்படிக் கள்ளத் தோணி ஏறிக் கள்ளத்தனமாக எங்காவது குடியேறியதாகத் தெரியவில்லையே. அப்படியானால் 'தெற்குத் தேய்கிறது, வடக்கு வாழ்கிறது' என்று கூறப்படுவது உண்மைதானா?

ஈழத்தின் கரையோரத்தில் இரண்டு வாரங்களுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு கோரச் சம்பவம் நெஞ்சைப் பிழிகிறது. இந்தியாவில், குலசேகரன்பட்டணத்திலிருந்து 36 பேர் இலங்கை நோக்கிக் கள்ளத்தோணியில் புறப்பட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் மூவர் தாம் உயிருடன் இலங்கைக் கரையை அடைந்திருக்கிறார்கள். மற்ற 33 பேரும் பரகதியடைந்துவிட்டார்கள்!

அவர்களை ஏற்றி வந்த இரண்டு ஏஜண்டுகள்—அல்ல, இயமகாதகர்கள்—இலங்கைக் கரைக்கு சுமார் ஒரு மைல் தூரத்தில், கழுத்தளவு கடல் நீரில் வைத்து, 'இனி நீங்கள் எல்லாரும் நடந்தே போகலாம் கரை வந்துவிட்டது இங்கு ஆழமில்லை' என்று கூறி, அவர்களை ஏமாற்றிப் படகிலிருந்து இறக்கிவிட்டிருக்கிறார்கள்.

சிறிது தூரம் அவர்கள் நடந்து சென்றதும் ஆழம் அதிகரித்திருக்கிறது. அவர்கள் தவித்து ஓடிப் போய்த் திரும்பவும் படகில் ஏற முற்பட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த இரக்கமற்ற கல்நெஞ்சர்களான ஏஜண்டுகள் அவர்களை ஏறவிடாமல் துடுப்பினால் தாக்கிப் பலங்கொண்ட மட்டும் உதைத்துத் தள்ளிவிட்டார்கள். அந்தோ, பரிதாபம்!

உயிருக்கு மன்றாடி அபயம் கேட்டவர்களை நடுக்கடலில் அப்படியே தத்தளிக்க விட்டு விட்டு படகோடு திரும்பிவிட்டார்கள் ஏஜண்டுகள். 36 பேரில் 3 பேர்தான் பிழைத்தார்கள். 18 பேர்களின் சடலங்கள் ஈழக் கரையை வந்து அடைந்தன. 15 பேர் போன இடமே தெரியவில்லை.

நமது பிரஜைகள் இவ்வண்ணமாகப் பிறநாடுகளுக்கு பிழைப்புத் தேடிக் கள்ளத்தனமாகப் பிரவேசிப்பதும், பாதி வழியில் கடலில் அள்ளுப்பட்டுப் போவதும் இந்தியாவுக்குப் பெருமை தரும் சம்பவங்களாகா. இந்த உண்மையையே சமீபத்தில் சென்னைக்குச் சென்ற இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தவரும் மலைநாட்டுத் தமிழர் தலைவருமான திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் மிக்க உணர்ச்சியோடு எடுத்துக் கூறியுள்ளார்!

"இந்தியர்கள் கள்ளத்தனமாகவும், சட்டவிரோதமாகவும் இலங்கையுள் பிரவேசிப்பதைத் தடுக்கவும் தவிர்க்கவும் இந்திய அரசாங்கமும், இந்திய தேசிய காங்கிரஸும், இந்தியப் பொதுமக்களும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று திரு தொண்டமான் கூறியுள்ளார்.

"இத்தகைய கள்ளக் குடியேற்றம் இந்தியாவின் நற்பெயருக்கும், எல்லா நிலையிலும் ஓர் இழுக்காகும்" என்றும் அவர் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார்.

திரு தொண்டமானின் கருத்தை நாமும் பலமாக ஆதரிக்கிறோம்.

கள்ளத்தனமாக ஒருசில இந்தியர்கள் இலங்கையில் குடியேறுவதனால் இந்தியாவின் சுயமதிப்பு பாதிக்கப்படுவது ஒருபுறமிருக்க, இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களிலும் சச்சரவுக்கு இடமேற்படுகிறது.

இலங்கையிலுள்ள சிங்கள இனவெறியர்களும், பிற்போக்குவாதிகளும், தமிழ் மக்கள்மீது பழிசுமத்தும் தங்கள் வகுப்புவாதக் கொள்கைக்கு, இந்தக் கள்ளக் குடியேற்றப் பிரச்னையையும் ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி வருகின்றனர். எனவே, இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் நலனைக் குறித்தும் இந்தக் கள்ளக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

தமிழ் மக்கள் பெரும் கப்பலோட்டிகள் என்று சரித்திரப் புகழ்பெற்றவர்கள். அவர்கள் கலம் விட்டது பிறநாடுகளைப் போரில் வென்று வீர விருதும், வெற்றிக் கொடியும் நாட்டுவதற்காகவன்றி, வயிற்றுப் பிழைப்பை நாடிச் செல்வதற்காகவல்ல. அப்படிப்பட்ட தமிழ் மக்கள் கள்ளத் தோணிகளாக, இரப்பார்போல் ஈழம் நாடி வருவது கண்டு ஈழத் தமிழ் மக்களே வருந்த வேண்டியவர்களாயிருக்கிறார்கள். இந்த நிந்தனையைப் போக்கும் பணியில், இந்திய மத்திய அரசாங்கம்தான் பராமுகமாயிருந்தாலும் சென்னை அரசாங்கமாவது கண்திறந்து வழி [illegible] மாற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்ள [illegible] இறோம்.

# பிரிட்டனில் சிறுபான்மை இனத்தினர் உரிமைகள்

(செ. அழகரெத்தினம்)

பிரிட்டனிலுள்ள சிறுபான்மையினரான ஸ்கொட்டிஷ், உவெல்ஷ், ஐரிஷ் மக்களின் உரிமைகள் நூற்றுக்கு மேற்பட்ட வழிகளில் அங்கே அங்கீகாரம் பெற்றிருக்கின்றன. இலங்கைக்கு ஒற்றையாட்சியே ஏற்றது என்று கர்ச்சிக்கும் வீரசிகாமணிகளுக்கு இது புலப்படுவதில்லை. ஆனால் எடுத்ததற்கெல்லாம் 'பிரிட்டனைப் பார்' 'இங்கிலாந்தைப் பார்' என்று மாத்திரம் இவர்கள் கூறத் தயங்குவதில்லை!

இந்த அங்கீகாரம் அரசியல் துறையில் மாத்திரம் தான் இவர்களுக்கு உண்டு என்று நினைத்துவிடக் கூடாது. சர்வதேச விளையாட்டு போட்டிகளில்கூட* பிரிட்டனிலிருந்து (United Kingdom) ஆங்கிலக் கோஷ்டி, ஐரிஷ் கோஷ்டி, ஸ்கொட்டிஷ் கோஷ்டி, உவெல்ஷ் கோஷ்டி என காலபந்து றக்பி, உதைப்பந்தாட்டங்களில் விளையாட்டுக் கோஷ்டிகள் பங்குபற்றுவதை நாம் காணலாம்.

*பெருந்தரையில் தெற்கே இங்கிலாந்தும் வடக்கே ஸ்கொத்லாந்தும் மேற்கே வேல்ஸும் இருக்கின்றன. பெருந்தரைக்கு அப்பால் மேற்குப் பக்கமாக இருக்கும் தீவு ஐயர்லாந்து. ஐயர்லாந்தின் தெற்கு பகுதியில் சுதந்திர ஐரிஷ் குடியரசு உண்டு. வட ஐயர்லாந்து ஆட்சிக்குட்பட்டது. இந்த நான்கு பகுதிகளும் சேர்ந்ததே ஐக்கிய இராச்சியம் (United Kingdom.)

பிரிட்டனில் சிறுபான்மையினர் உரிமைபற்றி ஐவர் ஜென்னிங்ஸும் மைக்கேல் ஸ்டுவாட்டும் கூறுவதை இவர்கள் படித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியவர்கள்!

'பிரிட்டிஷ் அரசமைப்பு' என்ற நூலில் ஐவர் ஜென்னிங்ஸ் கூறுவதாவது:-

"வட ஐயர்லாந்து நிர்வாகத்தின் பெரும் பகுதி வட ஐயர்லாந்தின் பாராளுமன்றத்தினால்தான் நிகழ்த்தப்படுகிறது; பிரிட்டிஷ் பாராளுமன்றத்தினால் அல்ல என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. எனவே பிரிட்டன் நிர்வாகத்துறை தவிர்ந்த புறம்பான ஒரு நிர்வாக இயந்திரம் வட ஐயர்லாந்தில் இயங்கி வருகிறது.

இரண்டாவதாக, ஸ்கொத்லாந்தின் நிர்வாகமும் இங்கிலாந்தின் நிர்வாகமும் இரண்டும் ஒன்றாக இயங்கியதில்லை. பொதுவாக பிரிட்டிஷ் சுகாதார, விவசாய, கல்வி, மீன்பிடி மந்திரிகளின் அதிகாரம் இங்கிலாந்திற்கு மாத்திரமே அடங்கிய ஒன்று. பிரிட்டிஷ் மந்திரி சபையில் 'ஸ்கொட்டிஷ் விவகார மந்திரி' என்று ஒருவர் இருக்கிறார். இங்கிலாந்திலுள்ள உள்நாட்டு மந்திரிக்கிருக்கும் அதிகாரம் போல இவருக்கும் ஸ்கொத்லாந்துப் பிரதேசத்தில் சில அதிகாரங்களும் அதற்குரிய அதிகாரத்துறைகளும் (உ-ம் கல்வி, விவசாயம்) உண்டு. உள்ளூராட்சியில் இரண்டு வெவ்வேறு விதமான அமைப்புகள் இயங்குகின்றன. நீதி நிர்வாகமும் அவ்வாறே. பிரிட்டிஷ் உயர் நீதி அரசரின் நீதி பரிபாலனம் இங்கிலாந்திற்குள் மட்டுமே இயங்குகிறது. சட்ட அதிகாரிகள் இங்கிலாந்தில் ஒரு பிரிவினர்; ஸ்கொத்லாந்தில் இன்னொரு பிரிவினர்.

"தற்கால அரசாங்க அமைப்புகள்" என்ற நூலில் மைக்கேல் ஸ்டுவாட் கூறுவதாவது:-

"இங்கிலாந்திலும் உவேல்ஸிலும் உள்நாட்டு, விவசாய, கல்வி, வீடமைப்பு உள்ளூராட்சி மந்திரிகள் புரியும் கடமைகளுக்கு ஸ்கொத்லாந்துப் பகுதியில் ஸ்கொத்லாந்து விவகார மந்திரியே பொறுப்பானவர். இவருக்குக்கீழ், மேலே குறிப்பிட்ட துறைகளில் உதவி புரிய நாலு உதவி மந்திரிகள் இருக்கிறார்கள்"

"ஸ்கொத்லாந்தையும் இங்கிலாந்தையும் கடந்த காலத்தில் பலவிதமான சம்பந்தங்கள், சாம்ராச்சியங்கள் பிணைத்தும் வைத்திருக்கின்றன. இங்கிலாந்தின் பதேச்சாதிகாரக் கெடுபிடிக்குள் ஸ்கொத்தலாந்து

(9-ம் பக்கம் பார்க்க)

## மேற்குக் கரையோரப்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றல என்றும் அவர்கள் கூறினர்.

பிரதேச மத சுதந்திரங்களைப் பாதுகாக்கத் தாங்கள் தங்கள் இலங்கையின் மேல்பாகக் கரையோரப் பிரதேசங்களுக்கு சமஷ்டி ஆட்சி கோரும் ஒரு இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் அதற்குத் தமிழரசுத் தந்தையின் ஆசியும் சட்சியின் தார்மீக ஒத்துழைப்பும் அவசியம் என்றும் கேட்கலாயினர்.

தமது உத்தேசத்திலுள்ள சுய ஆட்சிப் பிரதேசம் கொழும்பு நகரம் நீங்கலாக வென்னப்புவ தொடக்கம் புத்தளம் வரை அமையும் என்றும் அது மதவாரிப் பிரதேசமாக உருவாக வேண்டும் என்பதே தமது நோக்கம் என்றும் அது கோஷ்டிக்குத் தலைமை தாங்கிய பிரதம பேச்சாளர் திரு. ஜயதிலகா என்பவர் விளக்கினர்.

### பலாத்காரம் கூடாது

கரையோரம் பகுதியைச் சுயாட்சிப் பிரதேசமாக்க வேண்டும் என்ற கோரிக்கையில் தவறு எதுவும் இல்லையென்றும், ஆனால் பலாத்காரத்தையோ, மத வெறியையோ தலை தூக்க விடாமல், சட்டம் ஒழுங்கு சமாதானம் என்ற கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு, ஜனநாயக ரீதியாக கோரிக்கைகளை முன்வைத்து இயக்கத்தை நடத்தலாம் என்றும் டாக்டர் நாகநாதன் ஆலோசனை கூறினர். கண்டிப் பிரதேசத்து சிங்களத் தலைவர்களும் இப்படியான ஒரு சமஷ்டி இயக்கத்தை ஆரம்பிக்க ஆலோசித்து வருவதாகத் தம்மிடம் கூறினார்கள் எனவும் டாக்டர் தெரிவித்தார்.

இத்தகைய இயக்கங்களைக் கொள்கையளவில் தமிழரசுக்கட்சி வரவேற்ற போதிலும் [illegible] இயின் நிர்வாகக் குழுவைக் கலந்து கொள்ளாமல் எதுவித உறுதியும் அளிக்க முடியாதென டாக்டர் நாகநாதன் சுட்டிக் காட்டினர்.

## சலுகைகளுக்காக நாம் தலைவணங்கப் போவதில்லை

## திருமலை சக்தி நிலையத்தில் திரு. இராஜவரோதயம்

இன்று தமிழ் மக்களுக்கு அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டிருக்கும் அற்ப சலுகைகளுக்காக நானோ, அல்லது எனது கட்சியோ என்றும் தலை வணங்கப் போவதில்லை. நாங்கள் எங்கள் கட்சியின் இலட்சியத்துக்காக இறுதி மூச்சு உள்ளவரை எமது போராட்டத்தை நிறுத்தப் போவதுமில்லை. எந்த இலட்சியத்துக்காக மக்கள் எங்களைத் தெரிந்து அனுப்பினார்களோ அந்த இலட்சியம் நிறைவேறும் வரை, நாம் உயிர்த்தியாகம் செய்யவும் தயங்கப் போவதில்லை.

இவ்வாறு திருகோணமலை சக்தி நிலையத்தில் தலைவர் திரு க.கு. சோமஸ்கந்தஐயர் தலைமையில் நடைபெற்ற பதின்மூன்றாவது ஆண்டு விழாவில், திரு. ந இ இராஜவரோதயம் கூறினார்.

திரு இராஜவரோதயத்துக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது அவர் தொடர்ந்து கூறியதாவது:-

### மாற்றுந்தாய் அரசாங்கம்

பாடசாலைகளை தேசியமயமாக்க அரசாங்கம் எண்ணியுள்ளதை நாம் விரும்பவில்லை. அதை நாம் எதிர்க்கின்றோம். நாம் எதிர்ப்பதற்கு, பல காரணங்கள் உண்டு. இன்று இலங்கையில் கல்வி விடயத்தில் மதப் பாடசாலைகளே முதல் ஸ்தானத்தை உடையதாக உள்ளன. இவற்றை அரசாங்கம் எடுப்பதால், கல்வித் தராதரம் குறையும் என்பதில் சந்தேகப்படத்தேவையில்லை. இத்துடன் இன்றைய அரசாங்கக் கொள்கையின்படி, புத்த சமயத்துக்கே முதல் இடம் கொடுபடுகின்றது. அப்படியாக இருக்கும் பட்சத்தில் பாடசாலையில் மற்ற மதங்களுக்கு எப்படி சலுகை காட்டப்படும்? மற்ற மதங்கள் மாற்றுந்தாய் பிள்ளைகளைப் போன்று நடத்தப்படும் என்பதில் சந்தேகப்படத்தேவையில்லை. இந்தச் சூழ் நிலையில் இந்தியாவிலே கேரளத்தில் முன்பு ஏற்பட்டதுமான நிலைமை ஏற்படுமோவென்று ஐயுற வேண்டியுள்ளது.

### ஜாக்கிரதையாய் இருப்போம்

இம்முறை சிம்மாசனப் பிரசங்கம் தமிழிலும் வாசிக்கப்பட்டது. ஆனால் இது ஓர் இராச தந்திரமாகவும் இருக்கக் கூடும். ஏனெனில் திருகோணமலையில் போட்டியிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிப்பிரதிநிதி திருகோணமலையில் பல வேலைகள் நடைபெறவேண்டியுள்ளதாக

(12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை பறித்தெடுப்பது அடாத செயல்

## உள்ள கல்வி நிலையங்கள் சீரழிகின்றன
## மேலதிக சுமை அரசாங்கத்துக்கு எதற்கு?

## பெற்றோர் உரிமையில் தலையிடுவது சர்வாதிகாரப் போக்கானது.

## மட்டக்களப்பு எதிர்ப்புக் கூட்டத்தில் முதலாவது பிரதிநிதியின் முழக்கம்

**"பொது மக்களுக்கு செய்ய வேண்டிய சேவையைச் செவ்வனே செய்யாமல் நிர்வாகத் திறமையின்மை, ஊழல், பாரபட்சம், ஊழல் ஆகியவற்றால் அல்லற்படும் தனிப்பட்டோர் ஸ்தாபனங்களை அரசாங்கம் கையேற்பதை யாரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். பஸ் கம்பனிகளை அரசாங்கம் கையேற்றதைப் பொதுமக்கள் மனப்பூர்வமாக வரவேற்றமை இதற்கு ஒரு உதாரணமாகும். ஆனால் பாடசாலைகளின் பிரச்னை அப்படிப்பட்டதல்ல. அரசாங்கப் பாடசாலைகளை விட உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளே இன்று சிறந்து விளங்குகின்றன. எனவேதான் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை நாம் எதிர்க்க வேண்டியிருக்கிறது."**

அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளைக் கையேற்பதை ஆட்சேபிக்கும் முகமாக மட்டக்களப்பு மைதானத்தில் சென்ற வாரம் (6-9-60) நடைபெற்ற மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய மட்டக்களப்பு முதலாவது பிரதிநிதி திரு. செ. இராசதுரை மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு சென்ட் மைக்கேல் கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மேற்படி கூட்டத்துக்கு நகரசபைத் தலைவர் திரு. ஜே. எல். திஸவீரசிங்கம் தலைமை வகித்தார். இரண்டாவது பிரதிநிதி ஏ. எச். மாக்கான் மாக்கார், திரு டி. எல். கே. வணசிங்க, டி. டபிள்யூ. ஏ. விமலகுண, வித்துவான் எஸ். ஈ. கமலநாதன், பண்டிதர் ஏ. சபாபதி, எம். எல். ஜோசப் ஆகியோரும் மற்றும் பலரும் பேசினர்.

திரு. இராசதுரை எம். பி. தொடர்ந்து பேசியதாவது:—

"நிர்வாகத் திறமையின்மை, சீர்கேடு, பாரபட்சம், ஊழல் ஆகியவற்றினால் இயங்கும் தனிப்பட்டோர் ஸ்தாபனங்களை அரசாங்கம் கையேற்பதை எவரும் வரவேற்பார்கள். அச்சமயங்களில் அரசாங்கத்திற்கு ஆதரவுமளிப்பார்கள். உதாரணமாக தனிப்பட்ட முதலாளிகளின் கையிலிருக்கை பஸ் போக்குவரத்து இருந்த சமயத்தில் நாட்டின் எல்லாப் பாகங்களிலிருந்தும் கண்டனக் குரல் கிளம்பியது. பொது மக்களின் போக்குவரத்துக்கு போதிய பஸ்களை முதலாளிகள் தெருக்களில் ஓட விடவில்லை என்று புகார் கிளம்பியது. பொதுமக்கள் கொறவுக் குறைவாக பஸ்களில் நடத்தப்படுகிறார்கள், அவர்களின் குறைபாடுகளுக்கு முதலாளிமார் செவி கொடுக்கவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது. முதலாளிகளைத் திருப்திப்படுத்தாத பஸ் ஊழியர்கள் நீதியீனமாக தண்டிக்கப்படுகிறார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டது. இது போன்ற முறைப்பாடுகளில் முழுக்க முழுக்க உண்மையும் இருந்தன. பஸ் முதலாளிகளின் சர்வாதிகாரமானப் போக்கை எவ்வகையிலும் குறைக்க முடியாத நிலையில் அரசாங்கம் பஸ் போக்குவரத்தை தேசியமயமாக்கியது. நாடு இச்செயலை வரவேற்றது. இது போன்ற தலைச்சுமைகளுக்கு ஆதரவு கொடுப்பது கடமையாகும்.



திரு செ. இராசதுரை

### என்ன அவசரம் வந்தது?

"உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதென் பதற்கு என்ன அவசரம் இந்நாட்டில் வந்தது? உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கல்வித்தரம் குறைந்திருக்கின்றதா? அப்பாடசாலைகளில் கட்டுப்பாடு குலைந்திருக்கிறதா? ஒழுக்கம் குன்றியிருக்கிறதா? நிர்வாகம் ஒழுங்கீனம் செய்யப்பட்டிருக்கிறதா? அல்லது பெற்றோர் இப்பாடசாலைகளைப் பற்றி முறைப்பாடு செய்திருக்கிறார்களா? அன்றி அப்பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் கல்வி போதிக்கப்படவில்லை என்று புகார் செய்திருக்கிறார்களா? இல்லை மாறாக இலங்கையின் சிறந்த கல்வியளிக்கும் ஸ்தாபனங்களாக உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் இயங்கி வந்திருக்கின்றன.

### பெற்றோரின் உரிமையை மறுப்பதா?

"வெள்ளம் பள்ளத்தை நாடுவதைப்போல், தேனீக்கள் சிறந்த தேன்மலரை தேடுவதைப்போல் பெற்றோர்கள் நல்ல ஒழுக்கமும், கட்டுப்பாடும், சிறந்த கல்வியும் பெறுவதற்கு தங்கள் குழந்தைகளை உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு அனுப்பி வந்தார்கள். இதில் என்ன தவறு இருக்க முடியும்? தன் குழந்தைகளுக்கு கல்வியூட்டும் பொறுப்பை நிர்மாணிக்க வேண்டியது அக்குழந்தையின் பெற்றோர் கடமையாகும் இதில் கூட தம் குழந்தைக்கு கல்வியூட்டும் விஷயத்தை நிர்மாணிக்கும் உரிமை பெற்றோருக்கில்லை என்று கூறுவது போல் இருக்கின்றது இச்செய்கை.

"இலை மறை காய் போல் ஒரு உதவி நன்கொடை பெறும் பாடசாலையில் சமயம் நீதி [illegible]

கேடு தலைகாட்டியிருந்தால் அதற்காக உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் முழுவதையும் அரசாங்கம் எடுக்க முயல்வது நகைப்புக்கிடமான செயலாகும்.

### வாத்தைக் கொலை செய்வதா?

"லட்சக்கணக்கான குழந்தைகள் படிக்க வசதியில்லாதிருக்கிறார்கள் புதிய பாடசாலைகள் இல்லாததினால், இக்குறைபாடுகளை நிர்த்து வைப்பதில் அரசாங்கம் சிரத்தை காட்டாது நல்ல கல்வியும்—சமய அறிவும்—ஒழுக்கமும், கட்டுப்பாடும் நிரம்பியுள்ள உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதானது இந்நாட்டின் கல்வித்துறையில் 'பொன் முட்டையிடும் வாத்தைக்' கொலை செய்வதாகும்.

"அரசாங்கம் உடனடியாக இந்நாட்டில் செய்ய வேண்டிய காரியங்கள் பல இருக்கின்றன. இப்பாடசாலைகளை பொறுப்பேற்பதன் மூலம் அரசாங்கத்திற்கு செலவாகப்போகும் மேலதிகமான கோடிக்கணக்கான ரூபாய்களை நாட்டின் உடனடித் தேவைகளில் செலவு செய்யலாம்.

"ஒவ்வொரு மாதமும் நாட்டில் பெருகி வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தை போக்க புதிய தொழிற்சாலைகளை அமைக்கலாம்.

"குடிசைக் கைத்தொழில்களுக்கு ஊக்கமளித்து கிராமப் பொருளாதாரத்தை பெருக்கலாம்.

"வானம் பார்த்த பூமியாகவுள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல்களுக்கு நீர்ப்பாசன வசதி செய்துகொடுக்[illegible]

### பழிவாங்கும் செயல்

"பிரஷ்டதாரதப்பரீட்சையில் சித்தியெய்தி வேலையில்லாது தவிக்கும் மாணவர்கட்கு தொழில் நுட்பத் துறையில் இடமளிக்கும் திட்டங்களை உருவாக்கலாம்.

"இவை இன்று உடனடியாக நாட்டில் செய்ய வேண்டிய அதிமுக்கிய காரியங்களாகும். நாடு எதிர்பார்க்கும் இச் செயல்களில் உடனடிக் கவனம் செலுத்துவதை விட்டு கல்வித்துறையின் இன்றைய உயர்ந்த நிலைக்கு நிலைக்களனாகவுள்ள உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுக்க முயற்சிப்பது ஒரு பழிவாங்கும் செயலாகும்.

### ஜனநாயகமல்ல

"பௌத்த கமிஷனர்களின் அறிக்கை உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை எடுப்பதென்று கூறுமாயின் அது இந்நாட்டு மக்களின் ஏகக் குரலாக ஒப்புக்கொள்ள முடியாது. இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்களின் சம்மதமன்றி, ஒத்துழைப்பின்றி, விருப்பு வெறுப்புகளை அறியாது ஒரு குறிக்கப்பட்ட பகுதியாரின் முடிவைச் செய்வது ஜனநாயகமல்ல. அதிக கைகளையோ அதிக தலைகளையோ எண்ணிக் கணக்கிடுவது ஜனநாயகமான செய்கையாகாது.

### கூண்டுக் கிளி

"கடைசியாக உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஒரு தாழ்மையான வேண்டுகோள்; அரசாங்கத்தின் இச் செயலை வரவேற்பவர்கள் பலர் இருக்கலாம். நாம் அரசாங்க ஊழியர்களாகி விடுவோம். இதர அரசாங்க ஊழியர்களுக்கு கிடைக்கும் பென்ஷன், இலவச போக்குவரத்துச் சீட்டுகள், புது வீடு கட்ட போதிய கடன் வசதி இவையெல்லாம் கிடைக்குமென்று எதிர்பார்த்து இச்செய்கையை வரவேற்பதானது நேரத்திற்கு பாலும் பழமும் கிடைக்குமென்று வெள்ளிக் கூண்டில் சிக்கிய பஞ்சவர்ணக் கிளியின் நிலைக்கொப்பானதாகும். செத்துப் போன சிங்கமாக இருப்பதைவிட உயிருள்ள எலியாக இருப்பது உயர்ந்தது".

## துள்ளும் தமிழ்வேல் சுழற்றியவன்

—மரு. பரமகுரு—

வாழும் மடமை இருள்கிழித் தே,—செழும்
பைங்கதிர் போலத் துடித் தெழுந்தான்!
வாழப் பிறந்த தவக்கனி ஞன்—புது
வாழ்வைப் படைக்க மனத்துணிந்தான்!
விழும் அருவித் திரளென வே.—கோல
விண்ணின் றெழுந்த முகிலெனவே,
காலத்தை வென்றுயே நுண்மையனே—இன்பக்
கற்பனைத் தேனிற் கலந்து பெய்தான்!

பல்லினித் தே,பிறர்க் கேவல் செயும்—கொடும்
பழமை யைத் துயர் மாண்படவே,—தமிழ்
வில்லெடுத் தே கவி யம்பை விட்டான்,—உயர்
வெற்பும் அதிர்ந்து நடுங்கிடவே!
மல்லுடைக் கும்தமிழ் மெசலக் கரைந்திடப்
பாகெனத் தித்திக்கும் பைந்தமிழில்—சிறு
பிள்ளையும் அள்ளிச் சுவைத்துக் களித்திடப்
பேரின்பத் தேன்கவி பெய்துவிட்டான்!

வெற்றுரை வீணர்கள் வீந்து மடிந்திட
வீறிட்டெழுந்து முழங்கியவன்;
கற்றும் பகைக்குலம் அக்கரை முகிடத்
துள்ளும் தமிழ் வேல் சுழற்றியவன்;
கற்றவர் போற்றிக் களித்திட நற்றமிழ்க்
காவியத் தெய்வத் தைக் காட்டியவன்;
எட்டுத் திசையும் தமிழ்ச் சுவை யேற்றிய
எங்கவி பாரதி வாழியவே!

## கந்தையா காலமானார்

பருத்தித்துறை தொகுதியின் முன்னைநாள் பிரதிநிதியும் கொம்யூனிஸ்டு கட்சித் தலைவர்களுள் பிரபலமானவருமான திரு. பி. கந்தையா வியாழன் மாலையில் காலமானார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். மார்ச் தேர்தலுக்குப்பின் அவர் தொடர்ந்து சுகவீனமுற்று படுக்கையிலேயே இருந்தார்.

1956-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் திரு. கந்தையா பருத்தித்துறைப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பாராளுமன்றத்தில் அவர் ஒரு சிறந்த பேச்சாளராக விளங்கினர். 1960-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தோல்வியுற்றார்.

ஒரு எம். ஏ. பட்டதாரியான திரு. கந்தையா அரசியலில் புகுமுன் இலங்கை சர்வகலாசாலையில் நூல் நிலையப் பொறுப்பாளராகக் கடமையாற்றினர்.

கொழும்பு முனிசிபல் பகிரங்க வாசிகசாலை விசாரணைக் கமிஷனராக அவர் சிறந்த பணியாற்றியுள்ளார்.

அரசியலில் அவர் ஒரு கொம்யூனிஸ்டாக விளங்கியபோதிலும் தாம் ஒரு தமிழர் என்ற இனப்பற்றோடும் தமிழ் உணர்ச்சியோடும் வாழ்ந்தவர் திரு. கந்தையா என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பிரிவு ஈழத் தமிழ் மக்களின் பெரு நஷ்டமாகும்.

## பிரிட்டனில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

அடங்கியிருந்திருக்கிறது; இந்தப் பிணைப்புகள் தொருங்கி இரு நாடுகளும் சிதைந்துபோயிருக்கின்றன. இருந்தும் இரு நாடுகளும் இசைந்து வாழக்கூடியதான ஸ்திரமான அமைப்பொன்றை இணைப்பாட்சிமூலம் ஏற்படுத்திவிடலாம் என்ற கருத்து அந்தக் காலத்தில் வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. இணைப்பாட்சி என்பது ஆட்சியியல் வளர்ச்சியின் பிற்காலத்திலேதான் நிலைபெற்று ஸ்திரமடைந்த ஒரு நிறுவனம். தற்காலத்தில் இரு நாடுகளுக்குமிடையே ஏதும் பிணக்குகள் ஏற்பட்டு இயற்றிக்குப் பரிகாரம் காணவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால், அந்தப் பரிகாரம் இணைப்பாட்சியாகவே அமையும் என்பது நிச்சயம்"

"ஒற்றை ஆட்சியிலும்கூட ஸ்கொட்டிஷ், உவெல்ஷ் விவகாரங்களை நிர்வகிப்பதில், கூடிய அளவு புறம்பான நிர்வாக நிறுவனங்களை வளர்த்துக்கொண்டு போவதை நாம் பிரிட்டனில் காணலாம்"

## தமிழ் மொழிச்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சித் தலைவர்களைச் சந்தித்துத் தூண்டினர்.

பாடசாலைகளைக் கையேற்கும் சட்டங்களையும், பத்திரிகைகளைக் கோர்ப்பரேஷனாக்கும் சட்டங்களையும் ஆக்குவதில் அதிக கவனம் செலுத்திவரும் அரசாங்கம் தமிழ் மொழிச் சட்ட நடைமுறை விதிகள் பற்றி எதுவும் செய்வதாகத் தெரியவில்லை. இவ்விதிகள் 1960 டிஸெம்பர் 31-ந் தேதிக்கு முன்பதாகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டியனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகசஞ்சீவி

சரித்திரக் கதை — எழுதியவர்: கச்சாயில் இரத்தினம்

நடுநிசி. எங்கும் அமைதி சூழ்ந்த நேரம். பனிமலைக் கடலில் இருந்து வீசும் தென்றல் காற்று குளு, குளு என்று வீசிக்கொண்டே இருந்தது. நீலவானத்தில் தவழ்ந்துகொண்டிருந்த முழுமதியைக் கருக்கொண்ட கார்முகில் கூட்டங்கள் அடிக்கொருதரம் மறைத்துக் கலங்கப்படுத்திக்கொண்டே இருந்தன.

நாட்டு மக்கள் நல்லுறக்கத்தில் மூழ்கிக்கிடக்கும் அந்த அர்த்தசாமத்தில் நல்லூர் மன்னவன் இராசஇராஜேந்திரன் மாறுவேடந் தாங்கி ஊர் சுற்றி உளவு அறிந்துவரப்புறப்பட்டான்;

நல்லூரிலிருந்து வடக்கே சுமார் ஐந்து மைல்களுக்கப்பாலுள்ள கோப்பாய் என்ற கிராமத்திற்கு மன்னவன் வந்துகொண்டிருந்தான். அவன் எதிரில் சிறிய ஒரு குடிசையில் அகல் விளக்கு ஒன்று மங்கி மங்கி எரிந்துகொண்டிருந்தது. குடிசையிலிருந்து ஒரு பெண் "ஐயோ, எனது அருமை மகனே! உன்னை நான் எவ்வளவு ஆசையோடு வளர்த்தேன். நீ எனக்குக் கஞ்சி வார்ப்பாய் என்று கடைசியில் நான் உன்னைப் பாம்புக்குப் பலிகொடுக்கவா? உன்னோடு படாதபாடுகள் எல்லாம் பட்டேன். அப்பா, என் செல்வ மகனே! உன்னைப் பெற்ற இந்தப் பாவியின் வயிறு பற்றி எரிகிறதடா! என் கண்ணே! இனி எனக்கு இங்கே யார் இருக்கிறார்கள் ஒரு ஆறுதல் கூற!" என்று கூறிச் சோகமான குரலில் அழுதது கேட்டது.

மன்னவன் அப்படியே மலைத்துப்போய் நின்றான். அந்தப் பெண் ஒப்பாரியைத்தரும் ஒவ்வொரு சொற்களும் ஈட்டிபோல அவன் இதயத்தில் பாய்ந்து வருத்தின. அரசனுக்கு அங்கு நடந்த சம்பவம் நன்கு புலனாயிற்று. பாவம்! பெற்ற தாய்க்குத் தனது குழந்தை என்றாலே போதும். அவளுக்கு வேறு எதுவுமே தேவைப்படா. அவ்வளவிற்குக் குழந்தை என்ற பாசம் ஒவ்வொரு தாய்மார்களையும் அடிமையாக்கி விடுகிறது.

மைந்தனை அரவிற்குப் பலிகொடுத்துப் பெற்ற வயிறு எரியத் துடித்துத் துடித்து அழுது வடிக்கும் அந்தப் பெண்ணின் சோகமான நிலை மன்னவனின் மனதைப் பெரிதும் கவலையுறச் செய்தது.

சிந்தித்தான் மன்னவன். சிந்தனை முகைகள் துளிர்விட ஆரம்பித்தன. மாறுவேடத்திலிருக்கும் அவன் அந்தப் பெண்ணிற்கு எந்தவிதமான ஆறுதலையும் அளிக்க முடியாது தவித்தான். அடிக்கடி அந்தப் பெண் ஒப்பாரி வைத்து அழும் அந்தப் பரிதாபமான காட்சியை அவனால் பார்த்துக்கொண்டு நிற்க மனம் சகிக்கவில்லை.

அவன் தனது அரண்மனையை நோக்கி வந்துகொண்டிருந்தான். அவன் கால்கள் நடந்தன. ஆனால் அவன் சிந்தனையோ! எண்ணற்ற எண்ண அலைகளை எழுப்பிக்கொண்டே இருந்தது. கடவுளால் சிருட்டிக்கப்பட்டன உயிர்கள். அந்த உயிர்களே ஒன்றிற்கு ஒன்று விரோதியாய் ஒன்றின் உயிரை இன்னொரு உயிர் குடித்துவிடுவதும் இயற்கையின் செயலாக முடிகிறது. அதனைத் தவிர்ப்பதும் மனிதனால் ஆகாத காரியம். ஆகவே கடவுளின் சிருட்டியில் எத்துணைய மகத்துவமான செயல் மறைந்து காணப்படுகின்றன என எண்ணியவாறே அரண்மனை வாயிலை வந்தடைந்தான்.

அந்த நேரத்தில் கிழக்கு வானம் வெளிக்கத்தொடங்கியது. உலக நங்கை இதுவரையும் இழுத்துப் போர்த்திருந்த இருட் போர்வையை மெல்ல மெல்லத் தளர்த்தவாளுள். அழகான குமுதமலர் ஒன்று மெதுவாகத் தனது குவிந்த இதழ்களை விரித்து மலர்வதைப் போன்று கீழ்திசையில் பொழுது புலரத் தொடங்கிற்று. உலகைச் சூழ்ந்திருந்த பயங்கரமான நிசப்தம் குலைந்தது. எங்கும் பறவைகளின் கீச்சுக் குரலும் மக்களின் பேச்சுக் குரலும் கேட்கலாயின.

அதிகாலையில் இராசஇராஜேந்திர மன்னவன் அரச கொலுமண்டபத்தில் வந்து அமர்ந்து இருந்தான். அரசனின் வருகையைக் கண்ட அமைச்சர், பிரதானி அந்தணர் முதலானோர் தமது காலைக் கடன்களைக் கூடச் சரிவரச் செய்துமுடிக்காது அரசகொலுமண்டபத்துக்கு விரைந்து வந்தனர். அரசனுடைய வாட்டமான முகத்தைக் கண்டதும் அவர்கள் ஏக்கமுற்றனர். அரச கொலுமண்டபம் ஒரே அமைதி சூழ்ந்து காணப்பட்டது. அங்கு வீற்றிருந்த அத்தனை பேரும் அரசனின் முகத்தை உன்னிப்பாய் நோக்கினர். ஆனால் எவருமே அரசனோடு பேச அஞ்சினர். எல்லாருடைய முகங்களிலும் கேள்விக் குறி பிரதிபலித்தது.

கொலுமண்டபத்தில் வீற்றிருந்த அரச சபைக் குழுவினரை மன்னவன் விழித்து "அமைச்சர்களே! அந்தணர்களே! அரண்மனை வைத்தியர்களே! நமது நாட்டு மக்கள் நலமாக வாழ வேண்டும் என்பதே எனது முதல் இலட்சியம். அவ்வாறு எனது விருப்பம் இருக்க, நேற்று நமது நாட்டில் ஒரு தாய்க்கு ஒரு மைந்தனாக இருந்த ஒருவனை அரவு தீண்டி அவன் அக்கணமே இறந்துபோனான். அவன் தாய் அவன் பிரிவாற்றாது வருந்தித் தவிக்கும் அந்தச் சோகமான சம்பவத்தை நான் நேரிற் கண்டேன். என்னால் அதனைச் சகிக்க முடியவில்லை. ஏன்? அரவு தீண்டியவர்களை எமது வைத்தியர்களால் பிழைக்க வைக்க முடியாதா?" என்றான்.

அமைச்சர் சத்தியசீலர் எழுந்து "அரசே! நாக பாம்பிற்கு நான்கு பற்களில் விஷம் இருக்கிறது. அந்த நான்கு பற்களாலும் தீண்டப்பட்டவனை வைத்தியர்கள் பிழைக்க வைப்பது என்பது முடியாத காரியம். ஆனால் பாலாவி ஆற்றங்கரையிலே ஒரு துறவி இருக்கிறாராம். அவர் ஒருவருக்கே நாக பாம்பின் விஷத்தை முறிக்க மூலிகை தெரியும் என்று எல்லாரும் சொல்லிக்கொள்ளுகிறார்கள்" என்றார்.

"ஓ! அப்படியா? அப்படியானால் நாம் பலருக்கும் பயனுறும் அந்த மூலிகையை அவரிடம் கேட்டறிந்து கொள்வது மிகவும் நல்லதல்லவா?" என்றான் மன்னவன்.

"ஆம்; தெரிந்து வைத்துக் கொள்வது நலமான காரியந்தான். ஆனால் அந்தத் துறவியைத் தேடிக் கண்டுபிடித்து அவரோடு சிலகாலம் குருகுல வாசம் செய்தால் அல்லவா அவர் அதைக் கற்றுக் கொடுக்க முன்வருவார்"? என்றார் அமைச்சர்.

"ஏன்? எனது குமாரன் சந்திரவர்மன் குருகுல வாசம் செய்யத் தகுதியற்றவனா! அவனை அனுப்பலாமே!"

"நல்லது அரசே. யாரங்கே? நீ சீக்கிரம் சென்று நமது இளவரசரை அரசன் அழைப்பதாகக் கூறி கையோடு அழைத்து வா. உம் சீக்கிரம்" என்றார் அமைச்சர் சத்தியசீலர்.

•

ஐம்புலன்களையும் அடக்கி நிஷ்டையில் இருந்த துறவி தனது கண்களை விழித்துப் பார்த்தபோது அவர் எதிரில் அழகே உருவான வாலிபன் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

துறவி கண்களை விழித்ததைக் கண்ட சந்திரவர்மன் அடியற்ற மரம்போல அவர் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான். துறவிக்கு அவன் செயல் மனத்தைப் பெரிதும் கவர்ந்து விட்டது. ... ஆற்றங்கரைக்கு அந்த வாலிபன் எப்படி வந்தான் என பதை எண்ண அவருக்கு ஆச்சரியமாக இருந்தது.

"அப்பா, எழுந்திரு. நீ யார்? எங்கிருந்து இங்கு வந்தாய்?" என்று அந்த வாலிபனைக் கேட்டார் துறவி.

சுவாமி! அடியேன் நல்லூர் அரசனை இராசஇராஜேந்திரனுடைய புதல்வன். என் பெயர் சந்திரவர்மன் நான் தங்களிடம் குருகுலவாசம் செய்யலாம் என்ற இலட்சியத்தோடு இத்தனை தூரமும் தாண்டி வந்துள்ளேன்" என்றான் சந்திரவர்மன்.

அதனைக் கேட்ட துறவி சிறிது நேரம் சிந்தித்துவிட்டு "சந்திரவர்மா! நீயோ ஒரு அரச குமாரன். உனக்கு இந்தக் காட்டிலே நல்ல உணவு கிடைக்காது. நல்ல படுக்கை கிடைக்காது. நல்ல மாளிகை கிடைக்காது. நந்தவனம் இங்கு இல்லை. நல்ல சுகபோகம் எதுவும் கிடைக்காது. நீ இத்தனை சுகபோகங்களையும் மறந்து என்னுடன் இக்காட்டில் எப்படித் தனித்து இருக்க முடியும்!" என்றார் துறவி.

"பரவாயில்லை சுவாமி; நான் அந்தச் சுகபோகங்களுக்கு ஆசை வைத்தவனல்ல. எனக்கு இக்காட்டிலுள்ள காய், கனி, கிழங்கு இவைகளே உண்ணக் கிடைத்தால் போதும். நீங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம்" என்று மன்றாட்டமாய்க் கேட்டான்.

அந்த நேரத்தில் அங்கு பருவத்தின் எழில் உடலில் தவழ்ந்து விளையாட மோகனப் புன்னகை முகத்தில் அரும்ப அழகுச் சிலையான ஆரணங்கு ஒருத்தி கூடை நிறையக் கனிவர்க்கங்களோடு வந்தாள். அவள் அசைந்து ஆடிவரும் மோகன எழிலைக் கண்ட சந்திரவர்மன் அவள் அழகில் சொக்கிப் போய் நின்றான்.

அவளும் சந்திரவர்மனுடைய எழில் நிறைந்த எடுப்பான தோற்றத்தைக் கண்டதும், கண் இமைக்காது அவன் எழிலையே இரசித்துக் கொண்டு நின்றாள்.

துறவி தனது மகளைப் பார்த்து "அமுதா, ஏன் இப்படி விழிக்கிறாய்! இவன் யார் என்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டார்.

"ஊஹூம், எனக்குத் தெரியாது. இவர் யார்? அப்பா" என்று கொஞ்சும் கிளி மொழியிற் கேட்டாள்.

"அமுதா, இவன் வடக்கேயுள்ள யாழ்ப்பாணத்து மன்னவனின் புத்திரன் இவன் பெயர் சந்திரவர்மன்" என்றார்.

"ஓ! அப்படியா? அரச குமாரரான இவர்? இங்கு ஏன் வந்தார்?"

"இவன் இங்கு என்னிடம் குருகுலவாசம் செய்யப் போகிறானும். எப்படி இருக்கிறது இவனுடைய எண்ணம்!" என்று தனது மகளிடம் கூறிச் சிரித்தார் துறவி.

"ஏன் அப்பா அப்படிச் சிரிக்கிறீர்கள்? ஏன் இவருக்குக் குருகுலவாசம் செய்ய முடியாதா?"

"முடியாமல் என்ன? நன்றாக முடியும். ஆனால் இந்தக் காட்டிலே இவனுக்கு ஏற்ற சௌகரியங்கள் இருக்க வேண்டாமா?

"அப்படியானால் நாங்கள் எப்படி இந்த வனத்திலே தனித்து இருக்கமுடிகிறது?"

"நமக்கு அது பரிச்சயப்பட்டுவிட்டது. நமது தொழிலே காட்டில் தனித்து இருப்பதுதானே"

"ஏன் இவருக்கு மட்டும் அது பழக்கத்துக்கு வரமாட்டாதோ! முதலில் சில நாட்களுக்குச் சிறிது கஷ்டமாக இருக்கும். பின் எல்லாம் பழக்கத்துக்கு வந்துவிடும்"

"ஆமாம் சுவாமி, மனிதனின் மட்டற்ற ஆசைகளுக்கு அடிகோலும் மனத்தை மட்டும் மட்டுப்படுத்திவிட்டால், அதன் பின் எதிலுமே சிரமம் தோன்றாது"

"சரி சந்திரவர்மா, உன் எண்ணத்தை நான் தடை செய்யவில்லை. நீ இப்பொழுது போய் ஆற்றில் ஸ்நானம் செய்துவிட்டு வா"

"நல்லது சுவாமி"

துறவி தனது மகளை அழைத்து "அமுதா நீயும் இவனோடு கூடச் சென்று ஆற்றில் அபாயம் இல்லாத இடத்தைக் காட்டி விட்டு வா" என்றார்.

அமுதா முன்னும் சந்திரவர்மன் பின்னுமாகப் பாலாவி ஆற்றங்கரைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள்.

•

காட்டில் கவலையின்றிக் கன்னி இளம் மானைத் தனித்து வாழ்ந்த அமுதாவிற்குச் சந்திரவர்மன் கூட்டாக வாழக் கிடைத்ததும் உள்ளம் குதூகலம் அடைந்தது. அவள் உள்ளத்தில் உணர்ச்சி ஊற்றுக்கள் ஊற்றெடுக்க ஆரம்பித்தன.

கணப் பொழுதும் சந்திரவர்மனைப் பிரிந்து வாழ முடியாது அவள் தவித்தாள். அவள் உள்ளத்தில் நீங்காத தாபம் ஏற்பட்டு விட்டது.

காட்டில் அவர்கள் சோடி மானைப் போலத் துள்ளிக் குதித்து விளையாடி வந்தார்கள்.

அமுதாவின் அழகிலும் அவள் மயக்கு மொழியிலும் தனது உள்ளத்தையே பறிகொடுத்து விட்ட சந்திரவர்மன் இலட்சியத்தை மறந்து போனான்.

கால விருட்சத்தில் வருடக்கிளைகள் இரண்டு ஒடிந்து விட்டன.

அன்று சந்திரவர்மன் தனித்து ஆச்சிரமப் பர்ணசாலையில் இருந்தான். அமுதா ஆற்றுக்கு நீர் கொண்டு வரப் போயிருந்தாள். துறவி தன்னை மறந்து யோகத்தில் இருந்தார்.


தனிமையாக இருந்த சந்திரவர்மனின் உள்ளத்தில் தனது தாய் நாட்டின் வேட்கை ஏற்பட்டது. அவன் மனம் துடித்தது. ஆஹா, நான் எனது தந்தைக்கு அளித்த வாக்கை மறந்து விட்டேனே! நாகசஞ்சீவியை நமது குருவிடம் எப்படிக் கேட்டறிவது அமுதாவிற்காவது தெரிந்து இருந்தால் அதனை அவளிடம் கேட்டறியலாம் ஆனால் துறவி அந்த அபூர்வ மூலிகையை எவருக்கும் காட்டிக் கொடுக்காது மர்மமாகத் தனது மனத்துள்ளே மறைத்து வைத்திருக்கிறாரே! அதனை எப்படி அறிவது என எண்ண அவன் மனம் வேதனையுற்றது.

ஒரு நாள் அமுதாவும் சந்திரவர்மனும் காட்டிற் கனிவர்க்கம் தேடிக் கொண்டிருக்கும்போது கருநாகம் ஒன்று சந்திரவர்மனைத் தீண்டி விட்டது. உடனே சந்திரவர்மன் அந்த இடத்திலேயே அறிவு சோர்ந்து மயங்கி வீழ்ந்து விட்டான். அதனைக் கண்ட அமுதா இறக்கையை இழந்த புழு துடிப்பதைப் போலத் துடித்தழுதாள்.

இறுதியில் அவள் தனது தந்தையிடம் சென்று

(12-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்ட ஈட்டுக் குற்றங்கள்

## (Torts)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கை சட்டக்கல்லூரி, தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக் குழு சட்ட ஆலோசகர்

முந்திய கட்டுரையொன்றில் நட்ட ஈட்டுக் குற்றங்களின் அம்சங்களைப் பற்றி ஆராயுமிடத்தில் நட்டம் விளைத்த செயல் பொதுவாக புத்திபூர்வமாக (Intentionally) அல்லது அசட்டையாக (Negligently)ச் செய்திருக்கப்படவேண்டுமென்று கூறியுள்ளோம். அதாவது ஒரு செயலை அதனின் தன்மையறிந்து அதனால் இன்னொருவருக்குத் தீமை விளையுமென அறிந்தும் செய்தல் புத்திபூர்வமான செயலெனப்படும். கவனமாக ஒரு செயலைச் செய்வதற்குக் கடமைப் பட்டுள்ளவர் அச்செயலைக் கவனயீனமாகச் செய்தல் அசட்டைச் செயல் அல்லது உபேட்சை (Negligence) எனப்படும். சட்டப்படி உபேட்சை (Negligence)யின் இலக்கணம் பின்வருமாறு:

ஒரு நியாயமான முன்ஜாக்கிரதையுள்ள மனிதன் ஒரு சூழ்நிலையில் செய்யக் கூடியதைச் செய்யாதுபோதலே அசட்டை அல்லது உபேட்சையெனப்படும். ஆகையால் உபேட்சையைப் பற்றி ஆராயுங்கால் ஒரு நியாயமான முன்ஜாக்கிரதையுள்ள (Prudent) மனிதன் இச்சூழ்நிலையில் எப்படி நடப்பான் என்பதே பிரதானமான விஷயம். சமுதாயத்தில் வாழ்பவர்கள் தங்களுக்கும் தங்கள் உடைமைகளுக்கும் தீங்கு விளையாமல் வாழ்வது அவர்களின் உரிமை. ஆகையால் அவர்களுக்குத் தீங்கு விளைக்காமல் இருப்பது எல்லோருடைய கடமையாகும். இக்கடமை ஒரு எதிர்மறையான (Negative) கடமையாகும். சில வேளை அது ஒரு பிரத்தியட்ச கடமை (Positive duty) யாகவுமிருக்கலாம். உதாரணமாக ஒருவர் ஒரு அபாயச் சூழ்நிலையை உருவாக்கியிருந்தால் அதிலிருந்து நீக்குவதற்கு ஒரு பிரத்தியட்ச செயலை (Positive Act)ச் செய்யவேண்டிநேரிடும். அதைவிட சட்டமே ஒரு பிரத்தியட்ச கடமையை விதித்திருக்கலாம். உதாரணமாக அபாய யந்திரங்களைச் சுற்றிப் பாதுகாப்பு (Guard) அமைக்கும்படி விதித்திருக்கலாம்; அப்படியாயின் அப்பாதுகாப்பை அமைக்காமல் விடுதல் ஒரு பிரத்தியட்ச கடமையில் தவறியதாக முடியும். இத்தருணத்தில் பிரதானமாக இருவிதமான கவனக் கடமைகளைப் பற்றி அவதானித்தல் நன்று. ஒன்று பாலர்கள்பால் காட்டும் கடமை. மற்றையது பொருள் விநியோகிப்பவர் பொருள் கொள்வோருக்கு (Consumers)க் காட்ட வேண்டிய கடமை.

### பாலர்பால் கடமை (Duty of care towards Children)

பாலர்கள் எங்கு கூடியிருக்கக் கூடுமோ அவ்விடங்களில் செயலாற்றுபவர்கள் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கக் கடமைப்பட்டுள்ளவராவர். ஒரு வண்டி விடும் சாரதி எவ்வாவிடங்களிலும் பாலர்கள் இருப்பார்களென அவதானித்து நடக்க வேண்டிய கடமையில்லாது போனாலும் பாலர்கள் நடமாடுமிடமென அறிந்த பின் அல்லது அவர்களைச் சாலைகளில் கண்டபின் அவர்கள் முதிர்ந்தவர்கள் போல நடமாடமாட்டார்களென்பதை கவனத்தில் வைத்திருக்க வேண்டும். உதாரணமாக ஒரு சாரதி சாமானியமான மனிதர் குறுக்கே பாய்ந்து விபத்துக்குள்ளானால் சாரதி மேல் குற்றமில்லை. ஆனால் பாலர்கள் அவதானத்துடன் நடக்க மாட்டார்களாகையால் அவர்களைச் சாலைகளில் கண்டவுடன் சாரதி கவனமாக ஓட்ட வேண்டும். அவர்கள் சடுதியாக முன்பின் யோசனையின்றி குறுக்கே பாய்வார்களென்பதை யெதிர்பார்த்தே வண்டியையோட்ட வேண்டும். இக்கடமையில் தவறினால் சாரதியே குற்றத்துக்கேதுவாகுவார். ஆகையால் பாடசாலைக்கணிமையிலும் மற்றும் பாலகர்கள் கூட்டமாயிருக்குமிடங்களிலும் பிரத்தியேக அவதானமிருக்க வேண்டும்.

### பாலரை வசீகரிக்கும் பொருள்கள் (Allurements)

பாலரை வசீகரிக்கக்கூடிய பொருள்களை வைத்திருப்பவர்களும் அவதானிக்க வேண்டிய கடமைகள் உண்டு. சக்கரங்கள் விநோத யந்திரங்கள் பிள்ளைகளை ஆகர்ஷண சக்தியால் இழுக்கக்கூடிய பொருள்கள். இவைகளைப் பொறிகள் (Traps) அல்லது வசீகரிக்கும் பொருள்கள் (Allurements) என்று சொல்லப்படும். இப்பொருள்களை வைத்திருப்பவர்கள் இப்பொருள்களுக்குக் கிட்டப் பாலர்கள் வரவொட்டாதபடி தடுக்கும் கடமையுள்ளோர். ஒரு புகையிரத ஸ்தானத்தில் விநோதமான சுழலும் மேசை (Turn Table)யிருந்தது! அதில் பிள்ளைகளேறி விளையாடி வேடிக்கை பார்ப்பதைச் சுற்றும் புகையிரத நிலைய அதிகாரிகள் அவ்வியந்திரத்தைப் பாலர்கள் அணுகாமலிருப்பதற்கேற்ற நடவடிக்கைகள் எடுக்கவில்லை. ஒரு பையன் அதில் விளையாடுகையில் அவ்வியந்திரத்தால் தெரிப்பட்டுக் காயமுற்றான். அதையிட்டு வழக்கு வைத்தபோது புகையிரத ஸ்தாபனத்தார் நட்டஈடு கொடுக்க வேண்டுமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. பிள்ளைகள் ஏறி விளையாடக் கூடாதென எச்சரிக்கை போடப்பட்டிருந்த போதிலும் அவர்கள் அக்குற்றத்துக்கு ஆளாகினார்கள். முதிர்ந்தவர்களுக்கு எச்சரிக்கை பண்ணினால் போதுமானது; ஆனால் பாலியரைப் பொறுத்தவரை அவ்வெச்சரிக்கையில் யாது பயனுமில்லை; ஏனெனில் பாலியர் பாலியர்தானே. அவர்களுக்கு முன் வசீகரணப் பொருளை வைத்து விட்டு அதைத் தொடாதீர்களென்றால் அது தகு போதிய செயலோ! இன்னொரு வழக்கில் சாமானேற்றும் வாகனத்திலிருந்து (Lorry) ஒரு சீனி மூடையிலிருந்து சீனி கொட்டியபடியே வாகனம் தெருவழியே போய்க் கொண்டிருக்கும் பொழுது சீனியை எடுப்பதற்காக ஓடிச்சென்ற பையன் விபத்துக்குள்ளானான். அச்சூழ்நிலையிலும் வாகனக்காரர் நட்டம் கொடுக்க நேரிட்டது. ஆகையால் பாலியர்களுக்கு [illegible] பண்ணக்கூடிய பொருள்களை பகிரங்கமான [illegible] களும் தங்கள் பிரத்தியேக இடங்களில் வைத்து அதை யணுகாமல் காவல் செய்யத் தவறினவர்களும் தங்கள் கடமையை அசட்டை பண்ணி உபேட்சையெனும் நட்ட ஈட்டுக் குற்றத்துக்கு ஆளாகிறார்களென்பதை அவதானிக்க வேண்டும்.

### பொருள் கொள்வோருக்குக் கடமை (Duty towards consumers)

ஒரு பொருளை விநியோகிப்பவர் அல்லது விற்பவர் அப்பொருள்களை வாங்குபவருக்குக் கடமைப்பட்டவராவர்; அதாவது ஒரு பொருள் அபாயகரமான பொருளாயிருந்தால் அதை விற்பவர் அல்லது விநியோகிப்பவர் அப்பொருளால் விளையக்கூடிய அபாயகரத்தை முன்னறிவித்தல் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளவராவார். அப்படி முன்னறிக்கை கொடாமல் அப்பொருளால் ஏதும் நட்டம் விளைந்தால் அந்நட்டத்தை அவர் கொடுக்க வேண்டும். இவ்விஷயத்தில்தான் உண்மையில் அசட்டையாக இருக்கவில்லை என்று அவர் சொல்வதற்கிடமில்லை. ஏனெனில் ஒரு பொருளை உற்பத்தி செய்பவர் அல்லது விநியோகிப்பவர் அப்பொருளால் விளையக்கூடிய அபாய நிலையை யறிந்திருக்க வேண்டுமென்பதே சட்டத்தின் அனுமானம் (Presumption). ஒரு பிரதான வழக்கில் ஒரு தாது பானத்தை (Mineral Waters) உற்பத்தி செய்பவர் அப்பானத்தை திறமுள்ள புட்டியில் தயாரித்திருந்தார். அவரின் உற்பத்திசாலையில் உத்தம கவனம் செலுத்தப்பட்டிருந்தும் அப்புட்டிக்குள் நத்தையொன்று (Snail) எது காரணம் பற்றியோ அகப்பட்டுச் செத்திருந்தது. அப்பானத்தை வாங்கியவர் தன் காதலிக்கு ஊற்றிக் கொடுக்கையில் அந்த நத்தை ஒடுக்கும் பாத்திரத்தில் விழுந்தது. அப்பானத்தை யருந்திய பெண் ஏக்கத்தினாலும் அசுத்தமான பானத்தைப் பட்கொண்ட காரணத்தினாலும் நோய்வாய்ப் பட்டு நட்டத்துக்குள்ளாகினாள். அவள் உற்பத்தியாளரின் மேல் நட்ட ஈடு வழக்கு வைத்த பொழுது நீதிமன்றம் பொருள்களைப் பாவிப்பவர்களை அப்பொருள்களால் நட்டம் வராமல் காக்கும் கடமை உற்பத்தியாளருக்குண்டென்றும் அக்கடமையில் அவர்கள் தவறியபடியால் நட்ட ஈடு கொடுக்க வேண்டுமெனவும் தீர்த்தது. ஆனால் பொருளின் அபாயத் [illegible]

பொருளின் அபாய நிலை வெளித் தோற்றத்துக்குத் தெரியக்கூடிய முறையிலிருந்தாலும் அப்பொருளை உற்பத்தி செய்தவர் அல்லது விநியோகித்தவர் நட்டஈடு கொடுக்கத் தேவையில்லை. ஆனால் அப்பொருளைப் பாவிப்பவருக்கு அப்பொருளின் அபாயத்தையறிய வல்லமையில்லாவிடில் அப் பொருளை அப்பேர்ப்பட்டவர்களுக்கு விற்கக் கூடாது. உதாரணமாக ஒருவர் ஒரு பன்னிரண்டு வயதுப் பிள்ளைக்கு ஒருகைத் துப்பாக்கியையும் தோட்டாக்களையும் விற்றார். அப்பிள்ளை அத்துப்பாக்கியைப் பாவிக்கையில் தன் சிநேகிதனைக் காயப்படுத்தினான். சிநேகிதன் சார்பில் துப்பாக்கி விற்றவர் மேல் நட்ட ஈடு வழக்குத் தொடர்ந்த பொழுது நீதிமன்றம் அவரிடமிருந்து நேர்ந்த நட்டத்தை வசூல் பண்ண இடமளித்தது. இதே சூழ்நிலையில் அம்பு, வில்லு விற்றவர் மேல் வழக்கு வைத்தற்கு இடம் கொடுக்கவில்லை. பன்னிரண்டு வயதுப் பிள்ளையின் கையில் அம்பு, வில்லு துப்பாக்கியைப்போல அவ்வளவு அபாயகரமான பொருளல்லவென்னும் காரணத்தையொட்டியே இத் தீர்ப்புக் கொடுக்கப்பட்டது. இங்கு அவதானிக்க வேண்டிய விஷயமொன்றுண்டு. பொருள் விநியோகிப்பவர் அல்லது விற்பவர் இடையில் சோதனை செய்யக் கூடிய முறையில் பொருள் தயார் பண்ணப்பட்டிருந்தால் அப்பொருளினால் வரும் விபத்துக்கு அப்பொருளை உற்பத்தி செய்தவர் பாத்திரவாளியல்லர். ஏனெனில் விற்பவர் இப்பொருளின் அபாய நிலையையறிந்து போதிய நடவடிக்கையை எடுத்திருக்கலாம்.

இனி நியாயமான கவனம் (Reasonable care) என்பது யாதுவென ஆராய்வோம். இது சாதாரண தன்மையில் அக்கறையுள்ள மனிதர் ஒரு சூழ்நிலையில் எவ்வளவு கவனம் செலுத்துவாரோ அதையே நியாயமான கவனமெனக் கொள்ளப்படும். ஆகையால் அவ்விஷயம் சூழ்நிலையைப் பொறுத்தேயுள்ளது. உதாரணமாகப் பழங்காலத்தில் எங்கள் சமுதாயங்களில் நாவிதனே (Barber) சிறு சத்திர வைத்தியம் (Surgery) செய்யும் வழக்கமுண்டு. தற்காலத்தில் மேல் நாட்டு வைத்திய முறையைத் தழுவி எத்தனையோ சம்பிரதாய முறையுடன்தான் ரண வைத்தியர் (Surgeon) சத்திர வைத்தியம் செய்வார். ஆகையால் இருசாராரிடமும் ஒரேவித கவனத்தை யெதிர்பார்க்க முடியாது. ஏனெனில் ரண வைத்தியர் தன் கருவிகளையெல்லாம் கொதிநீரில் கழுவியே சத்திர வைத்தியம் செய்வதற்குக் கடமைப் பட்டுள்ளார். ஆனால் நாவிதனோ தன் க்ஷவரம் செய்யும் கத்தியால் தான் அந்நிலையிலே சத்திர வைத்தியம் செய்வதுண்டு. இதனால் தொழில் சமர்த்தர்கள் (Professional experts) ஒரு மிகுந்த உன்னத கவனம் செலுத்த வேண்டுமென்பதல்ல. அவர்களும் தங்கள் அறிவு ஆற்றலுக்கு தக்கபடி (அதாவது அவர்களின்

(13-ம் பக்கம் பார்க்க)

# குருநகரில் வீரமாமுனிவர் விழா

## தமிழ் அகராதியை அமைத்த முதல்வர்

"ஓர் இத்தாலியர் தமிழகம் வந்து தமிழைக் கற்று அதில் பாண்டித்தியம் பெற்றதோடல்லாமல் சமய, சமூக, இலக்கண, இலக்கிய நூல்களைத் தமிழில் இயற்றிப் பிரபலம் அடைந்திருந்தார் என்றால் அவர் பெருமை சொல்லும் தரமன்று" இவ்வாறு யாழ்ப்பாணத்தில் குருநகர் கலைக் கழகத்தின் ஆதரவில் சென்ற ஞாயிறு நாள் அர்ச். சந்தியோகுமையோர் பெண் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற "வீரமாமுனிவர் விழா"வுக்குத் தலைமை தாங்கிப் பேசிய யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி திரு பி. ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டார்.

வீரமாமுனிவரின் விழுமிய தொண்டின் அருமை பெருமைகளைப் பற்றித் தொடர்ந்து பேசிய பேச்சாளர்கள் விரிவாக எடுத்துரைத்தனர். குறிப்பாக வண. பிதா எச். எஸ். டேவிட், வண. பிதா என். ஏ. மைக்கல் சாமி, ஓ. எம். ஐ., வித்துவான் கே. எம். யோசேப்பு, பண்டிதர் ஜி. ஜே. ஆசிநாதன், ஆசிரியர்கள் எம். எஸ். அந்தோனிப்பிள்ளை, எம். விக்டர், ஆசிரியை பிரான்சிஸ்கா ஞானப்பிரகாசம் ஆகியோர் மிகச் சிறப்பான முறையில் வீரமாமுனிவரின் சீரிய சரித்திரத்தையும், சமய, சமூக, இலக்கண, இலக்கியத் துறைகளில் அவர் செய்த சேவைகளைப்பற்றியும் கருத்துப் பொழிவாற்றினர்.

### தேம்பாவணியை யாத்தவர்

இன்று தமிழ் மொழியில் காணப்படும் 'ஏ'கார 'ஓ'கார ஒலிகளில் வித்தியாசத்தை ஏற்படுத்திய பெருமையும், முதல் தமிழ் அகராதி எழுதிய பாராட்டும், கம்பனுக்குப் பின் தேம்பாவணி என்னும் காப்பியம் எழுதிய புகழ்ச்சியும், திருக்குறளை லத்தினில் மொழிபெயர்த்த பெருமையும் வீரமாமுனிவரையே சார்ந்ததெனக் கூறிப் பேச்சாளர்கள் அவருக்குப் புகழ்மாலை சூட்டினர்.

செல்வி மேரி தேவ ஜோசப்புவின் இன்னிசை விருந்தும், குருநகர் நாடக மன்றத்தாரும், சிறுவர்களும் நடித்த நாடகங்களும் சபையோரை மேலும் மகிழ்வித்து விழாவைச் சிறப்பித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்த வீட்டுப் பெண் என்ற படத்தில் ஒரு காட்சி.

# பத்திரிகைச் சுதந்திரத்தைப்....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உறுதியளித்திருக்கிறது என்றே நம்புகிறேன். பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பெடுப்பதற்கெதிரான ஏனைய நியாயங்களை நான் இப்பொழுது கூற முற்படவில்லை—ஒன்றைத் தவிர! அரசாங்கம் பாடசாலைகளை எடுப்பதானால், அரசாங்கம் நியமிக்கும் ஒரு கட்டுப்பாட்டதிகாரத்தின்கீழ் எங்கள் பாடசாலைகளும் எங்கள் ஆசிரியர்களும் எங்கள் குழந்தைகளும் ராணுவக் கெடுபிடிக்கு ஆளாகிவிடக் கூடாது என்பதே என் விருப்பம். இந்தக் கெடுபிடியினால் ஏற்படும் தீமை போக, கல்வித்தரம் நிலையுயர்வதற்குப் பதிலாக, தரம் வீழ்ச்சியடைந்துவிடும் என்ற ஆபத்துமிருக்கிறது. பாடசாலைக் குழந்தைகளுக்கு கல்வி வசதிகள் போதியளவில் இல்லாதிருக்கும் இன்றைய நிலைமையில், கல்வித்தரம் வீழ்ச்சியடைவதினால் பெரு நஷ்டம் ஏற்படும். தனியொடை பெறும் பாடசாலைகள் இந்நாட்டிற்குப் பெரிய சேவை செய்து வருகின்றன. இவற்றைப் பொறுப்பேற்பதில் கவனஞ் செலுத்துவதற்குப் பதிலாக, கல்வி வசதிகள் அற்றிருக்கும் பிள்ளைகளுக்கு இந்த வசதிகளைத் தேடிக் கொடுப்பதில் அரசாங்கம் கவனஞ் செலுத்துவதே உகந்தது.

## பத்திரிகைகள்

இறுதியாகப் பத்திரிகைகளை அரசாங்கம் பொறுப்பேற்பது பற்றிக் கூறி முடிக்கிறேன். காலித் தொகுதிப் பிரதிநிதி (இரு தனநாயகா) பத்திரிகைகளினுல் பெரிதும் தாக்குண்டவர்களில் தானும் ஒருவர் என்று கூறியிருந்தார். எனது கட்சியைப் பொறுத்தவரையிலும் இதே கூற்றையே கூற வேண்டியவர்களாயிருக்கிறோம். எங்கள் கட்சி, பத்திரிகைகளின் அபிமானக் குழந்தையாக இருந்ததில்லை. அரசாங்கம் பொறுப்பேற்க விரும்பும் இரண்டு பத்திரிகைகளும் எம்மைத் தாக்கின; எமக்கெதிராக விஷமத்தனமாகப் பிரசாரஞ் செய்தன; எம்மை மதூஷித்து எழுதி வந்தன. இருந்தும் அரசாங்கம் பொறுப்பேற்கும் போது, இந்தப் பத்திரிகைகளுக்கு என்ன செய்தால் தகும் என்பதல்ல பிரச்சினை. எமது தாய் நாட்டிற்கு நாம் என்ன செய்வது தகும் என்ற பரந்த அடிப்படையைத் தான் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். யதேச்சாதிகாரச் சூழ்நிலையில் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு பத்திரிகை தான் எமது நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததா?

## பயங்கரப்பாதை

பத்திரிகைச் சுதந்திரத்துடன் நெருங்கிய தொடர்புடையதே தனி நபர் சுதந்திரமும். பத்திரிகைச் சுதந்திரம் பறிபடும்போது தனி நபர் சுதந்திரத்தைப் பாதுகாப்பதென்பதெல்லாம் பகற்கனவு. இந்தக் கோணத்தில் நோக்கும் பொழுது, பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வைத்தோமானால், ஒரு பயங்கரப் பாதையில் அடி எடுத்து வைக்கிறோம் என்பது தான் நிலைமை. பத்திரிகைச் சுதந்திரமென்றால் தான் என்ன?" சரியாகவோ, அல்லது தவறாகத்தானும் எங்களேயும், அரசாங்கத்தையும் வெறுத்தக் கட்சியைத்தானும் தாக்குவதற்குரிய சுதந்திரந்தான் பத்திரிகைச் சுதந்திரமன்றோ!

## ஜனநாயகவாதியின் கடமை

ஒரு ஜனநாயக நாட்டில் சுதந்திரம் என்றால் இதுவே தான் என்றே அரசாங்கம் கருத வேண்டும் எங்கள் கட்சியும், குறிப்பாக நானும் இதய பூர்வமான அபிப்பிராயம் கூற விரும்புகிறோம். அதாவது இம்மாசவைப் பிரசங்கத்தில் குறிப்பிட்டதைச் செய்யாது விடுவதற்கு இன்றும் காலந் தாழ்ந்து விடவில்லை. பத்திரிகைகளின் நடத்தை எதுவாயிருந்திருந்தபோதும், ஒரு ஜனநாயக அமைப்பில் எதிரிகளுடன் நாம் நடந்து கொள்ள வேண்டிய வகை இதுவல்ல. காரமான வார்த்தைகளை நான் பிரயோகிக்காது தவிர்க்கும் முறையிலேயே இப்படிக் கூறுகிறேன். ஜனநாயக வாழ்வில் அநுமதிக்கப்பட்ட வழிகளைப் பின்பற்ற வேண்டியது எமக்கு நாமே செய்ய வேண்டிய கடன். யதேச்சாதிகாரமற்ற ஒரு நாட்டில், பத்திரிகைகளை அரசாங்கம் எடுத்து விடுமானால் தனி நபர்கள் அபிப்பிராயம் தெரிவிக்கும் சாதனங்கள் எதுவுமே இல்லாது போய் விடும்.


## எதிர்ப்பல்ல: ஒத்துழைப்பு

தேர்தலில் வெற்றிபெற்ற புதுமையில் அத்தேர்தல் வெற்றி நிரந்தரமானதே என்று கருதுவது மனித குறைபாடுகளில் ஒன்று. அடுத்த 5 வருடத்தில் அல்லது 5 வருடத்தில் என்ன நடக்குமென்பதை ஒருவரால் சொல்ல இயலாது. இன்றைய அரசாங்கம் பத்திரிகைகளைப் பொறுப்பேற்றால், அடுத்து வரக்கூடிய இவர்கள் எதிரிகள் கையில் பத்திரிகை சிக்குண்டிருக்கும், அடுத்த தேர்தலின் பின். நேற்றுப் பேசிய காலிப் பிரதிநிதி குற்றங்காணும் நோக்கில் தான் அரசாங்கத்தின் செயலை எதிர்த்துப் பேசவில்லை என்று கூறினார். நானும் அதையே கூற விரும்புகிறேன். அரசாங்கத்தில் குறை காணுவதற்குப் பதிலாக, அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் மனோபாவத்திலேயே இவற்றைக் கூறுகிறேன். எனவே, பத்திரிகை, பாடசாலை விஷயங்கள் விபரமாக ஆராயப்படும் பொழுது அரசாங்கம் இப்பொழுது மனதில் கொண்டிருக்கும் வழிவகைகளில் இவற்றை பொறுப்பேற்காது என்றே நம்புகிறோம்.

## கூர்மையுள்ள வாக்காளர்

எதுவாயிருந்தாலும் சரி, பத்திரிகைகள் நடாத்தி வந்த பிரசாரத்திற் கூடாகவுமே அரசாங்கம் தேர்தலில் பிரமிக்கத்தக்க வெற்றியீட்ட முடிந்திருக்கிறது. தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையிலும் இதுவே தான் உண்மை. பத்திரிகைகள் எந்தவிதத்தில் பிரசாரஞ் செய்தும், தாம் எப்படி வாக்களிக்க வேண்டுமென்பதை வாக்காளர் கூர்மையுடன் அறிந்திருந்தார்கள். எனவே அரசாங்கம் எடுக்கப்போகும் பத்திரிகைகளுக்கு நேரக்கூடிய நிலைகளும் பார்க்க, நாட்டுக்கு அதிக தீங்கு விளைவிக்கக் கூடியதான ஒரு நடவடிக்கையை ஆதரிக்குமளவிற்கு நாம் பத்திரிகைகளைக் கண்டு பயப்படவில்லை.

இந்தக் குறிப்புரைகளுடன் எனது பெயரிலும் ஏனைய எனது சகாக்களு[illegible] இந்தப் [illegible] சமர்ப்பிக்கிறேன்.

சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு

கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப் பட்டது. அங்கத்தவர் களின் பொறுப்பு வரை யறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு

ப கு 926


# சமூக ஒற்றுமை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மொழியிலும் இருக்க வேண்டும். எல்லாப் பகுதிகளிலும் தமிழும் சிங்களமும் சமமாக இடம் பெறவேண்டும் என்பவைதாம். எமது நாட்டில் ஏற்படுத்தப்படும் சட்டங்கள் முழுவதும் தமிழிலும் சிங்களத்திலும் இருக்க வேண்டும். அதே போன்று அரசினரால் வெளியிடப்படும் வெளியீடுகள் அனைத்தும் இரு மொழிகளிலும் இருக்க வேண்டும் எனக் கேட்கிறோம்.

பாராளுமன்ற நிகழ்ச்சிகள் 1961-ம் ஆண்டுக்குப் பின் ஒரு வேளை சிங்களத்திலே நடக்க ஆரம்பமாகும் பொழுது இந்நாட்டின் பிரதம சட்டசபையாக மதிக்கப்படும் இச் சபையில் எமது பாஷைக்கும் சம உரிமை இருக்க வேண்டும். நிகழ்ச்சி நிரல்கள், மசோதாக்கள், பிரேரணைகள், நிரந்தர விதிகள் ஆகியவைகள் தமிழிலும் அளிக்கப்படல் வேண்டும்.

## பிரத்தியட்சமாக காணக்கூடியது

ஆகவே, உபசபாநாயகரவர்களே, நாம் மீண்டும் வற்புறுத்திக் கூற வேண்டிய தொன்றுளது. கடந்த கால நிகழ்ச்சிகள் எமக்குப் பல அனுபவங்களைத் தந்திருக்கின்றன. பல வருடங்களாக இந்நாட்டில் இருந்த அந்நியோன்னியம் பாதிக்கப்பட்டு, எமது பொருளாதாரம் பாதிக்கப்பட்டு, இன்று மிகவும் கடினமான நிலையில் இருந்துகொண்டிருக்கின்றோம். இந்நாட்டில் வாழும் பல சாதி மக்களுக்கிடையே சமூக ஒற்றுமை ஏற்படாதிருந்தால் எவ்வித பொருளாதாரத் திட்டத்தையும் நாங்கள் சிறப்பாக நிறைவேற்றி வைக்க முடியாதென்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். எத்தனையோ தொழிற்சாலைகள், அபிவிருத்தித் திட்டங்கள், பொருளாதாரத் திட்டங்கள் ஆகியன வெல்லாம் சமூக ஒற்றுமை குறைந்த காலங்களில் அழிந்தொழிந்து உடைந்து தளர்ந்து போனதை நாங்கள் காணக் கூடியதாக இருக்கின்றது.

## அபாயத்தை தடுக்க வழி

இன்று, இவ்விரு சமூகங்களுக்கிடையே எதிர்காலத்தின் நல்லெண்ணம் நிலவக்கூடிய நிலை ஆரம்பித்திருப்பதைப் பார்க்கும் பொழுது சந்தோஷப்பட வேண்டியிருக்கிறது. இந்நிலை படிப்படியாக வளர்ந்து, இந்நாட்டின் சமூக ஒற்றுமை வேரூன்றி, இரு சமூகங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டுமென்பதே எமது அபிப்பிராயமும் அபிலாசையுமாகும்.

வெலிமடைப் பிரதிநிதி (Mr. Rajaratna) போன்றவர்களுடைய கருத்துக்களை நாங்கள் கேட்கும் பொழுது, அவர்களைப் போன்றோருடைய கருத்துக்கள் இந்நாட்டில் பலரிடையே நிலவுமானால் எமது நாட்டில் ஆபத்து ஏற்படுவதற்கு அதுவோர் அபாயக் குறி என நான் கூறுகிறேன். அப்படிப்பட்ட தீவிரவாதிகளின் பேச்சுக்களை விட்டு, நடுநிலைமை வகித்து, சமாதானமும் சந்தோஷமும் சந்துஷ்டியும் உள்ள இரு சமுதாயங்களை ஏற்படுத்தி, இந்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையும் சமூக ஒற்றுமையையும் சீர்படுத்துவதற்கு அரசாங்கம் வழி[illegible] வேண்டுமெனக் கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

# சலுகைகளுக்..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ம், ஆனால் அவை தனது தலைமையில், தன்மூலமாகத்தான் நடைபெறும் என்னும் கருத்துத் தோன்ற துண்டுப் பிரசுரம் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதுசம்பந்தமாக நான் நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவுடன் நடத்திய உரையாடலின்போது, அவர் திருகோணமலையில் நடக்கும் எதுவித அரசாங்க அலுவலும் திருகோணமலைப் பிரதிநிதியுடன் கலந்தாலோசித்தே நடைபெறும் எனக் கூறினார்.

## கோணேசர் ஆலயம்

மேலும், திருமலைக் கோணேசர் ஆலயம் பற்றிக் குறிப்பிடுகையில், அவ்வாலயத்தைக் கட்டி முடிக்க தேவைப்படும் பணத்தின் விபரம் பற்றி இந்து கலாசார ஆலோசனைச் சபையார் கேட்டுள்ளார்கள். அவர்களும் உதவி தருவார்கள் என்று கருதுகின்றேன். அவர்கள் உதவியுடனும், மற்றும் பொது மக்களின் உதவியுமிருப்பின், வெகு விரைவில் திருப்பணி வேலையை முடித்து, கும்பாபிஷேகம் செய்யலாம்.

மற்றும் ஆசிரியர்கள் பொ. கந்தையா, ச. சின்னத்தம்பி ஆகியோரும் உரையாற்றினார்கள். நிலையச் செயலாளரால் திரு. த. இ. [illegible] ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது.

தொடர்ந்து புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு நடந்தபொழுது, பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:- தலைவர்: திரு க. கு. சோமசுந்தர ஐயர். உப தலைவர்கள்: கோ. செல்லத்தம்பி, மு. இராமநாதன். செயலாளர்: ச. சின்னத்தம்பி ஆசிரியர். பொருளாளர்: வி. சித்திரவேல். மற்றும் ஏழு செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். உபசெயலாளர் திரு கு. பாலசுந்தர சர்மா ஆசிரியர் நன்றி நவிலக் கூட்டம் முடிவுற்றது.

## மதுவருந்தும் அருந்ததியப் பெண்கள்

. பொலிஸாரால் விரட்டப் படுகின்றனர்

கள்ளுத் தவறணைகளுக்குச் செல்லும் அருந்ததியப் பெண்கள் இப்போது பொலிஸாரைக் கண்டதும் நடுக்கம் கொள்கிறார்கள்.

அருந்ததியப் பெண்கள் கள்ளுண்ணும் கொடிய பழக்கத்தால் கையில் உள்ள காசை இழப்பதோடு, சில சமயங்களில் சண்டை சச்சரவுகளை இழுத்துப்போட்டு சமூகத்தில் பூசலையும், அமைதியின்மையையும் பிணக்கையும் ஏற்படுத்துகிறார்கள் என்று கருதிய அகில இலங்கை அருந்ததியர் சங்கம் தமது சமூகப் பெண்களைத் திருத்தப் பொலிஸாரின் உதவியை நாடினர்.

குறிப்பாக அருந்ததியர் சங்கத் தலைவர் திரு மூ. வேலாயுதமும் பொதுச் செயலாளர் திரு. அ. பி. சுந்தரராசனும் பலகாலமாக மேற்கொண்டு வந்த நடவடிக்கை இப்போதுதான் பலனளித்திருக்கிறது. முதற்படியாக கொழும்பிலுள்ள கள்ளுத் தவறணைகளுக்குச் செல்லும் அருந்ததியப் பெண்களைப் பொலீஸார் விரட்டுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாக சஞ்சீவி

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த சம்பவத்தைக் கூறி மனம் விண்டு விண்டு அழுதான்.

துறவிக்கு அமுதாவின் சோகமான நிலையைப் பார்க்க மனம் நெகிழ்ந்தது. அவர் அமுதாவையும் அழைத்துக்கொண்டு சந்திரவர்மன் மயங்கிக் கிடக்கும் இடத்திற்கு வந்தார். ஏதோ ஒரு பச்சிலை மூலிகையைப் பிடுங்கி அதன் சாற்றைப் பிழிந்து அவன் கண்களிலும், காதுகளிலும், மூக்கிலும் ஊற்றினார்.

சில விநாடிகளில் சந்திரவர்மன் தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டவனைப் போன்று எழுந்து, "அமுதா, அமுதா," என்று அமுதாவை அழைத்தான்.

சந்திரவர்மன் ஆசையோடு தன்னை அழைக்கும் போதெல்லாம் அமுதாவின் உள்ளம் புளகாங்கிதமடைந்தது. அவள் ஓடி வந்து அவன் கரத்தைப் பற்றி "உம், எழுந்து வாருங்கள்; ஆச்சிரமத்துக்குப் போவோம்" என்று கூறி அழைத்துக் கொண்டு போனாள்.

●

மகத்துவ மிக்க நாகசஞ்சீவியை அமுதா தனது உள்ளத்தில் உறைந்த அன்பனான சந்திரவர்மனுக்குக் காட்டிக் கொடுத்து விட்டாள்.

அன்று அமுதா ஆற்றங்கரைக்குப்போய் விட்டாள். அந்த நேரமே தருணம் எனக் கண்ட சந்திரவர்மன் குருவிடம் சென்று "சுவாமி, நான் குருகுலவாசம் செய்யத் தங்களிடம் வந்து வருடங்கள் மூன்றாகி விட்டன. இனி நான் எனது நாட்டிற்குப் போய் எனது தந்தை தாயாரைக் காண வேண்டும். அதற்குத் தங்களுடைய அனுமதி வேண்டும்" என்றான்.

துறவிக்கு என்ன தெரியும். அவருக்கு இன்பமும் இல்லை துன்பமும் இல்லை. அவருக்குத் தெரியுமா அமுதா அவனைப் பிரிந்து அரைக் கணமும் வாழ மாட்டாள் என்று? "நல்லது சந்திரவர்மா, நீ நலமே சென்று உனது பெற்றோருடன் வாழ்வாயாக!" என்று வாழ்த்தி அனுப்பினார்.

துறவியிடம் அனுமதி பெற்றதும், சந்திரவர்மன் அங்கு தங்க வில்லை. வேகமாக அவன் காட்டு மார்க்கமாய் தன்னாடு நோக்கி வந்து கொண்டிருந்தான்.

ஆற்றிலிருந்து வந்த அமுதா சந்திரவர்மனைத் தேடினாள். அவளால் எங்குமே காண முடியவில்லை. அவள் இதயம் குமுறிக் கொந்தளிக்க, எக்கம் முகத்தில் பிரதிபலிக்கச் சோகமே உருவாய்த் தனது தந்தையிடம் வந்து "அப்பா, அவர் எங்கே?" என்று தேம்பி அழுது கொண்டே கேட்டாள்.

அதனைப் பார்த்துக் கொண்டிருக்கத் துறவிக்கு மனம் சகிக்க வில்லை. அவர் அவளைப் பார்த்து "அமுதா நீ மனங் கலங்காதே! இவை எல்லாம் வெறும் மாயை. அவன் உனக்கு யார்? நீ அவனுக்கு யார்? சும்மா மனத்தை அலட்டிக் கொள்ளாமல் எழுந்திரு" என்று கூறி அமுதாவைத் தேற்ற முயன்றார்.

அமுதா, துறவியைப் பார்த்து "அப்பா, எனக்கு அவரைப் பிரிந்து இனி இங்கு அரைக் கணமும் உயிர் வாழவே முடியாது" என்று கூறிக் குமுறி அழுதாள்.

"அமுதா, சந்திரவர்மன் மீண்டும் உன்னிடம் இங்கு வருவான். நீ கவலைப் படாதே!" என்றார் துறவி.

"அப்பா, அவர் இனி இங்கு வரவே மாட்டார். அவர் இங்கு வந்தது உங்களிடம் நாகசஞ்சீவியின் மகத்துவத்தை அறிந்து கொள்ள. அதையும் நான் அவருக்குக் காட்டிக் கொடுத்து விட்டேன். நான்தான் ஒரு பேதைப் பெண்ணாகி ஏமாந்துபோனேன் அப்பா."

(15-ம் பக்கம் பார்க்க)

துறவிக்கு அப்பொழுதுதான் சந்திரவர்மன் அமுதாவிடம் கூறாமலே போய் விட்டான் என்பது புலனாயிற்று.

அவர் தன் முன்னிலையில் அழுது வடித்துக் கொண்டிருக்கும் அமுதாவைப் பார்த்து "அமுதா அழாதே! சந்திரவர்மன் தன் சொந்த நாட்டிற்கே போய் விட்டான்" என்றார்.

"அப்பா, அவர் போய் விட்டாரா?"

"ஆமாம் போய்த்தான் விட்டான்."

அமுதா அப்படியே பற்றுக்கோடற்ற கொடி ஒன்று நிலத்தில் துவண்டு விழுவதைப்போல் துவண்டு விழுந்தாள்.

## அகில இலங்கை தமிழாசிரியர் சங்கம்

---

உத்தியோகத்தர் பெயர்கள் சிபார்சு

---

அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் புதுவருடத் தலைவராகத் திரு. கே. வி. செல்வத்துரையை நியமிக்குமாறு வட இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் சிபார்சு செய்திருக்கிறது.

தமிழ் ஆசிரியர்களின் நலவுரிமைகள் பல பாதுகாக்கப்பட வேண்டிய இச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர் சங்கங்களுடன் நீண்ட காலத் தொடர்பும் தகுந்த அனுபவமும் உடையவரான திரு. செல்வத்துரையின் தலைமையை ஆசிரிய சமூகம் மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகத் தெரிகிறது.

செயலாளர் பதவிக்கு திரு. இ. க. தியாகராசாவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

தனதிகாரியாகக் கொழும்பு விவேகானந்த வித்தியாலயத் தலைமை ஆசிரியர் திரு. வ. நடராசாவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

## நட்ட ஈட்டுக்...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

சாதாரண சாகாக்கள் என்ன முறையைத் தழுவிக் கடமையாற்றுகிறார்களோ அதுபோல) தங்கள் கடமைகளையாற்றினாலே போதுமானது.

ஒரு தொழில் நிபுணரெனப் பட்டம் பெற்று அத்தொழிலில் ஈடுபடுபவர் நிபுணத்தனத்தில் சக்திபோதாத (Competent) வராயிருந்தால் அல்லது அபாண்டமான அசட்டை (Gross negligence) யாயிருந்தால் தான் அவரின் தொழிலினால் ஏற்பட்ட நட்டத்துக்குப் பொறுப்பாளியாவார். இதைவிட நிபுணர்கள் அதி உச்ச கவனம் (Highest degree of care) காட்ட வேண்டுமென்னும் கொள்கை சட்டத்தில் இடம் பெறவில்லை. அடுத்த கட்டுரையில் ஒத்தாசை உபேட்சை (Contributory Negligence) யைப் பற்றியும் உபேட்சைக் குற்றத்துக்குள்ள பிரதிவாதங்களைப் பற்றியும் ஆராய்வோம்.

## ஆக்கமும் கேடும்...

(14ம் பக்கத் தொடர்ச்சி)

அதை விடச் சிறந்த ஆக்கம் வேறில்லை. அறத்தை மறந்து விட்டால், அதைவிட உயிர்க்குக் கெடுதியானதும் இல்லை. ஆகவே, அறத்தை மறவாது போற்றி, உயிர்க்கு—உயிர் வாழ்க்கைக்கு—ஆக்கம் தேட வேண்டும்.

—பா ஆறுமுகம்.

---

## பாம்பின் வகைகள்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்காது. இரை என்று சில நேரங்களில் தாக்கவும் கூடும். தாக்கினாலும் அற்ப விஷமுண்டு. தலை நடுக்கம், உண்டாகும். சிகிச்சை செய்தல் வேண்டும்.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

செப்டம்பர் 16-ம் தேதி வெள்ளிமுதல் குதூகலமான ஆரம்பம்
எல்பின்ஸ்டன் [கொழும்பு] றெக்ஸி [வெள்ளவத்தை] வின்சர் [யாழ்ப்பாணம்] வேல்ஸ் [கண்டி] இம்பீரியல் [மட்டக்களப்பு] நெல்சன் [திருகோணமலை]
கிங்ஸ் [பதுளை] அசோகமாலா [நீர்கொழும்பு]
நடிகர் திலகம்
சிவாஜி கணேசன்,
வைஜயந்திமாலா, பத்மினி, பானுமதி,
இ. வி. சரோஜா, நம்பியார், பாலையா
முதலியோர் நடிக்கும்
ராஜபக்தி



அநேக நாட்களாக மிகக் கூடிய செலவில் தயாரிக்கப்பட்ட படம். இவ்வாண்டின் மிகச் சிறந்த தீந்தமிழ்ச் சித்திரம்! பார்க்கத் தவறாதீர்கள்!
இப்பொழுது காண்பிக்கப்படுகிறது! கெயிட்டி (கொட்டாஞ்சேனை)
எம். கே. தியாகராஜ பாகவதர் நடித்த சிந்தாமணி (புத்தம் புதிய கொப்பி)

வெற்றிகரமான 2-வது வாரம்!
சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை) லிபேர்ட்டி (பதுளை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச் சுவைப் படம்.
விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.
அஞ்சலிதேவியின் ... இனிய பாடல்களும் நிறைந்த படம்.
நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்.
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த
அஞ்சலி பிக்சர்ஸ்
அடுத்த வீட்டுப் பெண்
இசை—தயாரிப்பு! ஆதிநாராயணராவ் ★ டைரக்ஷன்! வேதாந்தம் ராகவையா
பின்னணி-
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், ராகவன், எஸ். சி. கிருஷ்ணன், பி. சுசீலா, ஜானகி, டி. வி. இரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "அன்பு மொழியா? அறிவு மொழியா?"

—மதியமுதன்—

அன்புள்ள மலருக்கு! வணக்கம்.

உங்கள் கொஞ்சுந் தமிழ் மடல், இன்னும் என் நெஞ்சிலே தெளிந்தோடுகிறது. தமிழ் என்றால் என் தங்கையின் உருவம். மொழியென்றால் அவள் பேசும் இரு விழிகள். செந்தமிழ்ச் செறிவு என்றால் கொவ்வைச் செவ்வதரம்—குங்குமச் சிமிழ் திறந்து சிந்துமே! எழுதிவிட்டாலோ ஏடெல்லாம் மணங்கமழுமன்றோ! கதைத்தாலோ கன்னித் தமிழ்ச் சுவை சொட்டும்! இத்தனையும் இணைந்த ஒரு தமிழ்த் தங்கை கிடைப்பதென்றால்; தமிழன்னை செய்த தவப் பயன் என்று தான் சொல்ல வேண்டும். உன் போன்று ஆயிரமாயிரத் தங்கைகள் தோன்ற வேண்டும். அப்போதான் தமிழன்னை மனங் குளிரச் சிரிப்பாள்—பூரிப்பாற்றன்னையே மறந்து தாணிமீது புகழ் பாடுவாள்!

மலர்! அன்பு மொழியென்றால் அன்னை மொழி. பெற்றவளின் மடியிலே தவழுகிறதே குழந்தை—அச்செல்வம் பொக்கைவாய் திறந்து—சில முத்துப் பல் அரும்பிட 'அம்மா' என்று அழைக்குமே, ஆம்! அது அன்னை மொழி. குழந்தையின் தாய் மொழி. அம்மா ஆராரோ... ......ப் பாட்டுப் பாடி கண்ணுறங்கு மகனே! என்று தாலாட்டு மொழிகின்றனள அன்னை. அதுவே அன்பு மொழி; தாய் மொழி; எல்லாம். நாம் அன்னை மொழி மேற் கொண்டுள்ள ஆர்வமே மொழிப்பற்று. நாடும் வீடும் நமக்கு எத்தனை அவசியமோ—அதைவிடப் பன்மடங்கு மேலானது—பேண வேண்டியது மொழி. இதை ஒரு சில அந்நிய மோகப் பித்தர்கள் அனேக்க மறுக்கலாம். அது அவர்கள் குற்றமல்ல; அறிவின் குற்றம். மாற்றாந்தாயிடம் மண்டியிட்டு—அன்னை மொழியை அவர்கள் உடமையாக்கிக் கொண்டவர்கள்.

சகோதரி! அறிவு மொழி இன்று ஆங்கிலமாகயிருக்கிறது. அதை நாம் வெறுக்கவில்லை. போற்றுகிறோம். ஆனால், அன்னை மொழிக்குக் கொடுக்க வேண்டிய இடத்தை அறிவு மொழிக்குக் கொடுக்கத் தயாராயில்லை. அதைப்போலத்தான் அடுத்த வீட்டு மொழியான சிங்களமும். ஆட்சியாளரால் சிங்களம் அரியணையேற்றப்படலாம். ஆனால், அது எங்கள் அன்பு மொழியாகி விடமுடியவே முடியாது மலர்!

தங்கையே! மக்களிடையே நாட்டுப் பற்றில்லாவிட்டால் அவர்கள் உயர முடியாது. தாய் மொழியால் அவர்கள் பெறும் அறிவை யோ—பலனையோ அறிவு மொழியாலோ—அடுத்த வீட்டு மொழியாலோ பெற்றுப்பயன் அடைய முடியாது. தமிழன் உயரவேண்டுமானால், தமது கலைச் செல்வங்களைப் பேண வேண்டுமானால் தமிழ் மொழியின் வாயிலாகத்தான் முடியும். அன்னை மொழிவாழ அறிவு மொழி துணை புரியட்டும் மலர்! அம்மா வாழ வளர்ப்புத்தாயும், அடுத்த வீட்டுச் சகோதரியும் துணை தரட்டும். அதற்காக அன்னையினிடத்தை அவர்களுக்குக் கொடுத்து விடமுடியாது

மலர்! மொழிப்பற்றுடன் ஒன்றிய நாட்டுப்பற்றையும் உணர்ந்த கவிஞப் பெருமக்கள் அழகிய தென்னுதமிழ்க் கவிதைகள் மூலம் மொழிப் பற்றை—அன்பு மொழியின் ஆற்றலை வடித்தளித்துள்ளார்கள். அமரகவி, பாரதி, திருவி. க., ஈழத்து நாவாலியூர் சோமசுந்தரப்புலவர் போன்றோரின் கவிதைகளைப் படித்துப்பார் மலர்! தமிழரின் மொழிப்பற்றின்மையைக் கண்டே மேற் கூறிய கவிக் குரிசில்கள் கவிதை புனைந்துள்ளனர் மலர்! மகாத்மா காந்தி கூடச் சுவையான மொழி! பல வளமுள்ள இனிமையான மொழி! என்று தமிழைப் போற்றியுள்ளார் மலர்!

மலர்! 'மொழிப்பற்று' என்ற நூலின் பேராசிரியர் மு. வ. கூறியுள்ள கருத்து இது! படித்துப் பயனடையும். "ஆங்கிலேயனுக்கு அடிமைப்பட்டுத் தமிழர் பட்ட தொல்லைகளைவிட ஆங்கிலத்துக்கு அடிமைப்பட்டுத் தமிழ் இனேருர் படும் தொல்லைகள் மிகுதியாக உள்ளன. இதற்குக் காரணம் ஆங்கிலேயரல்லர்; அறிவு மொழியாகிய ஆங்கிலமுமல்ல; தமிழ்ப் பற்றில்லாத தமிழர்க்குள்ள ஆங்கில மோகமே காரணமாகும்..........." [மொழிப் பற்று இரு வகைக் கேடுகள் 21 பக்கம்]

தங்கையே! அன்பு மொழி மேல் நமக்கு ஆராத ஆர்வம் உண்டாக வேண்டும். கன்னித் தமிழில் இல்லாத கலைச் செல்வங்களைத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். உன்னைப் போன்று மிக இளமையிலே தமிழ்க் குடிகளிடம் மொழிப்பற்று உண்டாக வேண்டும் மலர்! நம்மைப் போன்றவர்களாலேயே அன்பு மொழியைப்பேணி வளர்க்க முடியும். இவ்வளவுடன் நிறுத்தி அடுத்த அஞ்சலில் அடுத்து வருவனவற்றை எழுதுகிறேன். மற்றவை உன் மரகத மடல் கண்டு.

இங்ஙனம்
அன்பு அண்ணு
"அமுதன்"

வள்ளுவர் குறள்: 33.

## ஆக்கமும் கேடும்

"அறத்தின் ஊஉங்கு ஆக்க
மும் இல்லை; அதனை
மறத்தலின் ஊங்கு இல்லை
கேடு"

மக்களின் உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய சிறப்பையும் செல்வத்தையும் தந்து நன்மை பயப்பது அறம். அதனால் அவ்வறமானது, மக்களுயிர்க்கு ஆக்கமாகும். மக்களுயிர்க்கு அறத்தை விடப் பிறிது ஆக்கம் உண்டோ என்று வினவிய வள்ளுவர், அவ்வறத்தை விடப் பிறிது ஆக்கம்—நன்மை— இல்லை என்று இங்கே மீண்டும் அழுத்திச் சொல்கிறார்.

அவர் அதை இங்கே மீண்டும் சொல்வதற்கு ஒரு காரணம் இருக்கிறது. மக்களுயிர்க்கு அறமே நன்மை பயப்பது என்பதைச் சொல்வதுடன், பிறிதொன்றையும் கூறுகின்றார். 'அவ்வறத்தைப் போற்றாது மறந்துவிட்டாலோ, அதைப் போன்ற கெடுதியும் உயிர்க்குப் பிறிதில்லை' என்பது அது.

சிறப்பும் செல்வமும் தரும் அறத்தை மறவாது போற்ற வேண்டும். அஃது, உயிர்க்கு ஆக்கமாகும்;

(13ம் பக்கம் பார்க்க)

## வானம் ஒரு வயல்!

பகல் விடிந்தது,
பைங் கரு வானத்தில்
நகை பவிழ்ந்திட
நன் செய் முழவனும்

கதிர் எழுந்தனன்!
கைகளை விசியே
விதை விதைத்தனன்,
வீடு போய்ச் சேர்ந்தனன்!

பகல் மடிந்தது,
பகலவன் தூவிய
விதை முளைத்தது!
வெள்ளியாய்! விடியுமுன்

அவன் பயிர்களை
அறுவடை செய்தனன்!
இவை தினந் தொறும்
இனிது நடப்பவை!

— மு. பொன்னம்பலம்.

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

## வளர்மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 9.

பெயர்..........................................................

பாடசாலை..........................................................

விலாசம்..........................................................

..........................................................

..........................................................

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

## இயல் அளவு செயல்

அறம், வாழ்க்கைக்கு இன்றியமையாத செல்வமும் சிறப்பும் தருவது; வாழ்க்கை வளத்துக்கும் ஆக்கத்துக்கும் நன்மை பயப்பது. ஆகவே, அதனை மறவாது போற்றிச் செய்ய வேண்டும். அதனை மறத்தல், பேரிழப்பாகும்.

அறத்தின் நன்மை அடைய வேண்டின், அதனை இயன்ற அளவு—ஒல்லும் வகை—செய்ய வேண்டும்; அவரவர் தத்தம் பொருள் நிலைக்கேற்பவும், உடல் நிலைக்கேற்பவும் செய்ய வேண்டும். எக்காரணம் பற்றியும் அதனை இடையிலே [illegible] அதனை ஒழியாது, இடைவிடாது—ஓவாது—செய்யவும் வேண்டும்.

அன்றியும், இயன்றவகையால் இடைவிடாது செய்யும் அறவினையைச் செல்லும் வாயெல்லாம்—செல்லுமிடமெல்லாம்—செய்யவும் வேண்டும். மனத்தினால் நல்லெண்ணம் கொள்வதும், மொழியினால் நற்சொல் சொல்வதும், மெய்யினால் நற்செயல் செய்வதும் அறமே. அங்ஙனம், எவ்வெவற்றினாலெல்லாம் செய்ய முடியுமோ, அவ்வவற்றினாலெல்லாம் செய்ய வேண்டும்.

அறஞ் செய்வதற்குப் பெருநாவலர் கூறும் சுருக்கமான விளக்கவழி இதுவாகும்!

"ஒல்லும் வகையான்
அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம்
செயல்"

## வளர்மதி புதிய மருமக்கள்

3055 சி. க. ஜெயராசு, சண்டிலிப்பாய்.
3056 பாலசரோஜினி ஏரம்பு, திருகோணமலை.
3057 செல்வி ஆர். ஞானம்பிகை, தாவலப்பிட்டி.
3058 வி. கிருஷ்ணதாசன், கண்டி.
3059 செல்வி புவனரஞ்சிதம் பொன்னம்பலம், கனுவாஞ்சிக்குடி.
3060 செல்வி க. மண்டலேஸ்வரி, பருத்தித்துறை.
3061 செல்வி இ. இராசேஸ்வரி, உரும்பிராய் தெற்கு.
3062 மு. மு. யூசுப்பு, பொத்துவில்-1.
3063 செல்வி யோகேஸ்வரி நடராசா, திருகோணமலை.
3064 ம. செனவிரெத்தினம், காத்தான்குடி.
3065 யு. வில்சன், பாஷையூர்.
3066 செல்வி ஞா. றெஜீனு, பாஷையூர்.
3067 வே. கந்தசாமி, பதுளை.
3068 இ. காளிமுத்து, இரத்தினபுரி.
3069 கா. பத்மஜோதி, கல்முனை.
3070 செல்வி செ. கிறிஸ்டீனு, மட்டக்களப்பு.
3071 கா. சிவசுப்ரமணியம், திருகோணமலை.
3072 க. அம்பிகைபாகன், யாழ்ப்பாணம்.
3073 ஏ. முகமது றசீத் கான், அப்புத்தளை.
3074 வை. சீ. எம். யாசின், மருதமுனை.
3075 இ. யோகேந்திரன், மட்டக்களப்பு.
3076 க. அருணானந்தம், பருத்தித்துறை.
3077 க. மாணிக்கவாசகர், மாதகல்.
3078 வே. நடராஜா, பண்டாரவளை.
3079 ச. சர்வானந்தம், யாழ்ப்பாணம்.
3080 செல்வி செல்வராணி அப்பாத்துரை, கொக்குவில் கிழக்கு.
3081 செல்வி நளினி சாந்தமூர்த்தி, வல்வெட்டித்துறை.
3082 பொ. தெய்வேந்திரராஜா, மாவிட்டபுரம்.
3083 எஸ். எம். ஹனிபா, மூதூர்.
3084 வி. கோவிந்தராஜ், பூண்டுலோயா
3085 ச. தெட்சணமூர்த்தி, காரைநகர் வடக்கு.
3086 ச. சந்திரபோஸ், யாழ்ப்பாணம்.
3087 அ. இலட்சுமணன் வக்கியல்ல.
3088 அ. கனகலிங்கம், யாழ்ப்பாணம்.
3089 க. இந்திரகுமார், யாழ்ப்பாணம்.
3090 மா. விஜயசுமூர்த்தி, அக்கரைப்பற்று.
3091 ராஜா முத்துச்சாமி, உடிஸ்பற்று.
3092 இ. பிரதாபன், கனுவாஞ்சிக்குடி.
3093 ஏ. பீ. தியாகராஜா, கொழும்பு-14.
3094 து. ஜெகநாதன், மட்டக்களப்பு.
3095 சோ. கனகசபை, நித்தலூர்.
3096 செல்வி நவமணி சின்னத்துரை, கோண்டாவில்.
3097 ப. தயாளன், புங்குடு தீவு.
3098 க. இரவீந்திரன், பருத்தித்துறை.
3099 சி. பராசக்தி, நெடுந்தீவு கிழக்கு.
3100 செல்வி. ஆ. வள்ளிராணி கரவெட்டி.
3101 பா. தயாளன், கைதடி தெற்கு.
3102 அ. கமலநாதன், கொக்குவில்.
3103 சி. விஜயராசா, தொண்டைமானாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இந்து இளைஞர் மன்றம்

கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்ற செயற்குழுக் கூட்டம் கடந்த 28-8-60-ல் கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் மன்றத் தலைவர் திரு செ. வேலாயுதம் தலைமையில் செல்வன் சே. சுந்தரத்தின் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாயது.

அத்தருணம் மன்ற பரிசோதகர் திரு. க. ச. கணபதிப்பிள்ளை "பகவான் சிவானந்தரின் ஞானவிருந்து" என்னும் பொருள் பற்றியும் திரு. இ. செ. கணபதிப்பிள்ளை "அல்பின் உயர்வு" என்னும் பொருள் பற்றியும், திரு. வ. சே. ஆறுமுகம் "இந்து மதம்" என்னும் பொருள் பற்றியும் இனிய சொற்பெருக்காற்றினர். இலங்கைக்கு சமஷ்டியா, ஒற்றையாட்சியா உகந்தது? என்னும் விவாதம் நடைபெற்றது. இவ் விவாதத்தில் செல்வர்கள் ச. பி. மணியம், சே. செல்வத்துரை, இ. இலைசராசசிங்கம், அ. சிற்றம்பலம் முதலியோர் பங்குபற்றினர்.

பின் சபையோர் குறிப்புரையில் மன்றத்தின் சார்பில் மாணவர் சமய அறிவுப் போட்டிகள், பால் நிலையம், பால் கட்டும் நிலையம்யாவும் நடைபெற வேண்டுமென பரிசோதகர் திரு. க. ச. கணபதிப்பிள்ளை கொண்டு வந்த பிரேரணையை சபையோர் ஏகமனதாக நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

முடிவில் தலைவர் குறிப்புரையுடன் காரியதரிசி ஆ. கந்தையாவின் தமிழ்மொழி வாழ்த்துடன் இனிது முடிவெய்தியது.

—

## யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபா

"கர்நாடக சங்கீதம் எங்கள் பொக்கிஷமாகும். இதனைப் போற்றி வளர்க்க யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபா சென்ற ஒன்பது ஆண்டுகளாகச் செய்து வரும் முயற்சியைப் பாராட்டுகின்றேன். இச் சபாவின் செயற்குழுவில் மிக உற்சாகம் வாய்ந்த நிர்வாகிகள் இருப்பது இதன் வளர்ச்சிக்கு மூலகாரணமாகும். நம் நாட்டிலேயுள்ள கலைஞர்களுக்குப் போதிய சந்தர்ப்பம் கொடுத்து அவர்களை முன்னணிக்குக் கொண்டு வரும் முயற்சி மிகவும் மேலானது. பத்தாவது ஆண்டு விழாவைப் பத்து நாட்களுக்கு நடாத்தி உள்ளூர்க் கலைஞர்கள் அனைவருக்குமிடங்கொடுக்க முயற்சி இப்போதே நடைபெறுவதை அறியும்போது மகிழ்ச்சியடைகின்றேன். கலை எவ்வளவுக்கு வளருகிறதோ அவ்வளவுக்குச் சமூகம் பண்பாடடையும்"

யாழ்ப்பாண ரஸிக ரஞ்சன சபாவின் 9-வது ஆண்டு இசைவிழா அண்மையில் வண்ணை வெங்கடேச வரதராசப் பெருமான் கோவில் முன்றலில் அமைக்கப்பெற்ற பந்தலில் ஐந்து நாட்களாக நடந்தபோது அதன் திறப்பாளராக அமைந்த கல்வி அதிகாரி திரு. எஸ். ஐ. சோமசேகரம் இவ்வாறு கூறினார்.

சபாவின் உபதலைவர் திரு. வி. செல்லத்துரை வரவேற்புரை நிகழ்த்தும்போது, "யாழ்ப்பாணத்தில் ரஸிகர்களின் தொகையும் கலைஞர்களின் தொகையும் கூடிவர இச் சபா செய்த தொண்டே மூலகாரணமாகும்" என்று கூறினார்.

செயலாளர் திரு. பொ. காசிலிங்கம் ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது பத்தாவது ஆண்டு இசை விழாவைப் பத்து நாட்கள் நடாத்தி கலைஞர் பலருக்குச் சந்தர்ப்பங்கொடுப்பதாகவும் அதற்குப் போதிய பணவுதவியும்படியும் வேண்டினார்.

விழாவில் ஐந்து நாட்களும் இசை விருந்தளித்தவர் விவரம் பின் வருமாறு:—

முதலாம் நாள்: மீசாலை துவாரகை இசை நிலைய மாணவிகள், சித்தங்கேணி அன்னலட்சுமி சகோதரிகள், திரு. என். செல்லமுத்து. திரு. எஸ். கோவிந்தராசா, திரு. டி. இராசலிங்கம், திருவாரூர் டி. ஆர். ஆனந்தவல்லி.

இரண்டாம் நாள்: திரு. கே. வர்ணகுலசிங்கம், திரு. கே. ஆர். நடராசன், ஸ்ரீமதி சரஸ்வதி பாக்கியராசா, திரு. ஆர். மூர்த்தி ஐயர் (புல்லாங்குழல்).

மூன்றாம் நாள்: அம்பல் இராமச்சந்திரன் (நாதஸ்வரம்), திரு ஏ. எஸ். நாராயணன், திரு. கே வி. தம்பு, ஸ்ரீமதி ஜானகி சங்கரய்யர், திரு. ராம் குமாரசாமி,

நான்காம் நாள்: பழனிவேல் கோஷ்டியார் (நாதஸ்வரம்), திரு. கே பொன்னையா, திரு எஸ். சோமசுந்தரம், திருமதி இந்திரா-பாலசுப்பிரமணியம், திரு. எஸ். பரம் இல்லைராசா.

ஐந்தாம் நாள்: திரு. கே. மீனாட்சி சுந்தரம், கோஷ்டியார் (நாதஸ்வரம்), செல்வி பொ. கௌரி, செல்வி. நா. மல்லிகா ராணி சகோதரிகள், திரு. என். கே. பத்மநாதன் (நாதஸ்வரம்), செல்வி பிங்கா செல்லப்பா, கும்பகோணம் டி. மைதிலி, திரு. என். சண்முகரத்தினம்.

—

## வடமேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கம்

வடமேல் மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டம் கடந்த 25-8-60-ல் சலாபம் சென் மேரிஸ் தமிழ்ப்பாடசாலை மண்டபத்தில் உபதலைவர் திரு. எம். ஜெருமெல் பெர்னாண்டோ தலைமையில் கூடியது.

காரியதரிசியால் சென்ற கூட்ட அறிக்கையும், தனாதிகாரியால் வரவு செலவு கணக்குகளும் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டன. பின் கீழ்க்காணும் தீர்மானங்களுட்படப் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:—

(1) அந்நியர் ஆட்சிக்காலம் முதல் இன்று வரை கல்வித் தொண்டும், சமயப் பணியும் புரிந்து வரும் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை, அரசாங்கம் தேசிய மயமாக்குவதனால், இலங்கையின் கல்வித் தரமும் மத பக்திகளும் குறைந்து நாட்டைப் பிற்போக்கான நிலைக்கு இட்டுச் செல்லக் கூடுமாதலால் இவ் விஷயத்தைப் பற்றி அரசாங்கம் தீர்க்கமாக ஆலோசனை செய்ய வேண்டுமென இச்சங்கம் வேண்டுகின்றது.

(2) அரசாங்கப் பாடசாலைகள் அனைத்திலும் வருங்காலத்தில் எவ்வித இன மத பாகுபாடும் இன்றிச் சேவை, தகுதி, சம்பளம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர்கட்குப் பதவியுயர்ச்சிகள் வழங்கப்பட வேண்டுமென இச் சங்கம் கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்கின்றது.

(3) அரசினர் பாடசாலைகளில் காலியாயுள்ள இடங்கட்கு எவ்வித இன, மத பாகுபாடுமின்றி "எஸ். எஸ். ஸி" சித்தியடைந்தவர்களை மாகாண வாரியாக நியமனஞ் செய்ய ஏற்பாடு செய்யப்பட இச் சங்கம் கல்வி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகின்றது.

(4) வடமேல் மாகாணத்திலுள்ள அரசினர் தமிழ்ப் பாடசாலைகளில் "எஸ். எஸ். ஸி" சித்தியடைந்த இலங்கைத் தமிழர்க்கு உத்தியோகம் வழங்கப்படுவதில்லையெனப் பல முறைப் பாடுகள் கிடைத்திருப்பதால் எவ்வித பாரபட்சமும் இன்றிச் சகலரையும் சமத்துவமாக நியமனஞ் செய்ய வழி வகுக்கும்படி கல்வி அதிகாரிகளை இச் சங்கம் கேட்டுக் கொள்ளுகின்றது.

(5) அ. இ. த. ஆ. சங்க வருடாந்த மகா நாட்டிற்கு இச் சங்கப் பிரதிநிதிகளாகத் திருவாளர்களான வி. எஸ். பிள்ளை (செயலாளர்) எம். ஜெருமெல் பெர்னாண்டோ (உபதலைவர்) எம். நி. வெம்பட் (தனாதிகாரி) டப்ளியு. என். வியான்டர்லோவ், (உப காரியதரிசி), ஜே. ஏ. குறூஸ் ஆகியோரை அனுப்பிவைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

மற்றும் சில விஷயங்களும் ஆலோசிக்கப்பட்ட பின் தலைவரின் நன்றி கூறுதலுடன் கூட்டம் கலைந்தது.

—

## நாமகள் ஜன சமூக நிலையம்

தம்பலகமம் நாயன்மார் திடல் நாமகள் ஜன சமூக நிலையப் பொதுக் கூட்டம் முன்னாள் தலைவர் திரு. கா. கதிர்காமத் தம்பி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. சென்ற வருட வரவு செலவுக் கணக்குகள் பொது அங்கத்தினர்கள் முன் பரிசிலனை செய்யப்பட்டு சபையினரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்து புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். விபரம் பின் வருமாறு:— திரு. பெ. சின்னையா-தலைவர், திரு சி. சந்தசாமி-உப தலைவர், திரு. கோ. சந்தசாமி-செயலாளர், திரு. வ. நல்லையா-பொருளாளர். திருவாளர்கள் ஏ. சித்திரவேல், ஆ. முகமதுன்மையில், வே. நாகரெத்தினம் போன்றோர்கள் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

—

## அச்சுவேலி தமிழரசு வாலிப முன்னணி

"1960-ம் ஆண்டு மார்கழி மாதம் 31-ம் தேதிக்குப் பின்னர் தனிச் சிங்களம் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் உட்பட நாடு முழுவதும் அமுல் நடத்தப்படும் என்ற சட்டத்தைத் தற்காலிகமாக ஒத்திவைத்து வடக்கு கிழக்கு மாகாணங்களில் தனிச் சிங்களத்தின் ஆதிக்கத்தை அகற்றுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்" என்ற தீர்மானம் இங்கு அண்மையில் நடைபெற்ற அச்சுவேலி தமிழரசு வாலிப முன்னணிக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

கூட்டத்திற்குத் தலைமை வகித்த தமிழரசு வாலிப முன்னணித் தலைவர் திரு. ந. சிவபாதம் பேசும்போது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சிறுபான்மையினரிடம் காட்டிவரும் தாராள மனப்பான்மையைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகவும், தமிழ் மக்கள் சலுகைகள் பெற்று வாழ்வதைவிட உரிமையுடன் வாழ்வதைத்தான் விரும்புகின்றார்களென்றும் தமிழ் மக்கள் இந்த நாட்டில் ... உரிமையுடன் வாழ சமஷ்டி ஆட்சி முறைதான் சிறந்த தொன்றென்றும் அதனைப் பெறுவதற்குத் தமிழ் மக்கள் தயாராக வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசும் பொழுது யாழ்-முனிசிபல் சபை முன்னர் நிறைவேற்றிய காலஞ் சென்ற திரு. கு. வன்னியசிங்கம் ஞாபகார்த்த மண்டபம் கட்டும் தீர்மானத்தை முனிசிபல் சபை வருடக் கணக்காக நிறைவேற்றாமல் இருப்பதைக் கண்டு வருந்துவதாகவும் அதனை நிறைவேற்றத் தற்போதைய மேயர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் சொன்னார்.

காலஞ் சென்ற திரு. கு. வன்னியசிங்கத்திற்குத் தக்கதோர் ஞாபகச் சின்னம் நிறுவுவதற்குத் தமிழரசுக் கட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமென திரு. தா. சிவலிங்கம் பேசும்போது குறிப்பிட்டார்.

—

## பத்தவேனி கிராமாபிவிருத்திச் சங்கம்

பத்தவேனி கிராமாபிவிருத்திச் சங்கக் கூட்டம் கடந்த 28-8-60-ல் இரத்தினேஸ்வரி வித்தியாசாலையில் சங்கத் தலைவர் திரு. மு. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

சங்கக் காரியதரிசி திரு. ந. சிவபாதம் சங்க நடவடிக்கைகளைப் பற்றிப் பேசிய பின் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

"தமிழ் மொழியில் சிம்மாசனப் பிரசங்கத்தை வாசித்து சிங்கள-தமிழர் ஒற்றுமையை உலகுக்கு அறிவுறுத்தியமைக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும், ஸ்ரீமாவோவையும் இக் கிராம முன்னேற்றச் சங்கம் பாராட்டுகின்றது."

## 'காக்காய் பிடிப்பது'

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யாளி வாழும் தலம், தென்றலார் அடிவருடச் செழுங் கரும்பு கண் வளரும் திருவையாறு.

நின்றுலாம் நெடுவிசும்பில்
நெருக்கி வரு
புறமூன்றும் நீர்லாம் சும்பு
சென்றுலாம் படிதொட்ட சிலை
யாளி
மல்யாளி சேரும் கோயில்
குன்றெலாம் குயில் கூவக்
கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசம் மல்கு
தென்றலார் அடிவருடச் செழுங்
கரும்பு
கண்வளரும் திருவை யாறே.

[விசும்பில்-வானத்தில். தொட்ட-தொடுத்த. சிலையாளி-வில்லையுடையவன். பிரசம்-தேர்.]

அடிவருடினால் கண்வளரும் இயல்பைக் கரும்பினிடம் காட்டினார் சம்பந்தர்.

ஒருவர் மனம் மகிழ வேண்டுமானால், அவர் காலைப் பிடித்துக் கையைப் பிடித்துப் பணி செய்வது உலகியல். காலைப் பிடிப்பதும் இளைப்பை ஆற்றி அமைதியைத் தரும் செயல்கள். செல்வர்கள் அவற்றைச் செய்வதற்கு ஏவலாளர்களை வைத்திருப்பார்கள்.

ஏவல் செய்வதையே கால் கை பிடித்தல் என்று சொல்லும் வழக்கம் உண்டு. ஒருவர் மனத்தைக் குளிரப் பண்ண அவர் குறிப்பறிந்து ஏவல் செய்வது ஒரு வழி; அவர் கால் கை பிடிப்பது ஒரு முறை.

கால் கை பிடித்தால் காரியத்தைச் சாதிக்கலாம். அதையே 'காக்கை பிடித்துக் காரியத்தைச் சாதிக்கிறான்' என்று சிதைத்து வழங்குகிறார்கள். இன்று எல்லோரும் அடிக்கடி வழங்கும் "காக்கை பிடிக்கிற" செயல் கால் பிடிப்பதையே குறிக்கிறது. கால் கை சிதைந்து காக்கை ஆகிவிட்டது.

## நாக சஞ்சீவி

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று கூறி விசித்து விசித்து அழுதாள் அமுதா.

"பேதைப் பெண்ணே, நீ எதற்காக என்னையுமறியாமல் அந்த மூலிகையை அவனுக்குக் காட்டிக் கொடுத்தாய்! என்று கூறிச் சினத்தோடு தனது மகளைப் பார்த்து விழித்தார்.

அமுதா தனது கண்களை அகல விழித்தாள். அந்தப் பார்வையில் அச்சக் குறியின் சாயை அப்படியே பிரதிபலித்தது.

ஆனால் துறவிக்கோ கோபம் உச்ச நிலையை அடைந்து விட்டது. அவர் தனது கண்களில் கனல் கக்க அந்த நாகசஞ்சீவி இனிமேல் இந்த உலகத்தில் எவருக்கும் கண்களுக்குத் தெரியாமல் இருக்கக் கடவது என்று கூறிச் சபித்தார்.

அமுதா "ஐயோ" அப்பா ஒருவன் செய்த தவறுக்காக உலக மக்களுக்கே நாகசஞ்சீவி உதவாமற் போவதா"? என்று கூறித் துடித்தாள்.

துறவி சற்று நேரம் பேச்சு மூச்சில்லாமல் மௌனமாய் இருந்தார். அவர் தான் கோபத்தினால் செய்த பெருந்தவறை நினைத்து நினைத்து மனம் கலங்கினார். அவருக்கு அதன் பின் அந்த இடத்திலே இருக்கவும் மனசுக்குப் பிடிக்கவில்லை. அவர் அன்றே தனது மகள் அமுதாவையும் அழைத்துக் கொண்டு இராமேஸ்வரத்தை நோக்கிப் பயணமானார்.

## ஒரு நகரவாசி..

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

நினைத்துத் தூங்கச் செல்கிறான். ஆனால் காலையில் அவன் எழுந்திருக்கும்போது, மறுபடியும் மூக்கின் முன்பாகத்தில் கறுப்புத் தூசி படிந்திருப்பதைக் கண்டு ஆச்சரியப்படுகின்றான். எல்லாம் அந்தச் சிலியாக்கள் செய்த வேலைதான்!

ஒரு செல்பரப்பில் சுமார் ஆறு சிலியாக்கள் உண்டு. ஒவ்வொன்றும் செக்கண்டுக்குப் பன்னிரண்டு முறை அசையும். இப்படிப்பட்ட சிலியாக்கள் கொண்ட ஒரு சிறு பகுதியை வெட்டி, சிலியாக்கள் கீழே இருக்கும்படியாக அதைக் கவிழ்த்து, ஒரு கண்ணாடிப் பாம்பின் மேல் வைத்தால், சிலியாக்களின் அசைவினால் இத் துண்டுச் சதை நகர ஆரம்பித்துவிடும். இச் சக்தியை நமக்குத் தெரிந்த மோட்டாரின் சக்திக்கு விகிதப்படுத்தினால், அம் மோட்டார் மணிக்கு 25,000 மைல் வேகத்தில் ஓடுமாம்—அதாவது நாம் வசிக்கும் இப் பூமியை ஒரு மணிநேரத்தில் சுற்றி வந்து விடும். இது மாத்திரமா! இப்படியே பதினெட்டு நாட்கள் சுற்றி வரக் கூடிய சக்தியும் இதற்கு இருக்கிறதாம். அம்மம்மா, இந்த மூக்கின் உட்பகுதியின் விநோதம் தான் எத்தனை அதிகம்!

—'நல்வழி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிகரமான 3-வது வாரம்!

## கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

## விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீ கிருஷ்ணா [திருகோணமலை] மொடர்ன் [பதுளை]

## விஜிதா [மஸ்கேலியா] தீவொளி [நுவரெலியா]



வாழ்க்கையில் நிகழும் இன்ப துன்பங்களை எப்படி கையாண்டு இன்பமாக வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டும் இலட்சிய திரைக் காவியம்.

சிந்தை குளிரும் சிறந்த கீதங்களும் ஒருங்கே அமையப் பெற்ற அருமையான திரை ஓவியம்.

கண்ணைக் கவரும் காட்சிகளில், எண்ணத்தை ஈர்க்கும் இணையற்ற இன்பச் சித்திரம்.

பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் பாங்கான பைந்தமிழ் திரைவிருந்து.

ஒவ்வொருவரும் பார்த்து மகிழவேண்டிய திரைக் களஞ்சியம்.

ஜெமினி கணேசன்-பி. சரோஜாதேவி
எஸ். வி. சுப்பையா-பி. கண்ணாம்பா
வி. ஆர். ராஜகோபால்-டி. பி. முத்துலெட்சுமி
டி. எஸ். பாலையா-வி. கே. ராமசாமி
கே.மாலதி, ஜி.சகுந்தலா, டி.எஸ்.முத்தையா
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பாதேவர்,
மாஸ்டர் முரளி, ஆகியோர் நடித்த





தேவர் பிலிம்சாரின்

# வாழ வைத்த தெய்வம்



இசை: கே.வி.மகாதேவன் கதை-வசனம்: ஆரூர் தாஸ் டைரக்‌ஷன்: எம்.ஏ. திருமுகம் ஸ்டுடியோ: விஜயா-வாஹினி

நடனம் : பத்மினி பிரியதர்சினி—ரீடா ● தயாரிப்பு : சாண்டோ சின்னப்பாதேவர்

பின்னணி : சௌந்திரராஜன்—எஸ். சி. கிருஷ்ணன்—சுசீலா—ராஜேஸ்வரி
ரத்னமாலா—ஜமுனா ராணி.

## 3-வது வாரமாக காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் [கொழும்பு]

தேவ் ஆனந், வைஜயந்திமாலா, பத்மினி, ராகினி, பிரான், ஜொனிவாக்கர் முதலியோர் நடித்த

# அமர் தீப் [ஹிந்தி]

★ இசை: சி. ராமச்சந்திரா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible]
லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 செப். 11-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.